பக்கங்கள்: 20

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | மாசி 02 புதன்கிழமை 14.02.2018 | கதிர் 101

## கேரளக் கஞ்சா வவுனியாவில் நேற்று சிக்கியது



யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்குக் கடத்தப்பட்ட 8

பக்கம் 03

# தீர்வு கிடைக்கும் வரை அரசில் பங்கேற்கோம்

### கூட்டமைப்பின் தலைவர்கள் திடமான முடிவு

யாழ்ப்பாணம், பெப்ரவரி 14

"தமிழ் மக்கள் ஏற்கக் கூடிய - அவர்களது அபிலாஷைகளை நிறைவேற்றக் கூடிய - ஒரு நிரந்தர அரசியல் தீர்வு கிட்டும்வரை தெற்கில் ஆட்சியில் அமரும் எந்த அரசிலும் இடம் பெறுவதில்லை."

- இவ்வாறு நேற்றுத் திடமான தீர்மானம் ஒன்றை மேற்கொண்டுள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

பக்கம் 03

# நல்லாட்சிக்கு விசேட குழு

### ரணில் - மைத்திரி பேச்சில் இணக்கம்





நல்லாட்சி அரசை 2020ஆம் ஆண்டு, அதன் பதவிக் காலம் முடிவடையும்வரை தொடர விசேட குழு ஒன்றை அமைப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால

பக்கம் 03

## ஆட்சியமைக்க வெளியிலிருந்து ஆதரவளிப்போம்

### ஈ.பி.டி.பி. அறிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், பெப் .14

வடக்கில் உள்ள சில உள்ளூராட்சிச் சபைகளில் ஆட்சியமைப்பதில் தொங்கு நிலை ஏற்பட்டுள்ளது. பெரும்பான்மை



பெற்ற கட்சியினர் ஆட்சியமைத்து மக்கள் நலன்சார்

பக்கம் 03

## இரு தேர்தல்களையும் உடனே நடத்துங்கள்!

### கோருகிறார் சமல் ராஜபக்ஷ



கொழும்பு, பெப் .14

எதிர்வரும் ஒரு சில நாள்களிலேயே பொதுத் தேர்தலையும், ஜனாதிபதித் தேர்தலையும் நடத்தவேண்டும் என முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ கோரியுள்ளார்.

அம்பாந்தோட்டையில்

பக்கம் 18

# ஒற்றுமைப்படாவிட்டால் மக்கள் நிச்சயம் தண்டிப்பர்

### செல்வம் எம்.பி. எச்சரிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், பெப். 14

உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கட்சிகள் பிரிந்து நின்றதால், தென்னிலங்கைச் சிங்களக் கட்சிகள் வடக்கு - கிழக்கில் காலூன்றியுள்ளன. இனியாவது நாங்கள் ஒற்றுமைப்படாவிட்டால் எதிர்காலத்தில் மக்கள் எங்களைத் தண்டிப்பார்கள்.

- இவ்வாறு தெரிவித்

பக்கம் 18

## தேர்தலில் மோதியிருந்தாலும் மக்களுக்காக ஒன்றிணைவோம்

### தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு ரெலோ அழைப்பு

(எஸ்.நிதர்ஷன்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு ஆகிய தமிழ்த் தேசியக் கட்சிகள் தேர்தலில் மோதியிருந்தாலும்

பக்கம் 18

## விலகவேண்டும் ரணில்!

### சுதந்திரக் கட்சி விடாப்பிடி



கொழும்பு, பெப். 14

பிரதமர் பதவியில் இருந்து ரணில் விக்கிரமசிங்கவை நீக்காவிடின், கூட்டு அரசில் இருந்து விலகப் போவதாக, சிறிலங்கா சுதந்திரக் கட்சி எச்சரித்துள்ளது.

சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர இது தொடர்பாக

பக்கம் 18

## சபைகளில் முரண்பாடின்றி ஆட்சியமைக்கத் தீர்மானம்

### கூட்டமைப்பின் தலைவர்கள் இணக்கம்

யாழ்ப்பாணம், பெப் .14

வடக்கில் உள்ள உள்ளூராட்சிச் சபைகளில் முரண்பாடுகள் - இடையூறுகள் இல்லாமல் ஆட்சியமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலை

பக்கம் 03

## கட்சி பேதங்களைக் கடந்து ஒன்றித்துச் செயற்படுவோம்

### சுரேஷ் பிரேமச்சந்திரன் அழைப்பு



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், பெப் .14

வடக்கு - கிழக்கு உள்ளூராட்சிச் சபைகளில் பல இடங்களில் தனிப் பெரும்பான்மை

பக்கம் 18

## அடிபணியாது ஐ.தே.க.

### அமைச்சர் மலிக் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 14

பிரதமர் பதவியில் இருந்து ரணில் விக்கிரமசிங்கவை நீக்காவிடின், அரசுக்கான ஆதரவை விலக்கிக் கொள்ளப் போவதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி விடுத்துள்ள சவாலை எதிர்கொள்ள ஐக்கிய தேசியக் கட்சி தயாராக இருப்பதாக அந்தக் கட்சியின் தவிசாளர் அமைச்சர் மலிக் சமரவிக்கிரம தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுச் செய்தியாளர்களிடம் பேசிய

பக்கம் 18

## வெளிநாட்டுத் தூதுவர்கள் மைத்திரியுடன் அவசர பேச்சு

கொழும்பு, பெப். 14

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நிச்சயமற்ற நிலையைத் தணிக்கும் வகையில், இலங்கையில் உள்ள உயர்மட்ட இராஜதந்திரிகள் ஜனாதிபதியைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இலங்கைக்கான அமெ

பக்கம் 03

## காணாமற்போன உறவுகள் எமக்கு மீண்டும் வேண்டும்

### வவுனியாவில் நேற்று கவனவீர்ப்பு




வவுனியா, பெப் .14

சர்வதேசத்தின் வருகையே எமது உறவுகளின் மீள் வருகையை உறுதிப்படுத்தும். காணாமல் ஆக்

பக்கம் 18

### இனி இது ரகசியம் அல்ல!

உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளை அடுத்து இந்தா கவிழுது, அந்தா புரளுது எனப் பேசப்பட்ட நல்லாட்சி அரசு கடைசிக் கட்டத்தில் தப்பிப் பிழைத்திருக்கிறது. இதற்குக் காரணம்

பக்கம் 03

## இணைந்து செயற்பட கூட்டமைப்பு தயார்!

யாழ்ப்பாணம், பெப். 14

புதிய தேர்தல் முறையின் காரணமாக உள்ளூராட்சிச் சபைகளில் எந்தவொரு கட்சியும் தனிப் பெரும்பான்மைபெறுவது கடினமான மாறியுள்ள நிலையில், ஏனைய கட்சிகளுடன் இணைந்து பணியாற்றத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராகவுள்ளது என அதன் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன்

பக்கம் 18

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வன்னியில் பெருவெற்றி!

கொழும்பு, பெப். 14

வன்னியில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி வரலாறு காணாத பெருவெற்றி பெற்றுள்ளது என மஸ்தான் எம்.பி. தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் வன்னி மாவட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வரலாறு காணாத மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ளது.

வன்னி தேர்தல் மாவட்டத்தில் தாமரை மொட்டு பிரிந்து தனியாக போட்டியிட்ட பின்னரும் 24 ஆயிரத்து 275 வாக்குக்களைப் பெற்று 31 ஆசனங்களை சுதந்திரக் கட்சி கைப்பற்றியுள்ளது.

மேலும், இதுவே இந்தப் பகுதியில் முதன் முதலாக ஸ்ரீலங்கா சுதந்திரக்



மஸ்தான் எம்.பி. பெருமிதம்

கட்சி பெறும் அதிக பட்ச ஆசனங்களாகும். வவுனியா மாவட்டத்தில் மாத்திரம் 14 ஆயிரத்து 388 வாக்குளைப் பெற்று இலங்கைத் தமிழரசு கட்சிக்கு அடுத்தபடியான நிலையில் அது உள்ளது.

31 ஆசனங்களில் 27 ஆசனங்கள் சுதந்திர கட்சிக்குரியதாகவும், 4 ஆசனங்கள் கூட்டுச்சேர்ந்து போட்டியிட்ட பா.உதயராசாதலைமையிலானஸ்ரீரெலோ கட்சிக்குரியதாகவும் உள்ளன.

இதன்படி வவுனியா மாவட்டத்தில் வவுனியா நகர சபையில் 3 ஆசனங்களையும், வெங்கல செட்டிகுளம் பிரதேச சபையில் 4 ஆசனங்களையும், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையில் 5 ஆசனங் களையும், வவுனியா வடக்கு பிரதேச சபையில் 2 ஆசனங்களையும், வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபையில் 2 ஆசனங்களையும் கைப்பற்றியுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகரசபையில் 1 ஆசனத்தையும், மன்னார் பிரதேச சபையில் 2 ஆசனங்களையும், மாந்தை மேற்கு பிரதேச சபையில் 3 ஆசனங்களையும், நானாட்டான் மற்றும் முசலி பிரதேச சபைகளில் தலா ஒவ்வொரு ஆசனங்களையும் அது வென்றுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச சபையில் 2 ஆசனங்களையும், மாந்தை கிழக்கு பிரதேச சபையில் 2 ஆசனங்களையும், கரைதுறைப்பற்று பிரதேச சபையில் ஒரு ஆசனத்தையும், மறைதம்பட்டு பிரதேச சபையில் 2 ஆசனங்களையும் அது கைப்பற்றியுள்ளது.

மேலும் வன்னி மாவட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அடைந்திருக்கும் வெற்றி தொடர்பில் ஜனாதிபதியும் தனது பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துள்ளார் என்றும் மஸ்தான் எம்.பி. தெரிவித்துள்ளார்.

# முள்ளிவாய்க்காலில் குண்டுவெடிப்பு!



அச்சத்தில் மக்கள்

முல்லைத்தீவு, செப். 14

முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் கிழக்கு பிரதேசத்தில் நேற்று முன்தினம் காலை RPG வகை குண்டு ஒன்று வெடித்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால்கிழக்கு பகுதியில் பிரான்சிஸ் காந்தி என்பவரது வீட்டுக்கு அருகிலுள்ள காணியில் குப்பைகளுக்கு தீ வைக்கும் போது அதில் இருந்த இந்த குண்டு வெடித்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது .

இந்த குண்டு வெடிப்பால் அருகில் பல வீடுகள் இருந்த போதும் வீடுகளில் சேதம் எதுவும் ஏற்படவில்லை எனவும்யாரும்காயமடையவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

முள்ளிவாய்க்கால் பிரதேச மக்கள் குப்பை சேகரித்து அந்த இடத்தில் அதற்கு தீ வைத்துள்ளனர். சிறிது நேரத்தில் பெரிய சத்தத்துடன் குண்டு வெடித்துள்ளது. எனினும், அருகில் மக்கள் யாரும் இல் லாத நிலையில் உயிரிழப்புக்களோ காயங்களோ ஏற்படவில்லை.

இது குறித்துக் கருத்து தெரிவித்தமக்கள்-

இந்த வெடிப்புச் சம்பவமானது யுத்த காலத்தில் தம்மத்தியில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இறுதி யுத்த காலத்தில் பல்வேறு பாதிப்புக்களையும் இழப்புக்களையும் சந்தித்த நாம் மீண்டும் அச்சத்துக்குள்ளாகியுள்ளோம்.

தம்மை மீள் குடியேற்றம் செய்யும் போது குறித்த பகுதி கண்ணிவெடி அகற்றப்பட்ட பிரதேசமாக அறிவிக்கப்பட்ட போதும் தொடர்ச்சியாக வெடிபொருள்கள் வெடிப்பு, மீட்பு என்று இடம் பெற்ற வண்ணம் உள்ளமி.

குறிப்பாக நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவம் பெரும் அச்சத்தை உண்டுபண்ணியுள்ளது.

எனவே, சம்பந்தப்பட்ட கண்ணி வெடியகற்றும் நிறுவனங்களோ அதிகாரிகளோ விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மக்கள் கோருகின்றனர். (க- 81)

## பருத்தித்துறை சக்கோட்டை பகுதியில் சுற்றுலா காட்சிக்கூடம் திறந்து வைப்பு!





கொழும்பு, செப். 14

பருத்தித்துறைசக்கோட்டை பகுதியில் சுற்றுலாக் காட்சிக் கூடம் ஒன்று நேற்றுமுன் தினம் திறந்துவைக்கப்பட்டது.

உல்லாசப் பயணிகளின் பயன் கருதி யாழ்ப்பாணம் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாரச்சியின் வேண்டுதலுக்கு இணங்க 55 ஆவது படைப் பிரிவின் கட்டளைத் தளபதியின் மேற்பார்வையின் 551 ஆவது படைப் பிரிவின் முழு உதவியுடன் இந்த இடத்தில் சுற்றுலாக் காட்சிக் கூடம் அமைக் கப்பட்டது.

சுற்றுலா வரும் பயணிகளுக்காக யாழ். கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி நேற்றுமுன் தினம் திறந்து வைத்தார்.

இந்த விழாவிற்கு யாழ். கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி, கே.சுகேந்திர, தினேஸ் குமார் சசிசேகரன், எஸ் தயாஎன், ஆர்.உதயன் , பிரதேச மக்கள் மற்றும் இராணுவ உயர் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

# கபே கண்காணிப்பாளரின் மீது தாக்குதல் நடத்தியவர் கைது!



முல்லைத்தீவு, பெப். 14

விசுவமடு மாணிக்கபுரம் பகுதியில் தேர்தல் நாளான 10 ஆம் திகதி தேர்தல் கண்காணிப்பு அமைப்பான கபே அமைப்பின் கண்காணிப்பில்ஈடுபட்டவர்மீதுசுயேச்சை குழு வேட்பாளர் ஒருவர் தாக்குதல் நடத்தியுள்ளார்.

இந்த நிலையில், தாக்குதல் மேற்கொண்டவர் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாணிக்கபுரம் பகுதியைச் சேர்ந்த வெ.சிவகரன், கபே அமைப்பின் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட்டு வந்துள்ளார்.

இவரின் எதிர் வீட்டில் சுயேச்சைக்குழுவில் போட்டியிட்ட சந்திரமேனன் என்ற வேட்பாளரின் வீடு அமைந்துள்ளது. இந்த நிலையில் வேறு கட்சியின் ஆதரவாளர்கள் வீதியில் வெடி கொளுத்திப் போட்டுவிட்டு சென்றுள்ளனர். இதனை ஆத்திரத்தில் கொண்டு சுயேச்சை குழுவின் வேட்பாளராக போட்டியிட்ட சந்திரமோகன் என்பவர் கபேஅமைப்பில்கண்காணிப்பில் ஈடுபட்ட சிவகரன் தான் வெடி கொழுத்திப் போட்டுள்ளார் என முரண்பட்டு இறுதியில் கைகலப்பாக மாறியுள்ளது.

இதன்போது சிவகரன் தலையில் காயமடைந்த நிலையில் புதுக்குடியிருப்பு பிரதேச மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து புதுக்குடியிருப்பு பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்த முறைப்பாட்டிற்கு அமைவாக நேற்று புதுக்குடியிருப்பு பொலிஸார் தாக்குதலை மேற்கொண்டவரை கைது செய்துள்ளனர். (க)

## உதயங்கவை கைது செய்வதற்கு டுபாய் சென்றவர்கள் வெறுங்கையுடன்!

ரஷ்யாவிற்கான முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்கவை கைது செய்யும் நோக்கில் டுபாய் சென்ற அதிகாரிகள் வெறும் கையுடன் நாடு திரும்ப உள்ளனர்.

மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் யசந்த கோதாகொட, நிதி மோசடி விசாரணைப் பிரிவின் பணிப்பாளர் ரவி வைத்தியலங்கார உள்ளிட்ட அதிகாரிகள் டுபாய்க்கு விஜயம் செய்திருந்தனர்.

உதயங்கவை கைது செய்து நாட்டுக்கு அழைத்து வரும் நோக்கில் இந்த அதிகாரிகள் டுபாய் சென்றிருந்தனர். எனினும், உதயங்கவை ஒப்படைப்பதற்கு டுபாய் அதிகாரிகள் விரும்பவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பிரச்சினை ராஜதந்திர முரண்பாட்டு நிலைமை வரையில் தற்பொழுது விரிவடைந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

உதயங்கவை கைது செய்வது குறித்து இலங்கை ஐக்கிய அரபு இராச்சிய வெளிவிவகார அமைச்சர்களுக்கு இடையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரசியல் மாற்றங்களைக் கையாள மஹிந்தவின் தலைமையில் குழு

கொழும்பு, பெப்.14

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

எதிர்கால அரசியல் நிலைமைகளைக் கருத்திற் கொண்டு தீர்மானத்தை மேற்கொள்வதற்காக இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளதாக மஹிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். மஹிந்த அணியில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் தலைவர்களே இந்தக் குழுவில் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதியினதோ, பிரதமரினதோ அல்லது நமது அரசியல் தலவர்களினதோ விவேகமோ அல்லது மேதாவித்தனமோ அல்ல. அப்படி யானால் நல்லாட்சி அரசு கவிழும் கடைசி காட்சி இறுதி நேரத்தில் 'அன்ரிக்ளைமாக்ஸ்' ஆக மாறியது எங்ஙனம்?

எங்களுக்கெல்லாம் நேற்றுத்தான் சிவராத்திரி. நேற்றிரவு முதல் இன்று அதிகாலை வரை தான் விழிப்பு. நித்திரை கொள் ளாமை.

ஆனால் 'நல்லாட்சி அரசு கவிழுகின்றது. மீண்டும் மஹிந்தர் ஆட்சிக் கட்டுக்கு வருவதற்கு வாசல் திறந்துவிடும் வேலையாக நல்லாட்சி அரசைக் குலைக்கும் வேலைகள் மும்முரமாக நகரத் தொடங்கிவிட்டன.' – என்ற செய்தி நேற்று முன் தினம் மாலையில் தீவிரமாகப்பரவத்தொடங்கியதுமே கொழும்பில் உள்ள சில தூதரகங்கள் பரபரப்பாகத் தமது சமரச வேலை களை ஆரம்பித்து விட்டன. சில தூதுவர்களுக்கு நேற்று முன்தினமே சிவராத்திரிதான். நேற்றுப் பகல் வரை பம் பரமாய் அவர்கள் சுழன்றார்கள். ஜனாதிபதி முதல் கொண்டு மூத்த அமைச்சர்கள் வரை பல தரப்பினருடனும் விடாது பேசினர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை வீட்டுக்கு அனுப்பும் திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக அப்போதைய எதிரணியை ஒன்று படுத்திய தூதரகங்கள்தாம், இப்போதும் நல்லாட்சி அரசு பிணக்கின்றி, இணங்கித் தொடர்வதற்கான விடயங்களைக் கையாண்டன.

பணிந்து பேசியும் நிமிர்ந்து முறுகியும் காரியங்கள் கையாளப்பட்டன எனத் தெரிகின்றது.

முரண்டு பிடித்த மைத்திரியும், ரணிலும் சுருண்டு இணங்கிப் போனமைக்குப் பின்புலத்தில் சாம, பேத, தான, தண்ட நடவடிக்கைகள் காரணம் எனக் கொழும்புத் தகவல்கள் கூறுகின்றன.

'நல்லாட்சி அரசு' என்ற திருமண பந்தத்தில் இணைந்து கொண்டவர்கள் தம் எண்ணப்படி, தம்மிஷ்டப்படி, விவகாரத்துப் பெற முடியாது என்பது மணமக்களான ரணிலுக்கும் மைத்திரிக்கும் புரிய வைக்கப்பட்ட திருப்தியில் முதல் நாள் சிவராத்திரி போல முழித்து, கண்விழித்து முன்னெடுத்த பணியை முடித்துக் கொண்டு நேற்று தூக்கத்துக்குப் போனார்கள் மேற்படி ஓரிரு நாடுகளின் தூதுவர்கள்.

-மின்னல்-

## வெளிநாட்டுத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரிக்கத் தூதுவர் அதுல் கொப் மற்றும் இந்தியத் தூதுவர் தரன்ஜித் சந்து ஆகியோர் ஜனாதிபதியைச் சந்தித்துள்ளனர்.

உள்ளூராட்சி தேர்தலில் மஹிந்த தலைமையிலான பொதுஜன பெரமுன வெற்றி பெற்றுள்ள நிலையில், தற்போது நாட்டில் அரசியல் தளம்பல் தோன்றியுள்ளது.

மேலும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க பதவி விலகவேண் டும் என சுதந்திரக் கட்சியினர் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், அமெரிக்க, இந்தியத் தூதுவர்கள் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர். (ஐ)

## நல்லாட்சிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறிசேன – பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் நேற்றிரவு இணங்கியுள்ளனர் எனத் தெரிய வந்தது.

நேற்று இரவு இடம்பெற்ற முக்கிய சந்திப்பில், இந்த இணக்கம் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ கூறினார்.

இந்த விசேட குழு இன்று புதன்கிழமை அமைக்கப்படும் எனவும், அந்தக் குழு நல்லாட்சி அரசை அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு செயற்படுத்தும் பொறிமுறைகள் குறித்து ஆராயும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தக் குழு மூன்று நாள்களுக்குள் தங்கள் பரிந்துரைகளை முன்வைக்கும் எனவும், அதற்கமைவாக நல்லாட்சி அரசின் எதிர்காலப் பயணம் தீர்மானிக்கப்படும் எனவும் அமைச்சர் மனோ கணேசன் கூறினார்.

இது தொடர்பான பேச்சு நேற்று இரவு 8 மணிமுதல் 10 மணிவரை ஜனாதிபதியின் இல்லத்தில் இடம்பெற்றது. இதில் பிரதமர் ரணில் தலைமையில் ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர்கள் பங்கேற்றனர்.

இந்தப் பேச்சின்போது இரு தரப்பில் இருந்தும் காரசாரமான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது.

இந்த சந்திப்பில் கலந்து கொண்ட ஐ.தே.க.வின் முக்கிய அமைச்சர்கள் மற்றும் மூத்த உறுப்பினர்கள் எவரும் ஊடகங்களுக்குத் தகவல் வெளியிட மறுத்துவிட்டனர். சஜித் பிரேமதாஸ மாத்திரமே ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டார்.

ஜனாதிபதியும் பிரதமரும் பேசிய விடயங்கள் எதனையும், சஜித் பிரேமதாஸ ஊடகங்களுக்கு முழுமையாகக் கூறவில்லை. ஆனால் நல்லாட்சி அரசு தொடரும் என்று சஜித் நம்பிக்கை வெளியிட்டார்.

அதே வேளை, அடுத்த இரண்டு ஆண்டுகளும் தொடரவுள்ள நல்லாட்சி அரசில், ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவி வகிப்பார் என்றும், வேறு எவரும் புதிய பிரதமராகப் பதவியேற்க மாட்டார்கள் எனவும் ஐ.தே.க. வட்டாரங்கள் கூறின.

சபாநாயகராகப் பதவி வகிக்கும் ஐ.தே.க.வின் மூத்த உறுப்பினர் கரு ஜயசூரியவை பிரதமராக தெரிவு செய்யவேண்டும் எனக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் அழுத்தம் கொடுத்த போதும், ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் பிரதமராகப் பதவி வகிக்கவேண்டும் என பின்னர் தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் கட்சித் தகவல்கள் கூறின.

தேர்தல் முடிவடைந்த பின்னர் வெளியான முடிவுகளில், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை மையப்படுத்திய பொது ஜன பெரமுன, 239 சபைகளைக் கைப்பற்றி அமோக வெற்றியீட்டியது. இதனால் ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்ற இரு பிரதான கட்சிகளும் 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் இணைந்து நடத்திவரும், நல்லாட்சி அரசுக்குள் குழப்பங்கள் ஏற்பட்டிருந்தன.

இதனையடுத்து இந்திய – அமெரிக்க தூதுவர்கள் ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் நேற்றுப் பேச்சுக்களை நடத்தினர்.

நேற்றுக் காலை முதல் ஐ.தே.க. மற்றும் சு.க. தரப்புக்களும் பல்வேறு சுற்றுப் பேச்சுக்களில் ஈடுபட்டன.

குறிப்பாக, ஐ.தே.க. அமைச்சர்கள் சிலர் பிரதமருடன் பேச்சு நடத்தியிருந்தார்கள். அவர்களையடுத்து கட்சியின் பின்வரிசை பிரமுகர்கள் சிலரும் பிரதமருடன் பேச்சு நடத்தினர்.

ஐ.தே.க. தனித்து ஆட்சியமைக்கவேண்டும், அதற்கு சு.க. சில விட்டுக்கொடுப்புகளைச் செய்யவேண்டும் என்று கோரப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகின.

ஆயினும் இந்தப் பேச்சுகள் மூலமான இறுதி முடிவை எடுப்பதற்காக, பிரதமர் ரணில் விக்ரமசிங்க மற்றும் கட்சியின் சுமார் பத்து அமைச்சர்கள் நேற்று இரவு சுமார் 8 மணியளவில் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

பல சுற்றுப் பேச்சுக்கள் கடந்த இரண்டு நாள்களாக இடம் பெற்றபோதும், நேற்று இரவு இடம்பெற்ற சந்திப்பில் மாத்திரமே நல்லாட்சி அரசைத் தொடர இணக்கம் எட்டப்பட்டதாகக் கூறப்பட்டது.

முன்னதாக,

ஐக்கிய தேசிய முன்னணி தலைமையில் தனித்து ஆட்சி அமைப்பதற்கு முடிவெடுத்தார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. இதனையடுத்துப் புதிய அமைச்சரவை ஒன்றை அமைப்பதற்கும் அவர் தீர்மானித்தார்.

இந்தத் தீர்மானத்தை நேற்று இரவு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு உத்தியோகபூர்வமாகத் தெரியப்படுத்தப்படுத்தவும் திட்டமிடப்பட்டது. இதற்காக ஜனாதிபதியின் இல்லத்துக்குச் சென்றபோதே முடிவுகள் மாற்றப்பட்டு நல்லாட்சியைத் தொடர்வதற்குக் குழு அமைக்கத் தீர்மானிக்கப்பட்டது.

நெருக்கடி நிலை ஏற்பட்டதை அடுத்து ரணில் பிரதமர் பதவியில் இருந்து விலகுகிறார் என்ற சாரப்பட நேற்று அதிகாலை செய்திகள் வெளியாகியிருந்தன. ஆயினும் அவர் பதவியில் இருந்து விலகும் தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை என ஐ.தே.க. வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

ரணிலின் தலைமைத்துவத்தில் தவறுகள் சில இருந்தாலும் அவர் பிரதமர் பதவியிலும், கட்சித் தலைவர் பதவியிலும் தொடரமுடியும் என ஐ.தே.கவின் பின்வரிசை எம்.பிக்கள் நேற்றுக் காலை அவரைச் சந்தித்தபோது கூறியுள்ளனர்.

இது தொடர்பில் உறுதியான தீர்மானம் ஒன்றை எடுப்பதற்காகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஐக்கிய தேசிய முன்னணியின் உயர் மட்டச் சந்திப்பு நேற்று மாலை தொடக்கம் நீண்ட நேரம் இடம் பெற்றது.

இந்தச் சந்திப்பில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் ஐக்கிய தேசிய முன்னணி அரசை அமைக்க வலியுறுத்தினர். அதனை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை ஏற்றுக் கொண்டது.

அந்தத் தீர்மானத்தைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஐக்கிய தேசிய முன்னணியின் அமைச்சர்கள் குழு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உத்தியோகபூர்வ இல்லத்துக்கு நேற்றிரவு சென்று தெரியப்படுத்தவிருந்தது. ஆயினும் அங்கு சென்றவுடன் முடிவுகள் வேறுவிதமாக மாறின என ஐ.தே.மு. தமிழ் அமைச்சர் ஒருவர் நேற்றிரவு தெரிவித்தார். (ஐ)

## சபைகளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்களுடனான கூட்டத்தில் இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலை அடுத்து வடக்கில் உள்ள பல சபைகளில் ஆட்சியமைப்பது தொடர்பில் தொங்குநிலை காணப்படுகின்றது. இதனால் ஆட்சியமைப்பதில் இழுபறிநிலை ஏற்பட்டுள்ளது.

இதனை அடுத்து இது தொடர்பில் இணைக்க நிலை ஒன்றை ஏற்படுத்தும் முயற்சியில் சிவில் அமைப்புகள் ஈடுபட்டுள்ளன.

இதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியவற்றின் தலைவர்களுடன் அந்தத் தரப்புகள் பேச்சு நடத்தியுள்ளன.

இந்த இணக்க முயற்சிகள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்கள் நேற்று யாழ்ப்பாணத்தில் கூடி ஆராய்ந்தனர்.

இதன்படி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியுள்ள உள்ளூராட்சிச் சபைகளில் தவிசாளர்கள், உப தவிசாளர்கள் ஆகியோரை அவர்களே நியமிப்பது என்றும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கைப்பற்றிய உள்ளூராட்சிச் சபைகளில் அவர்களே ஆட்சியமைப்பதற்கு ஒத்துழைப்பது என்றும் நேற்றைய கூட்டத்தில் இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

அத்துடன் தேவையற்ற வகையில் சபைகளில் குழப்பங்களை ஏற்படுத்துவதற்கு இடமளிக்காமல் அனைவரும் ஒற்றுமையாகச் சபைகளைக் கொண்டு நடத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனப் பங்காளிக் கட்சித் தலைவர்கள் இதன் போது வலியுறுத்தினர்.

இந்தக் கூட்டத்தில் தமிழரசுக் கட்சிகளின் தலைவர் மாவை சேனாதிராசா, கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், அந்தக் கட்சியின் செயலாளர் என்.ஶ்ரீகாந்தா, புளொட் தலைவர் த.சித்தார்த்தன், புளொட் உறுப்பினர் ஆர்.ராகவன் ஆகியோர் பங்கேற்றனர். (ஐ)

## தீர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் நேற்றுக் கூடிய கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் இந்தத் தீர்மானத்தை உறுதிபட எடுத்தனர் என்று புளொட் தலைவர் த.சித்தார்த்தன் 'காலைக்கதிருக்கு'த் தெரிவித்தார்.

உள்ளூராட்சித் தேர்தலை அடுத்து கொழும்பில் கூட்டு அரசு ஆட்டம் காணும் நிலை ஏற்பட்டுள்ளது. கூட்டு அரசில் இருந்து சுதந்திரக்கட்சி வெளியேறுவதற்கு முடிவு செய்துள்ளது.

இதனை அடுத்து ஐக்கிய தேசிய முன்னணி தலைமையில் ஆட்சியமைப்பதற்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றார். இதற்காக அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவை நாடியுள்ளனர் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் நேற்று யாழ்ப்பாணத்தில் கூடி ஆராய்ந்தனர்.

இது தொடர்பில் 'காலைக்கதிருக்கு'க் கருத்து வெளியிட்ட புளொட் தலைவர் த.சித்தார்த்தன், தமிழ் மக்கள் ஏற்கக்கூடிய – அவர்களது அபிலாஷைகளை நிறைவு செய்யக்கூடிய – ஒரு நிரந்தர அரசியல் தீர்வு கிடைக்கும் வரை தெற்கில் ஆட்சியில் அமரும் எந்த அரசிலும் இடம்பெறுவதில்லை என்ற முடிவில் கூட்டமைப்பு மிக உறுதியாக – திடமாக உள்ளது. அதில் எந்தவித மாற்றமும் இல்லை.

அரசியல் தீர்வு தொடர்பில் ஆட்சியில் உள்ள அரசுக்கு நாம் தொடர்ச்சியான அழுத்தங்களைக் கொடுப்போம். அத்துடன் அரசியல் கைதிகள் விடுதலை, காணாமற்போனோர் பிரச்சினை ஆகிய உட்பட எமது மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் தொடர்பில் அரசு முன்னெடுக்கும் முயற்சிகளுக்குத் தொடர்ந்து ஆதரவளிப்போம். இன்றைய (நேற்று) கூட்டத்தில் இதனை ஒரு தீர்மானமாக எடுத்திருக்கிறோம். – என்றார். (ஐ)

## ஆட்சியமைக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திட்டங்களை முன்னெடுக்கும் போது நாங்கள் வெளியில் இருந்துகொண்டு ஆதரவை வழங்கத் தயார்.

– இவ்வாறு முன்னாள் அமைச்சரும் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமுமான கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

முடிவடைந்த உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்தத் தேர்தல் முடிவுகள் எங்களுக்குத் திருப்தியைத் தரா விட்டாலும் எமக்கு வாக்களித்த மற்றும் எமது கட்சிக்காக உழைத்த அத்தனை பேருக்கும் நாம் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இந்தத் தேர்தல் முடிவுகளின் பிரகாரம் பெரும்பாலான இடங்களில் யாருக்கும் பெரும்பான்மை இல்லாத தொங்கு நிலையே ஏற்பட்டிருக்கின்றது.

இதனையடுத்து பல தரப்பினர்களும் ஆட்சியமைப்பது தொடர்பில் எம்முடன் பேசியிருக்கின்றனர். ஆனால் அந்தப் பேச்சுக்கள் எவையும் இதுவரை முடிவு நிலைக்கு வரவில்லை. இதனால் தொடர்ந்தும் பேசும் நிலையே இருக்கின்றது.

ஆகையால் உள்ளூராட்சி மன்றங்களில் பெரும்பான்மை பெற்றவர்கள் அங்கு ஆட்சியமைத்து நிர்வாகத்தை நடத்த முயற்சிக்கும்போது – அவர்கள் மக்கள் நலன்சார் திட்டங்களை முன்னெடுக்கையில் அவர்களுக்கு வெளியில் இருந்து ஆதரவை வழங்குவதென நாங்கள் கட்சிப் பொதுச் சபைக் கூட்டத்தில் முடிவெடுத்திருக்கின்றோம். – என்றார். (ஐ-7)

## கேரளக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிலோ கேரளக் கஞ்சா வவுனியா நகரில் வைத்துக் கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேக நபர் ஒருவர் வவுனியா பொலிஸாரல் கைது செய்யப்பட்டார்.

வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் வழிநடத்தலில் பொலிஸ் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போதே இந்தக் கஞ்சாப் பொதி கைப்பற்றப்பட்டது.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குப் பொதி செய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்ட 8 கிலோ கேரளக் கஞ்சாவை வவுனியா நகரில் வைத்துக் கைப்பற்றிய பொலிஸார், அதனை கொண்டு சென்ற கொழும்பை வசிப்பிடமாக் கொண்ட 54 வயதுடைய நபர் ஒருவரையும் கைது செய்தனர். (ஐ-100)

டயானா பிளாஸ்ரிக் மீள்சுழற்சி

அனைத்து வகையான வாகனங்கள், மோட்டார் சைக்கிள் மற்றும் உடைந்த பிளாஸ்ரிக் பொருள்கள் 1, 2, 3 வருட கால உத்தரவாதத்துடன் சிறந்த முறையில் ஒட்டித்தரப்படும்

108, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

T.P: 021 222 8680
077 592 5088

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600


## தெற்கில் நந்தவனத்து ஆண்டிகள்

நந்தவனத்துஆண்டியின் நிலைமைக்குப் போயிருக்கின்றது இந்த நல்லாட்சி அரசு.

கடுவனிச் சித்தர் பாடிய பாடல் இந்த நல்லாட்சி அரசுக்குக் கனகச்சிதமாகப் பொருந்துகின்றது.

*"நந்தவனத்தில் ஓர் ஆண்டி - அவன்*
*நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி*
*கொண்டு வந்தான் ஒரு தோண்டி - மெத்தக்*
*கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி"*

- என்ற மாதிரி ஆகியிருக்கின்றது நல்லாட்சி அரசின் இணக்க அரசியல்.

மனித ஜீவனின் வாழ்க்கைத் தத்துவத்தை கடுவனிச் சித்தர் இந்தப் பாடலில் கூறுகிறார் என்பர். ஆண்டியாக ஒரு மனித ஜீவனையும், குயவனாக இறைவனையும் உவமித்து, நாலாறு மாதங்கள் என்பதை நான்கும் ஆறுமாக பத்து மாதங்கள் வேண்டிப் பெற்ற உடல் எனும் தோண்டி பற்றி அவர் பேசுகிறார் என்பர்.

இங்கு ஆண்டிகளாகிய மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க ஆதியாகிய அரசியல்வாதிகள் குயவனாகிய மக்களிடம் சென்று, ஆட்சியாகிய தோண்டியை வாங்கி வந்து நாலாறு மாதங்களாகிய இரண்டு வருடங்கள் கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைக்கும் காட்சி இங்கு இப்போது கட்டவிழ்கின்றது.

இப்போது என்ன நடந்துவிட்டது என்று அவர்கள் இந்தக் குழப்பு குழப்புகின்றார்கள் என்று பலருக்கும் விளங்கவில்லை.

'மஹிந்த சுனாமி' தாக்கி விட்டது, 'மஹிந்தர் விஸ்வரூபம்' என்றெல்லாம் பத்திரிகைகள் எழுதும். அது வழமை. ஆனால் அதற்காக அரசியல்வாதிகள் - அதுவும் அரசியல் தலைவர்கள் - இலகுவில் உணர்ச்சி வசப்பட்டுக் குழம்பி விடக்கூடாது.

உள்ளாட்சித் தேர்தலில் மக்கள் ஒரு தீர்ப்புக் கூறியிருக்கின்றார்கள் என்பது உண்மை. ஆனால் அதை அளவுக்கு அதிகமாக பிரதிவிம்பப்படுத்திக் கவனத்தில் எடுப்பது நல்லதல்ல.

இப்போது என்ன நடந்துவிட்டது? உள்ளாட்சித் தேர்தலில் எதிர்பார்க்கப்பட்ட முதலாம் இடத்தை ஐ.தே.க. பெறவில்லை என்பது வாஸ்தவம்தான். ஆனால், அதற்காக நல்லாட்சி அரசை மக்கள் நிராகரித்து விட்டார்கள் என்பது என்றோ, அல்லது 2015 ஜனவரி ஜனாதிபதித் தேர்தலில் இருந்து மக்கள் மாறிவிட்டார்கள் என்பது என்றோ அர்த்தம் அல்ல.

தேர்தல் முடிவுகளைச் சரியாக ஆய்வு செய்து பார்ப்பவர்களுக்கு இது நன்கு தெரியும்.

2015 ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்த வீதத்துக்கு குறையாத வீதத்தில் மக்கள் இத்தேர்தலில் வாக்களித்திருக்கின்றார்கள்.

இந்தத் தேர்தலில் மஹிந்த தரப்புக்கு 44 வீத வாக்குகள் கிடைத்திருக்கின்றன என்று சில செய்தி வட்டாரங்கள் முந்திக் கொண்டு தகவல் வெளியிட்டாலும், பல்வேறு இடங்களிலும் சுயேச்சைகள் பெற்ற வாக்குகளையும் கணக்கில் எடுத்தால் அது 40 வீதம்தான். அதாவது மஹிந்தர் தரப்புக்கு மாற்றான வாக்குகள் இன்னும் அறுபது வீதம் வெளியில் உள்ளன.

2015 ஜனாதிபதித் தேர்தலில் 51.28 வீத வாக்குகளை (62 லட்சம் வாக்குகளை) பெற்றவர் மைத்திரிபால. அப்படி இருந்தும் 12 தேர்தல் மாவட்டங்களிலேயே அவரால் வெல்ல முடிந்தது. 47.58 வீத வாக்குகளை (57 லட்சம் வாக்குகளை) பெற்ற மஹிந்தர் அப்போதும் பத்து தேர்தல் மாவட்டங்களில் வென்றிருந்தார்.

இப்போது வந்துள்ள உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள், இந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவுக்கு மாறான பெறுபேறை - தலைகீழான மாற்றம் எதையும் - தரவேயில்லை என்பதுதான் உண்மை.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் நாடு முழுவதிலும் 57 லட்சம் வாக்குகளை எடுத்த மஹிந்தர் தரப்புக்கு, இந்தத் தேர்தலில் 49 லட்சம் வாக்குகளே வீழ்ந்திருக்கின்றன. அவருக்கு எதிர்த்தரப்பில் ஐ.தே.கட்சி, பொதுஜன ஐக்கிய முன்னணி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியன ஒன்று சேர்ந்து 55 லட்சம் வாக்குகளை பெற்றிருக்கின்றன.

ஆக, இதன்படி, இன்று ஒரு ஜனாதிபதித் தேர்தல் மீள நடத்தப்படுமானால் -

அதில் மஹிந்த ராஜபக்ஷ ஒரு தரப்பாகவும், மைத்திரிபால சிறிசேன தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி, சுதந்திரக் கட்சி, ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி ஆகியன எதிர்த் தரப்பாகவும் போட்டியிடுமானாலும் கூட மஹிந்த ராஜபக்ஷவினால் வெல்லமுடியாது. அதனைத்தான் இந்தத் தேர்தல் முடிவுகளின் புள்ளிவிவரங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

வடக்கு, கிழக்கில் அதிக உள்ளூராட்சி சபைகளில் தமிழ்க் கூட்டமைப்பு முதலாவதாக வந்த மாதிரி தென்னிலங்கையிலும் இரு நூறுக்கும் அதிகமான சபைகளில் மஹிந்தரின் பொதுஜன பெரமுனை முதலாவதாக வந்திருக்கின்றது என்பது உண்மைதான்.

ஆனால், வடக்கு, கிழக்கில் கூட்டமைப்பு வாக்குவீத அடிப்படையில் பலமிழந்து சோர்ந்துபோனமை போன்றே தெற்கிலும் மஹிந்தர் அணி - 2015 ஜனாதிபதித் தேர்தலுடன் ஒப்பிடுகையில் - சோர்ந்து பின்னடைவையே கண்டிருக்கின்றது.

ஆனால் அதனை ஒரு பெரிய வெற்றி மாதிரிக் காட்டி - நல்லாட்சி அரசுத் தரப்புக்கு பெரும் பின்னடைவு - தோல்வி - என்று அர்த்தப் படுத்தி, அரசியல் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சிகள் நடக்கின்றன.

புள்ளிவிவரங்களை, புள்ளிவிவரங்களை முன்வைத்தே எதிர்கொண்டு முகம் கொடுப்பதை விடுத்து, தமக்குள் அரசியல் பின்னடைவுக்கு - வீழ்ச்சிக்கு - வழிசெய்யும் விதத்தில் நடந்து கொள்ளும் நல்லாட்சி அரசினர் அரசு தோண்டியைப் போட்டுடைக்கும் நந்தவனத்து ஆண்டிகள்தாம்.!

# அரசியல் குழப்பங்களால் இலங்கையின் பொருளாதாரமும் தள்ளாடும் நிலையில்!

கொழும்பு, பெப். 14

இலங்கையில் உள்ளூராட்சித் தேர்தலை அடுத்து ஏற்பட்டுள்ள அரசியல் குழப்ப நிலைகளால், நாட்டின் பொருளாதாரத்தில் உறுதியற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலில், கூட்டு அரசில் இடம்பெற்றுள்ள இரண்டு பிரதான கட்சிகளும் தோல்வியைச் சந்தித்துள்ளன.

இதையடுத்து, கூட்டு அரசுக்குள் அரசியல் குழப்பங்கள் ஏற்பட்டு உறுதியற்ற நிலை தோன்றியுள்ளது.

இதனால், இலங்கையின் பங்குச்சந்தையில் நேற்று முன்தினம் வீழ்ச்சி ஏற்பட்டது. முக்கியமான பங்குகளின் விலைகளில் நேற்று முன்தினம் கணிசமான சரிவு ஏற்பட்டுள்ளது.

அரசியல் குழப்பநிலையால் முதலீட்டாளர்கள் பங்குகளை வாங்கத்தயக்கம் காட்டுகின்றனர் என்றும் இதனால், பங்குச்சந்தையில்வீழ்ச்சிஏற்பட்டுள்ளதுஎன்றும் பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் மதிப்பும் நேற்றுமுன்தினம் வீழ்ச்சியடைந்துள்ளது.

(கு)

### மன்னாரில் மூன்று இடங்களில்

# இந்துக்களின் வணக்க சிலைகள் உடைப்பு, திருட்டு





மன்னார், பெப்.14

மன்னாரில் மூன்று இடங்களில் இந்துக்களின் வணக்கச் சிலைகள் நேற்றுமுன்தினம் இரவு உடைக்கப்பட்டுள்ளமை இந்து மக்கள் மத்தியில் அதிர்ச்சியையும், கவலையையும் ஏற்படுத்தியுள்ளன.

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியில் 1988 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்திய இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட 'லிங்கேஸ்வரர்' தேவஸ்தானத்தில் காணப்பட்ட மூன்று சிலைகள் அங்கிருந்து திருடிச் செல்லப்பட்டுள்ளன.

இந்தத் தேவஸ்தானத்தினுள் கடந்த 30 வருடங்களாக காணப்பட்ட சிவலிங்கம், புத்தர் சிலை, பிள்ளையார் சிலை ஆகிய மூன்று சிலைகள் அங்கிருந்து திருடிச் செல்லப்பட்டுள்ளன.

இதேவேளை, மன்னார் தாழ்வுபாடு பிரதன வீதி கீரிச் சந்தியில் கடந்த 18 வருடங்களாக காணப்பட்ட ஆலையடி பிள்ளையார் சிலை இனம் தெரியாத நபர்களினால் உடைத்து சேதப்படுத்தப்பட்டுள்ளது.

மன்னார் - தள்ளாடி விமான ஓடு பாதைக்கு முன்பாக பல தடவைகள் இனம் தெரியாத நபர்களினால் உடைக்கப்பட்ட நிலையில், மீண்டும் புதிதாக அமைக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்த பிள்ளையார் சிலை அங்கிருந்து திருடிச் செல்லப்பட்டுள்ளது.

மகாசிவராத்திரி தினத்தன்று மன்னாரில் இந்துக்களின் வணக்கச் சிலைகள் உடைக்கப்பட்டமை மற்றும் அங்கிருந்து திருடிக் கொண்டு செல்லப்பட்டுள்ளமை மன்னார் மாவட்ட இந்து மக்கள் மத்தியில் அதிர்ச்சியையும், கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில், மன்னார் பொலிஸார் சம்பவ இடங்களுக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் மன்னார் மாவட்ட சர்வமதத் தலைவர்கள், குறித்த இடங்களுக்குச் சென்று பார்வையிட்டுள்ளதோடு, உரிய நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறு பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க)

# திருப்பாடுகளின் நாடகத்திற்கான பிரதி வழங்கும் வைபவம் இன்று

யாழ்ப்பாணம், பெப்.14

திருமறைக் கலாமன்றத்தால் ஆண்டு தோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் மேடையேற்றப்படும் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பை சித்திரிக்கும் திருப்பாடுகளின் நாடகத்திற்கான பிரதி வழங்கும் வைபவம் தவக்காலத்தின் ஆரம்ப நாளாகிய இன்று புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு இல.17, மாட்டீன் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைஞான சுரபி தியான இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக கிறிஸ்தவ, இஸ்லாமிய நாகரிகத் துறைகள், தலைவர், பேராசிரியர் அருள் திரு. ஞானமுத்து பிலேந்திரன் அடிகள் கலந்துகொண்டு, இவ் ஆற்றுகையில் பங்கேற்கவுள்ள நடிகர்கள் உட்பட ஏனைய துறைசார்ந்த பிரிவுகளுக்கான பிரதிகளை வழங்கவுள்ளார்.

பிரதி வழங்கும் வைபவத்தில் வழமையாக திருப்பாடுகளின் நாடகத்தில் பங்கேற்கின்ற அனைத்துக் கலைஞர்களையும் இம்முறை புதிதாக இணைந்து பங்குபற்ற விருப்பமுடையவர்களையும் கலந்து கொள்ளுமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது.

திருப்பாடுகளின் நாடகம் மார்ச் மாதம் 22ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை நான்கு நாள்களுக்கு மாலை 6.45 மணிக்கு வெள்ளியில் ஞாயிறு என்னும் பெயரில் யாழ்.திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப் படவுள்ளது. வெள்ளியில் ஞாயிறு திருப்பாடுகளின் நாடகம் இறுதியாக 2010 ஆம் ஆண்டு மேடையேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(இ)

## நாளை

15.02.2018
வியாழக்கிழமை

நட்சத்திரம் : திருவோணம் கா.8.19 வரை
திதி : அமாவாசை பி.இ 3.08 வரை
சுபநேரம்: 8.03 - 9.33 வரை
இராகுகாலம்: 2.03 - 3.33 வரை

காலைக்கதிர்
Kalaikkathir



# முன்னாள் போராளியை கொழும்புக்கு திருப்பி அனுப்புகிறது ஆஸ்திரேலியா!



கொழும்பு, பெப். 14

ஐ.நாவின் கோரிக்கைகளையும் நிராகரித்து, விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் போராளி ஒருவரை ஆஸ்திரேலிய அரசு இலங்கைக்குத் திருப்பி அனுப்பவுள்ளது.

2012 ஆம் ஆண்டு படகு மூலம் ஆஸ்திரேலியா சென்றிருந்த சாந்தரூபன் என்பவரே, எதிர்வரும் 22 ஆம் திகதி இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படவுள்ளார்.

ஆஸ்திரேலிய அரசு இவரது புகலிடக் கோரிக்கையை நிராகரித்திருந்தது.

எனினும், விடுதலைப் புலிகள் இயக்கத்தில், கடற்புலிகளின் படகுகள் கட்டுமானப் பிரிவில் முக்கிய உறுப்பினராக இருந்த சாந்தரூபன் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டால், உயிராபத்தை எதிர்கொள்ளலாம் என்று அகதிகளுக்கான ஐ.நா முகவரகம் எச்சரித்திருந்தது.

அவரை இலங்கைக்குத் திருப்பி அனுப்ப வேண்டாம் என்று ஐ.நா விடுத்திருந்த கோரிக்கையை நிராகரித்து, எதிர்வரும் 22 ஆம் திகதி கொழும்புக்கு அனுப்பி வைக்க ஆஸ்திரேலியா நடவடிக்கை எடுத்துள்ளது.

கடும் பாதுகாப்புடன் அவர் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளார்.

இதுதொடர்பான அறிவித்தல் சாந்தரூபனுக்கு ஆஸ்திரேலியா எல்லைப் பாதுகாப்புப் பிரிவினரால் வழங்கப்பட்டுள்ளது.

சாந்தரூபன் தற்போது ஆஸ்திரேலிய தடுப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளார்.

(க)

## ஐ.நாவின் பொறுப்புக்களிலிருந்து நாம் விலகிச் செல்லவில்லை!

### இலங்கை அரசு அறிவிப்பு

கொழும்பு, பெப். 14

ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொறுப்புக்களிலிருந்து விலகிச்செல்லவில்லை என இலங்கை அரசு அறிவித்துள்ளது.

ஜெனிவாவிற்கான இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

ஆயுதக் களைவு, குடிப்பெயர்வு, மனித உரிமைகள், சுகாதாரம், புலமைச் சொத்து, விஞ்ஞானம் தொழில்நுட்பம் மற்றும் சர்வதேச வர்த்தகக் கொள்கை உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் ஐக்கிய நாடுகள் முறைமைக்கும் கொள்கைகளுக்கும் உடன்பட்டு அதன் அடிப்படையில் செயற்பட்டு வருகிறது எனத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பும் அதன் துணை நிறுவனங்களும் இலங்கைக்கு வழங்கி வரும் ஒத்துழைப்புக்கு நன்றி பாராட்டுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(க)

## நாட்டின் பல பகுதிகளில் மழையுடன் கூடிய காலநிலை

கொழும்பு, பெப். 14

நாட்டின் பல பகுதிகளில் மழையுடன் கூடிய காலநிலை காணப்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இரத்தினபுரி, காலி, மாத்தறை மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களின் சில இடங்களில் பிற்பகல் 2 மணியின் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் எனவும் மேல், வடமேல், வடக்கு, ஊவா மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் இடைக்கிடையே பலத்த காற்று வீசக்கூடும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மேல், சபரகமுவ, தெற்கு, மத்திய மாகாணங்களின் சில இடங்களில் காலை வேளைகளில் பனி மூட்டத்துடன் கூடிய காலநிலை காணப்படும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிறுவர் பராமரிப்பு நிலையத்திற்கு இனந்தெரியாதவர்களால் தீ வைப்பு





நுவரெலியா, பெப். 14

நுவரெலியா மாக்கஸ் தோட்டத்தில் உள்ள சிறுவர் பராமரிப்பு நிலையத்திற்கு இனந்தெரியாதவர்களால் தீ வைக்கப்பட்டுள்ளது.

தீ வைப்புச் சம்பவத்தைச் செய்தி சேகரிக்கச் சென்ற பத்தனை பிரதேசத்தில் உள்ள ஊடகவியலாளர் மீது தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட் டது என நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று இரவு இடம் பெற்றுள்ளது என நுவரெலியா பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை தீ வைக்கப்பட்ட சிறுவர் நிலையத்தில் உள்ள அனைத்து உபகரணங்களும் எரிந்து சாம்பராகி உள்ளன.

## மங்களவின் கருத்துக்கு நாமல் ராஜபக்ஷ பதிலடி

கொழும்பு, பெப். 14

ராஜபக்ஷக்களைத் தாக்குவதை விட்டு விட்டு நாட்டை அபிவிருத்தி செய்வதில் கவனம் செலுத்துமாறு அமைச்சர் மங்கள சமரவீரவிடம் நாமல் ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்ட மங்கள சமரவீர, 60 லட்சம் மக்கள் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக வாக்களித்துள்ளனர் என குறிப்பிட்டிருந்தார்.

இதற்கு பதிலளிக்கும் முகமாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ டுவிட்டரில் கருத்து ஒன்றை பதிவிட்டுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ பற்றி அமைச்சர் மங்கள சமரவீர அதிகளவு கவனம் செலுத்துவது அனைவரும் அறிந்தது ஒன்றே.


எனினும், ராஜபக்ஷக்களை தாக்குவதனை விட்டுவிட்டு நாட்டை அபிவிருத்தி செய் வதில் கவனம் செலுத்துமாறு நாமல் கோரியுள்ளார்.

மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் அதிகளவு சிரத்தை எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

(க)

## படுதோல்வி அரசுக்கான எச்சரிக்கை அல்ல; மக்கள் அடித்த பலமான அடியாகும்!

### விக்டர் ஐவன் விளக்கம் கூறுகிறார்



கொழும்பு, பெப். 14

தேர்தலில் ஏற்பட்ட படுதோல்வியை பொது மக்கள் அரசுக்கு வழங்கிய எச்சரிக்கை என்று கூற யாராவது முனைவதாயின் அது தவறு. மக்கள் மிகவும் ஆவேசத்துடன், உணர்வுகளுக்கு விளங்கும் பிரகாரம், தெளிவாகவே அரசுக்கு அடித்த பலமான அடியாகவே இதனைப் பார்க்கவேண்டும் என சிரேஷ்ட ஊடகவியலாளரும் முன்னாள் ராவய பத்திரிகையின் ஆசிரியருமான விக்டர் ஐவன் தெரிவித்தார்.

மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டணியின் வெற்றி குறித்து அவரிடம் ஊடகமொன்று வினவிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனவரியில் தற்போதைய ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரைத் தெரிவு செய்ய திரண்டு வந்து வாக்களித்தது போன்று இந்த அரசாங்கம் 3 வருடங்களைக் கடந்த தன் பின்னர் இம்முறை உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வெற்றியைப் போன்றதோர் உத்வேகமான படுதோல்வியைச் சந்தித்துள்ளது.

இந்த அரசின் இரு தலைவர்களையும் அரசின் மாளிகைக்குள் சிறைப்பிடித்து வைப்பதற்கு மஹிந்த ராஜபக்ஷ தயாராகியுள்ளார்.

இந்தத் தவறை இலகுவாக சரிசெய்ய முடியுமான ஒரு நிலையில் அல்ல நிலைமை காணப்படுகின்றது.

இதன்பிறகு, ஆத்ம திருப்தியுடன் எந்தவொரு நடவடிக்கையையும் அரசுக்கு முன்னெடுக்க முடியும் என நான் கருதவில்லை.

எந்தவொன்றையும் செய்யத் தெரியாத, செய்ய முடியாத ஒரு பலவீனமான அரசாங்கமாகவே கடந்த மூன்று வருடங்களில் மக்கள் இந்த அரசைப் பார்த்தனர்.

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியிலிருந்த பிரச்சினையைத் தீர்க்க உருவாக்கப்பட்ட அரசாங்கமும் தீர்வை வழங்க தவறியுள்ள ஒரு நிலைமையே நாட்டில் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# சுற்றுலாத்துறையின் அபிவிருத்தி வருமானத்துறையை மேம்படுத்தும்

மட்டக்களப்பு,பெப்.14

சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதன் மூலம் சுயதொழில் மற்றும் சிறிய நடுத்தர அளவிலான வருமானத்துறையை மேம்படுத்த முடியும் என்று மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் மா.உதயகுமார் தெரிவித்தார்.

ஆஸ்திரேலிய உதவித்திட்டத்தின் நிதியில் நடைமுறைப்படுத்தப்படும் உள்வாங்கப்பட்ட வளர்ச்சிக்கான திறன்கள் அபிவிருத்தித் திட்டம் தொடர்பாக நேற்று முன்தினம் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே அரசாங்க அதிபர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு–

ஆஸ்திரேலிய உதவித்திட்டத்தின் – உள்வாங்கப்பட்ட வளர்ச்சிக்கான திறன்கள் அபிவிருத்தித்திட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டம் உள்வாங்கப்பட்டதையிட்டு மகிழ்ச்சியடைவதுடன், மட்டக்களப்பு மாவட்டத்தில் போரால் பாதிக்கப்பட்ட முன்னாள் போராளிகள், தொழிலுக்காக போராடிக்கொண்டிருக்கின்ற இளைஞர்கள் தொழில்துறைத் திறன்களுடன் காணப்படுகின்றனர்.

வரலாற்று ரீதியான, பாரம்பரியமான பிரதேசங்கள் பலவற்றை மட்டக்களப்பு மாவட்டம்



மட்டு அதிபர் நம்பிக்கை

கொண்டுள்ளது. அதே நேரத்தில் பலவகையான கலாசாரங்கள் காணப்படுகின்றன. விவசாயத்துறைசார்ந்த செயற்பாடுகள் அதிகமாக உள்ளன. சிறுசிறு தீவுகள் பல உள்ளன. இவற்றையெல்லாம் மையப்படுத்திய சூழலியல் சார் சுற்றுலாத்துறைக்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

மட்டக்களப்பு நகரைச் சுற்றியதான வாவியைப் பயன்படுத்த முடியும். உலகின் பெரிய நகரங்களைவிடவும் அழகு மிகுந்தது மட்டக்களப்பு நகரம். இந்த வளத்தைச் சுற்றுலாத்துறைக்குப் பயன்படுத்த முடியும்.

அதே நேரத்தில் ஆங்கில மொழி தவிர்ந்த மொழிரீதியான சீன, ஜப்பான் இன்னும் வேறு மொழிகளைப் பேசுபவர்கள் அதிகளவில் வருகை தருகின்றனர். அவர்களுக்காக மட்டக்களப்பு பாரம்பரியத்தை வழங்கக்கூடிய மொழியறிவு சுற்றுலாத்துறையில் ஈடுபடுபவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

மட்டக்களப்பின் உற்பத்தித் துறை சார்ந்து பெறுமதிசேர் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதுடன், மீன்பிடித்துறை சார்ந்தும் சுற்றுலாத்துறையை மேம்படுத்த முடியும். அந்த வகையில் சுற்றுலாத்துறை அபிவிருத்தி ஊடாக சுயதொழில் மேம்பாடு, வருமான அதிகரிப்பு ஏற்பட்டு மக்களது வாழ்க்கைத் தரம் உயர்ச்சியடையும் என்று தெரிவித்துள்ளார்.

# ரவூப் ஹக்கீம் நீங்கினால் மட்டுமே ஆட்சியமைக்க உடன்படுவேன்

## வெற்றி வேட்பாளர் அன்சில்



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் கட்சித் தலைமைப்பதவியிலிருந்து நீங்கினால் அட்டாளைச்சேனை பிரதேச சபையில் ஆட்சியமைக்க நான் உடன்படுவேன், என அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள்தவிசாளரும், வெற்றி வேட்பாளரும் சட்டத்தரணியுமான எம்.ஏ.அன்சில் தெரிவித்துள்ளார்.

ரவூப் ஹக்கீம் கட்சித் தலைமைப் பதவியிலிருந்து நீங்காவிடின் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் எதிர்க்கட்சி ஆசனத்தில் அமர வேண்டிய நிலை ஏற்படும் எனது போராட்டம் முஸ்லிம் காங்கிரஸுக்கு எதிரானது அல்ல, அது ஹக்கீமின் தலைமைத்துவத்திற்கு எதிரானது. அதற்காக வேண்டி எடுக்கப்பட்ட போராட்டத்தில் ஒருபோதும் நான் சறுகிவிடப் போவதில்லை என்றார்.

ஹக்கீம் என்ற தனிநபரின் அடாவடித்தனங்களை நான் ஏற்றுக்கொண்டு சென்றிருந்தால் மிக இலகுவாக அட்டாளைச்சேனை பிரதேச சபைக்குரிய தவிசாளர் பதவி எனக்குக் கிடைத்திருக்கும்.

ஆனால் அவருக்கெதிராகவும், கட்சியை நம்பிவாக்களிக்கும் எமது மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகவுமே நாங்கள் வெளியேறிப் பல போராட்டங்களை நடத்தி வருகின்றோம். என்று தெரிவித்துள்ளார்.

# கட்சிக் காரியாலயத்தின் மீது திங்களன்று குண்டுத் தாக்கு

மட்டக்களப்பு,பெப்.14

மட்டக்களப்பு, காத்தான்குடிப் பொலிஸ் பிரிவு புதிய காத்தான்குடி 6இல் உள்ள நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் தலைமை அலுவலகத்தின் மீது, நேற்று முன்தினம் அதிகாலை குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.



நேரக் கணிப்புக் குண்டு மூலமே, இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. குண்டுவெடிப்பில் அலுவலகத்தின் சில பகுதிகள் சேதமடைந்துள்ளன.

சம்பவம் இடம்பெற்ற கட்சி அலுவலகத்துக்குச் சென்ற காத்தான்குடிப் பொலிஸார் ,விசேட அதிரடிப்படையின் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினர், மட்டக்களப்பு குற்றத் தடயவியல் பிரிவினர் விரிவான விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

மேற்படி கட்சி அலுவலகத்தில் வெடிக்காத நிலையிலும் சில நேரக் கணிப்புக் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# கூட்டமைப்பின் கொள்கையுடன் உடன்படும் எல்லாக்கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும்

மட்டக்களப்பு,பெப்.14

தமிழ் தேசிய கூட்டமைப்பின் கொள்கையுடன் உடன்படக் கூடிய எல்லாக் கட்சிகளும் எங்களுடன் ஒத்துழைக்க வேண்டும் எனத் தமிழரசுக்கட்சியின் பொதுச் செயலாளரும் கிழக்கு மாகாண சபை முன்னாள் அமைச்சருமான கி.துரைராஜசிங்கம் அழைப்பு விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு நல்லையா வீதியில் உள்ள இலங்கைத் தமிழரசுக்கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.இங்கு தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவித்தவை வருமாறு–

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவடைந்திருக்கின்றது. வடகிழக்கு மாகாணங்களைப் பொறுத்தவரையில் ஆரம்பத்தில் இருந்தே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பல்வேறு பொய்ப்பிரசாரங்களுக்கு முகங்கொடுத்திருந்தது.

இருந்த போதிலும் ஓரிரண்டு சபைகளைத் தவிர ஏனைய எல்லாச் சபைகளிலும் நாங்கள் தான் வெற்றி பெற்றிருக்கின்றோம். சுமார் 40 சபைகள் எமது ஆதிக்கத்திற்குள் வந்திருக்கின்றன. இருந்தபோதிலும் இதில் கவலைப்பட வேண்டிய விடயம் என்னவென்றால். புதிதாக வந்திருக்கின்ற தேர்தல் முறை இதில் பல்வேறு குழப்பங்களை ஏற்படுத்தியிருக்கின்றது.

ஜனநாயகத்திலே பெரும்பான்மை மக்களினுடைய அபிப்பிராயத்தின் அடிப்படையில் சபைகள் அமைக்கப்



துரைராஜசிங்கம் அழைப்பு

பட வேண்டும் என்கின்ற நிலைமையை முற்றாக மாற்றி அறுதிப்பெரும்பான்மையைப் பெற்ற சபைகளில் கூட நாங்கள் பல சவால்களை எதிர்நோக்கக்கூடியதாக இருக்கின்றது.

எனவே எங்களது இந்த அறுதிப் பெரும்பான்மையைக் கூட நாங்கள் மாற்றி எங்களுக்கு தற்போது ஓரிரு உறுப்பினர்களைச் சேர்க்க வேண்டி இருக்கின்றது. இது உண்மையிலேயே ஜனநாயகத்திற்கு ஒரு பெரிய சவாலாகவும் கேள்விக்குறியாகவும் இருக்கின்றது. உண்மையில் நான் நினைக்கின்றேன் இலங்கை முழுவதும் இப்பிரச்சினை இருக்கின்றது.

அந்த வகையில் எங்களது கொள்கையுடன் உடன்படக் கூடிய எல்லாக் கட்சிகளும் எங்களுடன் ஒத்துழைத்து மக்களுக்கு அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கு அனைவரும் உதவ வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.



# அரசியல் பரபரப்புக்கு மத்தியில் இன்று கூடுகிறது அமைச்சரவை

கொழும்பு, பெப். 14

இலங்கை அரசியல் களத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டிருக்கின்ற நிலையில் நல்லாட்சி அரசின் அமைச்சரவைக் கூட்டம் இன்று நடைபெறவுள்ளது.

அமைச்சரவைக் கூட்டம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை நடைபெறவிருந்தது.

எனினும், நேற்று மகா சிவராத்திரி தினம் அனுஷ்டிக்கப்பட்டதால் இன்றைய தினத்திற்கு அமைச்சரவைக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

நடந்துமுடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவு ஐக்கிய தேசியக் கட்சிக்கும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியிருக்கிறது.

அதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வழிநடத்திய ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன உள்ளூராட்சி சபைகள் பலவற்றை கைப்பற்றி அரசியல் களத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத் தியுள்ளது.



இதன் காரணமாக பிரதமர், ஜனாதிபதி பதவிகளுக்கு சவால் விடுக்கப்பட்டுள்ளது.

பரபரப்பான இந்தச் சூழ்நிலைக்கு மத்தியில்இன்று கூடுகின்ற அமைச்சரவைக்கூட்டத்தில் பலதிருப்பங்களை ஏற்படுத்தும் முடிவுகள் எடுக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## சட்டவிரோதமாக சிகரெட்டுக்களை கடத்தி வந்த இரு பெண்கள் கைது

கொழும்பு, பெப். 14

சட்டவிரோதமான முறையில் ஒருதொகை சிகரெட்டுக்களை நாட்டுக்குக் கொண்டு வந்த இரண்டு பெண்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர்.



டுபாயிலிருந்து நேற்றுக் காலை 5 மணியளவில் இலங்கை வந்த இரண்டு பெண்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என விமான நிலைய சுங்கப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண்களிடமிருந்து 159 பெட்டிகளில் இருந்த 41,040 சிகரட் டுக்கள் போதைத் தடுப்பு சுங்கப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள் மீரிகம மற்றும் வாரியப்பொல பிரதேசங்களைச் சேர்ந்த 40 மற்றும் 31 வயதுடையவர்கள் என்று விமான நிலைய சுங்கப் பிரிவினர் தெரிவித்தனர்.

## நாட்டை வாளால் ஆட்சி செய்ய முடியாது என்பதை தேர்தல் முடிவு காட்டுகிறது

கொழும்பு, பெப்.14

தாய் நாட்டை வாளால் ஆட்சி செய்ய முடியாது என்பதை இந்த தேர்தல் முடிவுகள் பாடம் புகட்டியுள்ளன என நிதி மற்றும் ஊடகத் துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

தேர்தல் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நேர்மையான மற்றும் ஜனநாயகத் தன்மையான அரசியல் சக்திகளுடன் கைகோத்து ஐக்கிய தேசியக் கட்சியின் வாக்குப் பலத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண் டும் எனவும் அந்த நீண்ட அறிக்கையில் கூறியுள்ளார்.



மங்கள தெரிவிப்பு

## சந்தைப் பொருளாதார வசதிகளை அதிகரிக்கும் விசேட வேலைத்திட்டம்

கொழும்பு, பெப்.14

கிராமிய மட்ட சிறுதோட்ட விவசாயிகளை ஊக்குவித்து, அவர்களது சந்தைப் பொருளாதார வசதிகளை அதிகரிக்கும் நோக்கிலான விசேட வேலைத்திட்டம் ஒன்றை கமநல அமைச்சு மேற்கொண்டுள்ளது.

இந்த வேலைத்திட்டத்திற்கென உலக வங்கி 125 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது.

வடக்கு, கிழக்கு, வடமத்திய, மத்தி, ஊவா மாகாணங்களில் உள்ள 07 மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட 21 கொத்தணிக் கிராமங்களில் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளமை விசேட அம்சமாகும்.

## புதிய பிரதமர் யார் என்பதை ஜனாதிபதியிடமே கேளுங்கள்!

### அமைச்சர் சஜித் பிரேமதாச கூறுகிறார்

கொழும்பு, பெப். 14

தேர்தல் முடிவுடன் அரசிய லில் பெரிய மாற்றம் ஒன்றைக் கொண்டுவருவேன் என ஜனாதிபதிதான் கூறியுள்ளார். எனவே, அடுத்த புதிய பிரதமர் யார் என்ற கேள்வியையும் ஜனாதிபதியிடமேதான் கேட்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலைத் தொடர்ந்து ஊடகங்களிடம் அவர் கருத்துத் தெரிவித்தார்.

இதன்போது ஊடகவியலாளர் ஒருவர் இந்த புதிய அரசியல் மாற்றத்தின் பின்னர் புதிய பிரதமர் யார் என அமைச்சரிடம் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

கூட்டு எதிர்க்கட்சிக்குக் கிடைத்துள்ள மொத்த வாக்குகளின் விகிதாசாரத்துடன் ஒப்பிடுகையில் நாட்டில் பெரும்பாலான மக்கள் கூட்டு எதிர்க் கட்சிக்கு எதிராக வாக்களித்துள்ளமையை புள்ளிவிபர தகவல்கள் எடுத்துக் காட்டுகின்றன.



நாம் ஜனாதிபதித் தேர்தல் ஒன்றுக்கு செல்வதாயினும் பெரும்பான்மைப் பலத்தை எமக்கு நிரூபிக்க முடியுமாக இருக்கும்.

இருப்பினும், மக்கள் எமக்கு ஒரு செய்தியை இந்தத் தேர்தல் மூலம் தெரிவித்துள்ளனர்.

இதற்கு அமைதியாக செவிமடுத்து, எம்மிடமுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்து பலமான ஒரு பயணத்தைத் தொடர ஐக்கிய தேசியக் கட்சி எதிர்பார்க்கின்றது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (க)

## இந்த அரசு தொடர்ந்து இருக்கும்; விருப்பமானவர்கள் இணையலாம்

### ஐ.தே.க. தவிசாளர் மலிக் சமரவிக்ரம

கொழும்பு, பெப்.14

இந்த அரசு எதிர்வரும் இரண்டரை அண்டு காலத்துக்கு தொடர்ந்து இருக்கும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் மலிக் சமர விக்ரம கூறியுள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலுக்கு இன்னும் இரண்டரை ஆண்டு காலம் இருப்பதனால் அரசில் மாற்றம் ஒன்று தேவையில்லை என்று அவர் கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

அரசுக்கு ஒத்துழைப்பு வழங்க விரும்பும் எந்தவொரு கட்சியுடனும் இணைந்து செயற்படுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தயாராக இருக்கிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் உறுப்பினர்களும் அரசுடன் இணைந்து செயற்பட முடியும்.



நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி அதிகார சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வாக்கு வீதத்தில் எவ்வித குறைவும் இல்லை என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## நுவரெலியா மாவட்டத்தின் கிராமங்கள் அபிவிருத்தி!

கொழும்பு, பெப்.14

வறிய கிராமங்களை அபிவிருத்தி செய்யும் வேலைத் திட்டத்தை அரசு அமுல் படுத்தி வருகிறது.

இதன் கீழ் நுவரெலியா மாவட்டத்தைச் சேர்ந்த அம்பகமுவ, வலப்பனை, கொத்மலை, ஹங்குரங்கெத்த பிரதேச செயலகப் பிரிவுகளில் இருக்கும் பல கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இந்தக் கிராமங்களில் வசிக்கும் இரண்டாயிரத்து 200 இற்கு மேற்பட்ட குடும்பங்களின் வாழ்க்கைத் தரம் மேம்படுத்தப்பட உள்ளது



டன் இதற்கான நடவடிக்கைகளை பிரதேச செயலகங்கள் ஆரம்பித்துள்ளன. (க)

# சிவராத்திரியை முன்னிட்டு வவுனியாவில் இராணுவத்தினர் நல்லிணக்க பொங்கல்!

இந்துக்களின் விசேட தினமான சிவராத்திரியை முன்னிட்டு இராணுவத்தினரால் வவுனியா கந்தசாமி ஆலயத்தில் விசேட பொங்கல் இடம்பெற்று பூஜை வழிபாடுகளும் இடம்பெற்றன.

வன்னி படைத் தலைமையகத்தின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை இந்த பொங்கல் நிகழ்வும், விசேட பூஜை வழிபாடும் இடம் பெற்றது.

வவுனியா கந்தசாமி ஆலயத்தில் பொங்கல் செய்து விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றது.

இதன்போது வன்னிப் படைத்தலைமையகத்தைச் சேர்ந்த இராணுவ அதிகாரிகள், இராணுவத்தினர் எனப் பலரும் சீருடையுடன் கலந்து கொண்டு நல்லிணக்கத்தை வெளிப்படுத்தும் வகையில் வழிபாடுகளை மேற்கொண்டு பொங்கல் உண்டு சென்றனர்.

இதில் ஆலயக் குருக்கள், ஆலய நிர்வாகத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# சிவாச்சார்யர்கள் மீது சேறுபூசுவோர் தமது ஈனச் செயலைக் கைவிட வேண்டும்

## ஆலய அறங்காவலர், பரிபாலன சபையினருக்கான கருத்தரங்கில் உரை

யாழ்ப்பாணம், பெப்.14

சைவாலய பரிபாலன சபையினர்களுக்கும் சிவாச்சார்யர்களுக்கும் திட்டமிட்டு சேறுபூசுவோர் எமது மதமொழி கலாசார விழுமியங்களை அழிக்கும் நோக்கில் செயற்படுவதைக் கடந்த காலத்தில் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இவர்கள் நுனி மரத்தில் இருந்து கொண்டு அடி மரத்தைத் தறிக்கும் அபுத்தி படைத்தவர்கள். இவர்கள் திருந்த வேண்டும் என்றே விரும்புகின்றோம். இவர்கள் திருந்தாவிட்டால் திருத்த வேண்டியது சமூகத்தின் கடமையாகும்.

இவ்வாறு யாழ் இந்து சமயப் பேரவையில் இந்து ஆலய அறங்காவலர் பரிபாலன சபையினருக்கான கருத்தரங்குக்கு தலைமை வகித்து உரையாற்றிய இந்து சமயப் பேரவைச் செயலாளர் சி.சக்திகிரீவன் குறிப்பிட்டார்.

மேற்படிக் கருத்தரங்கு அண்மையில் இந்து சமயப் பேரவை மண்டபத்தில் நடை பெற்ற போது தொடர்ந்து பேசிய அவர் கூறியவை வருமாறு –

சைவாலயங்களுக்கும் சிவாச்சார்யர்களுக்கும் சேறு பூசுவோர் தமது இந்த ஈனச் செயலைக் கைவிட வேண்டும் எனக் கேட்டுக் கொள் வதுடன் சைவாலய பரிபாலன சபையினரும் சிவாச்சார்யர்களும் தமது தனித்துவத்தைக்காப்பாற்ற வேண்டும். இந்து ஆலய வரவு–செலவுகளையும் சொத்துகளையும் முறையாக ஆவணப்படுத்திப் பேணுவது அவசியமாகும். இந்து ஆலயங்களையும், இந்து நிறுவனங்களையும் முன்னின்று நடத்துவோர் தமது சொத்துக்களைக் கூட வெளிப்படுத்தத் தயாராக இருக்கவேண்டும்.

வெளிப்படைத்தன்மையைப் பேணுவது பொதுப்பணியில் ஈடுபடுவோரின் தலையாய கடமையாகும்.விமர்சனங்களை ஏற்க வேண்டியது பொதுப் பணிகளில் ஈடுபடுவோரின் தனித்துவப் பண்பாக அமைய வேண்டும். பலர் ஆலயச் சொத்துக்களை சரியாகப் பராமரிக்காததாலும் ஆலயச் சொத்துக்களை சிலர் அபகரித்ததாலும் பல இடர்பாடுகளை எமது ஆலயங்களே சந்தித்து வருகின்றன. இதனைச் சீர்செய்வதற்கு பல்வேறு காத்திரமான திட்டங்களை முன்னாள் பதிவாளர் நாயகம் பிரம்மஸ்ரீ.ந.சதாசிவஜயர் தலைமையில் ஒரு குழுவை எமது பேரவை நியமனம் செய்துள்ளது. இதனைப் பயன்படுத்த வேண்டியது சகல ஆலயங்களின் பொறுப்பாகும் – என்றார். கணக்கறிக்கைகளைக் காலத்திற்குக் காலம் வெளியிட நாம் பொருத்தமானவர்கள் மூலம் உதவுவோம்.– என்றார்.

ஆசியுரை வழங்கிய சைவ உயர் பீட உறுப்பினர் சிவஸ்ரீ.ச. சோமஸ்கந்தக் குருக்கள் இந்து சமயப் பேரவை மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை பெருந்தொகையான அறங்காவலர் இக் கருத்தரங்கில் கலந்து கொள்கின்றமை மூலம் எம்மால் உணர முடிகிறது. இந்த எழுச்சி பிரதேச மட்டத்திலும், கிராம மட்டத்திலும் பிரதிபலிக்கக் கூடிய வகையில் இந்து சமயப் பேரவையின் செயற்பாடுகள் அமைய நாம் அனைவரும் இணைந்து முன்னெடுப்பது எமது தலையாக கடமையாகும்.– என்றார்.

சிறப்புரையாற்றிய சிவஸ்ரீ. பஞ்சாட்சரசர்மா சிவானந்தசர்மா பேசுகையில்; நெருக்கடியான காலத்தில் இந்துசமயப் பேரவையினரிடம் உதவிகளைப் பெற மக்கள் திரண்டனர். ஆனால் இன்று சமய விடயங்களை அறிவதற்கு மக்கள் கூடுவதைக் காண்கிற போது எமது மக்களின் அறிவுத் தாகத்தை எம்மால் உணர முடிகிறது.– என்றார்.

சிறப்புரையாற்றிய முன்னாள் பதிவாளர் நாயகம். பிரம்மஸ்ரீ.ந.சதாசிவ ஐயர் பேசுகையில்; யான் இந்து சமயப் பேரவையின் ஆரம்பகால உறுப்பினராக இருந்து வருகிறேன். தனிப்பட்ட முறையில் ஆலய சொத்துக்களைப் பாதுகாப்பது தொடர்பாக என்னை எவரும் நாடுவதை நான் விரும்பவில்லை. எந்த உதவியையும் இந்து சமயப் பேரவை ஊடாகவே நிறைவேற்ற விரும்புகின்றேன். தேவையான வர்கள் இந்து சமயப் பேரவை யினரிடம் விண்ணப்பித்து எமது உதவிகளைப் பெற்றுக் கொள் ளலாம்.– என்றார்.

தவில் வித்துவான் என். ஆர். எஸ்.இரவீந்திரன் பேசுகையில்; எமது நாதஸ்வர தவில் வித்துவான்கள் இன்று பாரம்பரிய மரபுகளை மீறி வாத்தியத்தை வாசிப்பதால் எமது கலை வீழ்ச்சியடையத் தொடங்கிவிட்டது. எமது பிள்ளைகள் இந்தக் கலைகளில் ஈடுபடப்பின்னடிக்கின்றனர். இதனை மாற்றி அமைக்க அனைத்துச் சமூகத்தினர்களும் இக் கலையைப் பயில முன்வரவேண்டும். ஆலயங்களில் சினிமாப் பாடல்களை நாதஸ்வரக் கலைஞர்களை வாசிக்குமாறு வயது முதிர்ந்தவர்கள் கூட கேட்பது மன வேதனையைத் தருகின்றது. எமது கலைகளைப் பாதுகாப்பதற்கு மக்கள் முன்வரவேண்டும்.– என்றார்.

இந்துக் குருமார் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ.ப.மனோகரக் குருக்கள் பேசுகையில்; ஆலயம் சம்பந்தமான பிரச்சினைகளைச் சுமுகமாகத் தீர்க்க இந்து சமயப் பேரவையுடன் இந்துக் குருமார் ஒன்றியம் இணைந்து செயற்பட என்றும் தயாராகவே உள்ளது.– என்றார். மேலும் இந்த விடயத்தை ஒருங்கிணைத்துக் கையாள்பதையே விரும்புகின்றோம் இத்தகைய செயற்பாட்டின் மூலம் நீதி மன்றுக்குச் செல்லும் வழக்குகளை; தடுத்து நிறுத்த முடியும்.– என்றார்.

சிவஸ்ரீ.ந.குமாரகுருக்கள் பேசுகையில்; முன்னைய காலத்தில் இராஜாக்கள் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஆலயங்களையே மையப்படுத்தி மக்களுக்கு பக்தி நெறியையும், மன அமைதியையும் ஏற்படுத்தினர். இன்று ஆலயங்களே நீதி மன்றில் நிற்பது கவலைக்குரியதாகும். இந்து சமயப் பேரவை போன்ற மக்கள் மத்தியில் நம்பிக்கை கொண்ட அமைப்புக்கள் இதனைத்துணிந்து முன் னெடுத்தால் அனைவரும் இதனை ஆதரித்தேயாக வேண்டும்.–என்றார். (இ)

# தினசரி ராசி பலன்

(14.02.2018)

*2018ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் மாசித்திங்கள் 2ஆம் நாள் புதன்கிழமை சதுர்த்தசித்திதி இரவு 12.46 மணி வரை. பின்னர் அமாவாசை. நட்சத்திரம்: திருவோணம் முழுவதும் சித்தயோகம் முழுவதும்.*

**ராகுகாலம்** - *பகல் 12.24 மணி முதல் 1.53 மணி வரை*

**சுபநேரம்** - *மாலை 04.59 மணி முதல் 6.29 மணி வரை*

**திவசம் செய்ய வேண்டிய திதி**- *மாசி மாத தேய்பிறை சதுர்த்தசி*

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** *திருவோணம்.*

**‘ஜோதிடமணி’ பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி**

**மேஷம்** மத்திம பலன்கள் காணப்படுகின்றது. பொருள் வரவு சுமாராக இருக்கும். வியாபாரிகளுக்கு பணிகள் மந்தமாக இருக்கும். உறவினர் விசேஷங்களால் செலவு கூடும். சகோதரர்களால் சங்கடம் உண்டாகும்.

**ரிஷபம்** ஆக்க பூர்வமான நாள். பொருளாதாரம் வளமடையும். எடுத்த காரியத்தில் வெற்றி கிடைக்கும். சொத்துக்கள் வாங்குவதும், வீடு கட்டும் எண்ணமும் நிறைவேறும். திருமண காரியம் கைகூடும்.

**மிதுனம்** யோசனையான நாள். பணவருவாய் குறையும். வரவை மீறி செலவுகள் வரும். வேலைச்சுமை அதிகரிக்கும். உறவுகளால் சச்சரவு உண்டாகும். தேவையற்ற பிரச்சினைகளில் மாட்டிக் கொள்ள நேரும்.

**கடகம்** விருத்தியான நாள். வருமானம் வளமாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். உத்தியோகத்தர்களுக்கு விரும்பிய இடமாற்றம் கிடைக்கும். பிரிந்திருந்த உறவினர்கள் மீண்டும் ஒன்று சேர்வார்கள்.

**சிம்மம்** சுபீட்சமான நாள். பணம் பல வழிகளிலும் வந்து சேரும். குடும்பத்தில் கலகலப்பு அதிகரிக்கும். குடும்பத்தில் அனைவருக்கும் உடல் நலம் சிறப்பாக இருக்கும். பெண்களுக்கு மனதுக்கேற்ற வரன் அமையும்.

**கன்னி** அதிஷ்டமான நாள். பணபலம் அதிகரிக்கும். உடல் நலம் சீரடையும். பெண்கள் விருப்பப்படி விவாகம் அமையும். வியாபாரிகளுக்கு வெளிநாட்டு ஒப்பந்தம் விரும்பிய வண்ணம் கிடைக்கும்.

**துலாம்** அலைச்சல் மிகுந்த நாள். உத்தியோக பூர்வமாய் நிறைய அலைய வேண்டி வரும். பணப் பற்றாக்குறைவால் கடன் வாங்க சிலர் அலைவார்கள். சுய தொழில் புரிய விரும்புவார் வங்கிகளின் உதவியை நாடுவார்கள்.

**விருச்சிகம்** சம பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். விருந்தினர் வருகை, வாகனக் குறைபாடு, பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காக கூடுதல் செலவுகள் ஏற்படலாம்.

**தனுசு** யோகமான நாள். பணபலம் அதிகரிக்கும். குடும்ப மகிழ்ச்சி மேலோங்கும். வீடு, வாகன வசதிகள் பெருகும். வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புக்கள் அமையும். பெண்களுக்குத் திருமண யோகம் உண்டாகும்.

**மகரம்** உயர்வான நாள். வருமானம் உயரும். குடும்பத்தில் நல்லிணக்கம் காணப்படும். சகோதர உறவு வலுப்படும். பிரிந்தவர்கள் மீண்டும் ஒன்று சேர்வார்கள். வியாபாரம் பன்டங்கு உயரும்.

**கும்பம்** கவலையான நாள். வருமானம் நலிவுறும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் உண்டாகும். வியாபாரத்தில் பெரும் நட்டம் உண்டாகும். உத்தியோகத்தில் அதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகரிக்கும்.

**மீனம்** கீர்த்தியான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்க உறவு மேம்படும். தொழில் பார்க்கும் பெண்களுக்கு வேலைத் திறமையால் அதிகாரிகளின் பாராட்டுகள் கிடைக்கும்.

**சந்திராட்டமநாள்: மிருகசீரிடம் 3ஆம், 4ஆம் பாதங்கள், திருவாதிரை 2ஆம், 3ஆம், பாதங்களில் பிறந்தோர் நற்கருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

### க.பொ.த (சா/த) மாணவருக்கான

# நாடகமும் அரங்கியலும் பயிற்சிப்பட்டறை

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த (சா/த) பரீட்சையில் நாடகமும் அரங்கியலும் பாடத்திற்கு தோற்றி விரைவில் செய்முறைப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான இருநாள் செய்முறை பயிற்சிப் பட்டறை திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 17ஆம் 18ஆம் திகதிகளில் இல.286,பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

இரு நாள்களும் காலை 08.30 மணி தொடக்கம் பி.ப 02.30 மணிவரை நடைபெறவுள்ள இப்பயிற்சிப் பட்டறையில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் வெள்ளிக்கிழமைக்கு முன்பாக திருமறைக்கலாமன்ற அலுவலகத்தில் தமது பெயர்களைப் பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# நாளை மின் தடை

உயர் அழுத்த மற் றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளைவியாழக்கிழமை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை–

**யாழ். பிரதேசத்தில்**- அச்செழு, மாசிவன் சந்தி ஆகிய இடங்களிலும்–

**வவுனியா பிரதேசத்தில்**- கோவில்குளம், ஆச்சிபுரம், சமணன்குளம், மகாமயிலங்குளம், மருதநகர், எல்லப்ப மருதங்குளம், பெரிய கூமரசங்குளம், ஆசிக்குளம், சிதம்பரபுரம், அட்டம்பஸ்கட கிராமம், மதவுவைத்தகுளம், தவசிக்குளம், குட்செட்றோட், தோணிக்கல், பண்டாரிக்குளம், குருக்கள்புதுக்குளம், குருக்களூர், பறயனாலங்குளம் ஒரு பகுதி ஆகிய இடங்களிலும் –

**மன்னார் பிரதேசத்தில்** - வட்டுப்பித்தன்மடு, புதுக்காமம் ஆகிய பிரதேசங்களிலும்மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

காலைக்கதிர்
Kalaikkathir



# இலங்கை அரசியல் குழப்பமான நிலையில்!

## சோதனை மேல் சோதனை

ஆங்கிலத்தில்- MUJIB MASHAL and DHARISHA BASTIANS
வழிமூலம்- The New York Times
**மொழியாக்கம்-நித்தியபாரதி**



கடந்த சனிக்கிழமை இலங்கை முழுவதும் இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தல் வீதி விளக்குகளைப் பொருத்துதல் மற்றும் குப்பைகளை அகற்றும் நடவடிக்கைகளை மேம்படுத்துதல் போன்ற சிறிய விடயங்களுடன் தொடர்புபட்டுள்ளது.

ஆயினும், போருக்குப் பின்னான இலங்கையின் முதலாவது தேசிய அரசாங்கத்தை அமைத்துக் கொண்ட கூட்ட ணிக் கட்சிகள் தமக்குள் பிளவுபட்டதால் வினைத்திறனுடன் செயற்படவில்லை. இதனால் திடீரென உள்ளூராட்சித் தேர்தலானது தேசிய அரசாங்கத்தின் செயற்பாடு தொடர்பான கருத்து வாக்கெடுப்பாக மாறியது.

இவ்வாறானதொரு சூழலில் இடம்பெற்று முடிந்த தேர்தலில் மக்கள் அளித்த வாக்குகளின் பெறுபேறானது, ஒரு லட்சம்வரையான உயிர்களைக் காவு கொண்ட பல பத்தாண்டுகால உள்நாட்டு யுத்த காலப்பகுதியின் பின்னர், நாடு எத்திசை நோக்கிச் செல்கின்றது என்பதற்கான ஒரு சமிக்ஞையாக நோக்கலாம்.

முன்னாள் அதிபர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான எதிர்க்கட்சி வேட்பாளர்கள் பெரும்பாலான உள்ளூராட்சி சபைகளைத் தம்வசப்படுத்தியுள்ளனர் என்பதை கடந்த ஞாயிறு அன்று வெளியிடப்பட்ட தேர்தல் பெறுபேறுகள் தெளிவு



படுத்தியுள்ளன.

இத்தேர்தல் பெறுபேறானது, உள்நாட்டு யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட பல்வேறு உரிமை மீறல்கள் மற்றும் ஊழல் மோசடிக் குற்றங்கள் சுமத்தப்பட்ட முன்னாள் அதிபரான மஹிந்த ராஜபக்ஷ இந்த நாட்டின் அரசியல் எதிர்காலத்தின் மையத்தில் உள்ளார் என்பதை மீண்டுமொரு தடவை உறுதிப்படுத்தியுள்ளது.

ராஜபக்ஷ தனது சொந்த ஊரான தங்காலையில் உரையாற்றும் போது தனக்கு ஆதரவளித்தவர்களை வாழ்த்தியதுடன் தாம் பெற்ற வெற்றியை அமைதியான முறையில் கொண்டாடுமாறும் கேட்டுக்கொண்டார். 'மக்கள் தேசிய அரசாங்கத்தின் ஆணையை நிராகரித்துள்ளனர். ஆதலால் அரசாங்கத்தை மீளவும் தெரிவு செய்ய வேண்டும்' என மஹிந்த ராஜபக்ஷவின் கட்சி உறுப்பினர்கள் சிலர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

'இலங்கையர்கள் கையறு நிலையிலுள்ளனர். அவர்கள் இலங்கையை மீளக் கட்டியெழுப்ப விரும்புகிறார்கள் என்பதை உள்ளூராட்சித் தேர்தல் வெற்றி தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றது' என ராஜபக்ஷ தனது முகப்புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ராஜபக்ஷவின் கட்சியின் பெருவெற்றியா னது இன்னமும் இரண்டு ஆண்டு கால ஆட்சியைக் கொண்டுள்ள அதிபர் மைத்திரிபால சிறிசேனவின் அரசாங்கத்தை மிகச் சாதாரணமாகப் பலவீனப்படுத்தும் என்பதை விட இதனால் பல்வேறு விளைவுகள் ஏற்படும் என ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர்.

### நல்ல வாய்ப்பை தவற விட்டுவிட்டார் சிறிசேன

நாட்டின் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படும் மற்றும் இராணுவமயமாக்கல் மற்றும் ஊழல் மோசடி போன்றன ஒழிக்கப்படும் மற்றும் நீண்ட கால யுத்தத்தால் ஏற்பட்ட வடுக்கள் ஆற்றுப்படுத்தப்படும் என இலங்கையர்கள் நம்பிக்கை கொண்டதன் மூலமே 2015ல் சிறிய கட்சிகளின் கூட்டணியுடன் சிறிசேன அதிபரானார்.

ஆனால் சிறிசேன தான் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. தற்போது இடம்பெற்ற தேர்தலில் சிறிசேனவின் கட்சி குறைந்த வாக்குகளைப் பெற்றமை, இவர் நாட்டில் சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்காக வழங்கப்பட்ட வாய்ப்பைத் தவறவிட்டுவிட்டார் என்பதையே சுட்டிக் காட்டுகிறது.

'இத்தேர்தல் பெறுபேறானது, சீர்திருத்தத்தை நாட்டில் ஏற்படுத்துவதற்காக சிறிசேனவிற்கு வழங்கப்பட்ட வாய்ப்பிற்கான கதவு மூடப்பட்டு விட்டது என்பதையே தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறது. இதனை மீண்டும் திறப்பதென்பது மிகவும் கடினமானதாகும்' என கொழும்பு பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானத் திணைக்களத்தின் முன்னாள் தலைவர் ஜெயதேவ உயங்கொட தெரிவித்துள்ளார்.

### முறுகலால் வந்தவினை

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து 2015ல் சிறிசேன கூட்டணி அரசாங்கத்தை அமைத்துக் கொண்டார். உள்ளூராட்சித் தேர்தல் அண்மித்த போது, இவ்விரு தலைவர்களுக்கும் இடையில் முறுகல் நிலை தொடங்கியது. தனது நிகழ்ச்சி நிரலைஐக்கியதேசியக்கட்சிபின்பற்றுவதாக சிறிசேன குற்றம் சுமத்தினார்.

இவ்விரு தலைவர்களுக்கும் இடையிலான வாதப் பிரதிவாதங்கள் மஹிந்த ராஜபக்ஷவின் கட்சி தேர்தலில் அமோக ஆதரவைப் பெறுவதற்கு வழிவகுத்தது.

'கடந்த இரண்டு ஆண்டுகளாக, கூட்டணி அரசாங்கம் குறிப்பிடத்தக்க வகையில் எதையும் புதிதாகச் செய்யவில்லை' என உயங்கொட தெரிவித்தார்.

'தேசிய அரசாங்க ஒற்றுமையற்றுச் செயற்படுகின்றது. குறிப்பாக கடந்த மாதம் இடம்பெற்ற தேர்தல் பரப்புரையின் போது கருத்து வேறுபாடுகளைக் கொண்டிருந்தது. இது குழப்பம் நிறைந்த அரசாங்கம் என்கின்ற சமிக்ஞையை இவர்கள் தமது ஒற்றுமையின்மை மூலம் வெளிப் படுத்தியுள்ளனர். இதனால் மக்கள் மிகப் பலமான ஓர் அரசாங்கத்தை விரும்புகிறார்கள் என்பதை வெளிப்படையாகத் தெரிவித்துள்ளனர்.

**'இலங்கையர்கள் கையறு நிலையிலுள்ளனர். அவர்கள் இலங்கையை மீளக் கட்டியெழுப்ப விரும்புகிறார்கள் என்பதை உள்ளூராட்சித் தேர்தல் வெற்றி தெளி வாகச் சுட்டிக்காட்டுகின்றது' என ராஜபக்ஷ தனது முகப்புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.**

ராஜபக்ஷ ஒரு பலமான ஆட்சியாளருக்கான மற்றும் உறுதியான அரசாங்கத்திற்கான வேட்பாளராக உள்ளார்' என உயங்கொட குறிப்பிட்டுள்ளார்.

வன்முறைகள் நிரம்பிய தேர்தல்கள் இடம்பெறும் இந்த நாட்டில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் மக் கள் மிகவும் அமைதியாக வாக்களித்த அதேவேளையில், பல்வேறு உள்ளூராட்சி சபைகளில் கட்சிகளால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமைவாக வாக்குகள் மீள எண்ணப்பட்டதால் தேர்தல் ஆணையம் தாமதமாகவே பெறுபேறுகளை அறிவிக்க வேண்டியேற்பட்டது.

### பெரமுனவுக்கு 225 சபைகள்

341 உள்ளூராட்சி சபைகளில் ராஜபக்ஷவின் சிறிலங்கா பொதுஜன முன்னணி 225 சபைகளில் வெற்றியீட்டியதுடன், ஐக்கிய தேசியக் கட்சி 41 சபைகளையும், சிறிசேனவின் சிறி லங்கா சுதந்திரக் கட்சி சிறிய கட்சிகளுடன் இணைந்து 14 சபைகளிலும் வெற்றியீட்டியுள்ளது.

இலங்கையின் வரலாற்றில் முதற்தடவையாக, தேர்தலில் குறைந்தது 25 சதவீத பெண் வேட்பாளர்கள் போட்டியிட வேண்டும் என கட்சிகளிடம் வலியுறுத்தப்பட்டது. இந்நிலையில் தற்போது உள்ளூராட்சி சபைகளில் 2 சதவீத பெண்பிரதிநிதித்துவம் காணப்படும் நிலையில் தற்போது அமைக்கப்படவுள்ள புதிய உள்ளூராட்சி சபைகளில் மேலும் பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்படும் என நம்பப்படுகிறது.

'உண்மையில் 50 சதவீதம் பெண் பிரதிநிதித்துவம் காணப்பட வேண்டும். ஆனால் இதனைக் கற்பனை செய்வதற்கே கடினமாக உள்ளது' என முதன் முதலாக வாக்களித்த 20 வயதான டுலானி பரவி தான தெரிவித்தார்.

தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் இரண்டு ஆளும் கட்சிகளும் 2019ல் இடம்பெறவுள்ள அதிபர் தேர்தலில் ராஜபக்ஷவின் கட்சி போட்டியிடாது என்பதை உறுதி செய்வதற்கான மாற்றங்களை முன்னெடுக்க வேண்டும்.

சிறிசேன தனது அமைச்ச ரவையை மாற்றியமைப்பார் என அவரது கட்சி உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர். 'இத் தேர்தலானது ஒரு பின்னடைவாகும், ஆனால் பெரும்பாலான இலங்கையர்கள் ராஜபக்ஷவுக்கு எதிரானவர்களாவர்' என சிறிசேனவின் சுகாதார அமைச்சரான ராஜித சேனரத்ன தெரிவித்தார்.

நீண்ட காலமாக அரசியலில் நிலைத்திருக்கும் சிறிசேன, தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியிலிருந்து மீண்டெழ வேண்டும். பல பத்தாண்டுகளாக சிறி சேனவும் ராஜபக்சவும் சிறிலங்கா சுதந் திரக் கட்சியின் விசுவாசிகளாக இருந்துள்ளனர். சிறிசேன இக்கட்சியின் பொதுச் செய லராக 13 ஆண்டுகள் செயலாற்றியுள்ளார்.

2015 இல், மகிந்தவை எதிர்த்து சிறிசேன போட்டியிட்டு அதிபரானார். இதன் பின்னர் இவர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பொறுப்பை எடுத்துக் கொண்டார். இதனைத் தொடர்ந்து ராஜபக்ஷ புதிய கட்சியை ஆரம்பித்தார். நாட்டில் இடம்பெறும் ஊழல் மோசடிகளை முடிவிற்குக் கொண்டு வருவதாகவும் இராணுவத்தை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதாகவும் சிறிசேன வாக்குறுதி வழங்கியிருந்தார்.

ராஜபக்ஷவிற்கு ஆதரவான வாக்கு வங்கியைக் குறைப்பதற்கான நடவடிக்கையை சிறிசேன முன்னெடுக்காதது மட்டுமன்றி இவரது குழப்பகரமா ன சமிக்ஞைகள் இவருக்கான ஆதரவைப் பெறுவதிலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதையே சனிக்கிழமை இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தல்களின் பெறுபேறுகள் சுட்டிக்காட்டுவதாக அவதானிகள் பலரும் கூறுகின்றனர்.

**என்ன செய்யப் போகிறார் ஜனாதிபதி மைத்திரி?**



# திருநீற்றுப் புதன் இன்று

### 40 நாள்கள் வழிபாடுகளில் இணைந்து

# இறை உறவில் சங்கமிக்கும் நாள்

இன்று விபூதி புதன். உலகெங்கும் உள்ள கிறிஸ்தவர்கள் தவக்காலத்தை இறை இயேசுவின் பாடுகள் மரணம் பற்றி தியானித்து ஆன்மிகப் பயணத்தைத் தொடரும் 40 நாள்கள் வழிபாடுகளில் இணைந்து நெற்றியில் விபூதி பூசி இறை உறவில் சங்கமிக்கும் நாள்.



'மனிதனே நீ மண்ணாக இருக்கிறாய்; நீ மண்ணுக்கே திரும்புவாய்" என எமது வாழ்வின் எண்ணங்கள், செயல்கள், மரணம் பற்றிய சிந்தனைகளை ஆன்மிக வழியில் தியானிக்க அழைக்கும் காலமே தவக்காலமாகும். இக் காலத்தில் ஒறுத்தல், உபவாசம், மாமிசத் தவிர்ப்பு மூலம் தம்மைதூய்மையாக்கும் நாளாகும்.

மனிதன் பிறர் மீது கொள்ளும் காதல் பல எதிர்ப் பார்ப்புகள், சுய நலன்கள், தமது வாழ்வை மகிழ்ச்சிப்படுத்த மேற்கொள்ளும் களியாட்டங்கள், பரிசுப் பரிமாற்றங்கள் அன்பின் வெளிப்பாடாக வெளிப் படுத்தி மகிழ்ச்சியை தேடும் காலமதில் இறைவன் மனிதன் மீது கொண்ட காதல் மனித வாழ்வில் ஏற்படும் தவறுகள், துன்பங்கள், யோசனைகளால் ஏற்படும் பாவச் சுமைகளை களைவதற்காக இறைவன் மனிதனாகி மனித பாவங்களை களைய தன்னை அர்ப்பணிக்கும் நாளாக, தன் அன்பை, காதலை எமது துன்ப சுமைகளை தாங்கி மனித விடுதலைக்காக தன்னையே எமது வாழ்வுக்காக அர்ப்பணித்த நாளை தவக் காலமாக நினைவு கூருகின்றோம். இறை உறவில் சங்கமிக்க எம்மை இணைத்துதவக்காலபயணத்தில்ஒன்றிணைவோம்.


இத்தவக்காலம் அர்த்தமுள்ளதாக செப, தப,தான வாழ்வைச் சுத்தப்படுத்தி, மனமாற்றத்தின் காலத்தில் எமது வாழ்வை ஒறுத்தலில், பகிர்தலில், ஆன்மிகத்தை எம்மில் ஆழப்படுத்தி தன்னலப் பயணத்தை அர்த்தமுள்ளதாக்குவோம்.

**செ.யோசெப் பாலா**

★ ★ ★

இன்று திருநீற்றுப் புதன் அல்லது விபூதிப் புதன் அல்லது சாம்பல் புதன் என அழைப்ப தோடு நாம் தவக்காலத்தின் 40 நாள்களுக்குள் கால் பதிக்கிறோம்.

விபூதிப் புதன் என்றும், திருநீற்றுப் புதன் அல்லது சாம்பல் புதன் எனவும் அழைக்கப்படுகின்ற இந்நாளில் ஆசீர்வதிக்கப்பட்ட சாம்பலை, குருவானவர் எமது முன் நெற்றியில் நீ மண்ணாக இருக்கின்றாய், மண்ணுக்கே திரும்புவாய் என்பதை மறவாதே என்று பூசி, சிலுவை அடையாளம் வரைய அனுமதிக்கிறோம். சாம்பல் எம் மீது பூசப்பட அனுமதித்தல் தவத்திற்கும், தன்னொறுத்த லுக்கும் மன மாற்றத்திற்கும் அடையாளம் எனக் கருதப்படுகின்றது.



கடந்த காலத்தில் நாம் செய்த எமது பாவத் தவறுகளை உணர்ந்து திருந்தவும், மீண் டும் அதேவிதமான பாவத் தவறுகளைச் செய்யாமல் உறுதியெடுக்கவும், மனம் வருந்தி உண்ணா நோன்பு இருந்து நம்மை நாமே தூய மனிதர்களாகத் தயார் செய்து கொள்ளக் கடவுளால் தரப்பட்டிருக்கும் காலம் தவக் காலம் எனப்படுவதனால், திருந்தி வா மனம் திரும்பி வா என அன்னையாம் திருச்சபை எம்மைப் பெயர் சொல்லி அழைக்கின்றது.

இன்று நாம் ஆரம்பிக்கும் தவக்காலத்தின் 40 நாள்களும் எமது உள்ளார்ந்த மனிதனை ஆண்டவர் இயேசுவோடு பாலை நிலத்தில் உலா வர அனுமதிப்போம். எமது கடந்த காலப் பாவத் தவறுகளைக் கண்ட றிந்து, எமது பலவீனங்களை இறைவனின் பலத்தின் மூலம் நிவர்த்தி செய்து கொள்ளும் அரிய சந்தர்ப்பமாக இத்தவக்காலத்தைக் கருதுவோம்.

ஏனெனில் மீண்டும் ஒரு தவக்காலம் எமக்குத் தரப்படுமோ நாமறியோம், ஆதலால், மனம் வருந்தி தகுந்த பாவப்பொறுத்தலைப் பெற்றுக்கொள்வோம் என்ற சிந்தனையோடு தொடரும் திருப்பலியில் உருக்கத்தோடு பங்கெடுப்போம்.

**அல்பிறட் ஞானராஜா**



# காணாமல் ஆக்கப்பட்டோரை கண்டுபிடிக்க ஓர் அலுவலகம்?

இலங்கையில் 2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்கு முன்பும், பின்பும் உள்நாட்டு போர் நிலைமைகளினால் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக அலுவலகம் ஒன்றை அமைப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு, இறுதியில் அலுவலகமும் அமைக்கப்பட்டு விட்டது.

ஆயினும் அண்மையில் யாழ்ப்பாணத்தில் தேர்தல் பிரசாரக்கூட்டம் ஒன்றில் பேசிய நாட்டின் ஜனாதிபதி காணாமல் ஆக்கப்பட்டோரை நாம் எல்லா இடமும் தேடிக் கண்டுபிடிக்க முடியவில்லை. அவர்கள் எங்குமே இல்லை. அவர்களுக்காக பணம் மட்டுமே கொடுக்க முடியும் என்று இறுதியாகக் கூறிவிட்ட நிலையில் அமைக்கப்பட்டுள்ள அலுவலகம் காணாமல் ஆக்கப்பட்டோரைக் கண்டுபிடிக்குமா? என்ற கேள்வி உறவுகளைத்தேடித் தேடி அலையும் குடும்பத் தலைவிகளுக்கு பேரிடியாகவே இச் செய்தி உள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழு வின் 30/1தீர்மானத்திற்கமைய அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நிலைமாற்றுக் கால நீதியில் எடுத்துக்காட்டப்பட்ட நான்கு மூலோபாயங்களில் ஒன்றுதான் காணாமல் ஆக்கப்பட்டோரின் அலுவலகம் ஒன்றை அமைத்தல் கூறப்பட்ட நான்கு அணுகுமுறைக ளையும் இலங்கையில் போர்க்கால சூழ்நிலை பாதிக்கப்பட்டோருக்கான தீர்வாக நடை முறைப்படுத்துவதாக உறுதியளித்த அர சாங்கம் , 28 மாதங்களில் பின் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகத்தை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இவ்வலுவலகத்தின் மெத்தனமான போக்கு, வெளிப்படைத் தன்மை காணப்படாமை, பாதிக்கப்பட்டோரின் கலந்தாலோசனை இன்மை என்பன அலுவலகத்தின் செயற்பாடு களை ஐயப்பாட்டிற்கு உட்படுத்தியுள்ளது. 2016 நடுப்பகுதியில் ஒரு சிறிய அரச குழு மூலம் வரையப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்திற்கான சட்ட வரைபு மக்களுக்கு வெளிப்படுத்தாமை அரச நல்லிணக்க செயற் பாடுகளை எப்படியாக மக்கள் மத்தியில் எடுத்துச்சொல்லப் போகின்றது என்பதனையும் கேள்விக்குள்ளாக்கியது. இந்த நிலையில் அரசாங்கத்தின் இவ்வாறான செயற்பாட்டை சிவில் சமூகத்தினர் விமர்சித்து வந்த நிலையில் ஆலோசனை செயலணி (CTF) ஒன்று நிறுவப்பட்டு மக்களின் பரந்துபட்ட அபிப்பிரா யங்கள் பெறப்பட்டன. சிவில் சமூகத்தினரின் ஈடுபாட்டுடன் பயணித்த ஆலோசனைச் செயலணி 2016 ஒகஸ்ட் மாதத்தில் ஓர் இடைக்கால அறிக்கையினை சமர்ப்பித்தது.

இவ்வறிக்கைகூட எழுத்தளவிலும் சில ஆலோசனைக் கூட்டங்களில் சமர்ப்பிக்கப் பட்ட முடிவுகளை அடிப்படையாகக் கொண்டுமே எடுக்கப்பட்டிருந்தது. இவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால அறிக்கை மதிப்பீடு செய்யப்பட முன்னமே 2016 ஒகஸ்ட் மாதத்தில் நாடாளுமன்றில் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் அமைத்தல் தொடர்பான சட்டவரைபு சமர்ப்பிக்கப்பட்டது.

ஆலோசனைச் செயலணியின் இடைக்கால அறிக்கை மதிப்பீடு செய்யப்பட முன்னரே நாடாளுமன்றின் காணாமல் ஆக்கப்பட்டோருக் கான அலுவலகம் தொடர்பான சட்டவரைபு சில திருத்தங்களுடன் 2016 ஒகஸ்ட் 23 இல் சட்டமாக்கப்பட்டது. ஆயினும் ஆலோசனைச் செயலணியின் இறுதி அறிக்கை 2017 ஜனவரி 3 ஆம் திகதியே வெளியாகியது.

காணாமல் ஆக்கப்பட்டோரது சட்ட மூலம் 2017 ஜுன் 22 இல் மேலதிக திருத்தங்களுடனும் சுயாதீன நிதிப் பங்களிப்பு ஒழுங்குகளுடனும் நிறைவேற்றப்பட்டிருந்த போதிலும் இவ்வலுவலகம் இன்றும் அரச நிதியிலேயே அதன் செயற்பாட்டிற்கு தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. எப்படியிருந்த போதிலும் 2017 ஜுலை 19 ஆம் திகதியிலேயே ஜனாதிபதி வர்த்த மானியில் கையொப்பம் இட்டதனைத் தொடர்ந்து இவ்வலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டு இயங்கத் தொடங்கியுள்ள தோடு தேசிய ஒருமைப்பாட்டு நல்லிணக்க அமைச்சின் கீழ் இயங்கத் தொடங்கியுள்ளது.

மேலும் 2017 ஒக்டோபர் 10 ஆம் திகதி மீண்டும் ஒரு சோதனையை காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் சந்தித்தது. இவ்வலுவலகத்திற்கான அங்கத்தவர்களைத் தெரிவு செய்யும் பொறுப்பு இலங்கையின் அரசமைப்பு (Constitutional Council)சபையிடம் ஒப்படைக்கப்பட்டது. இதற்கான தேர்வாளர்களுக்கான விண்ணப்பம் பத்திரிகைகள் மூலம் பிரசுரிக்கப்பட்டு பொருத்தமானவர்கள் விண்ணப்பிக்கும் படிக் கேட்கப்பட்டனர்.

2017 நவம்பர் 6 ஆம் திகதி இதற்கான முடிவுத் திகதி அறிவிக்கப்பட்டு 7 அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்கள் இது வரை அரசமைப்பு சபையினால் அங்கீகாரம் பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இச் செயற்பாடுகள் யாவும்அரசின் வெளிப்படைத் தன்மையையும் பலவீனத்தையும் எடுத்துக் காட்டுவதாகவுள்ளன.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகத்தின் செயற்பாட்டிற்காக வரவு செலவுத் திட்டத்தில் 2017 டிசெம்பரில் 1.4 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. இந்நிதி மூலம் திறமையான ஒரு செயற்பாட்டை இவ்வலுவலகம் நகர்த்துவதற்கு ஜனநாயக நீரோட்டத்தில் உள்ள பல தடைகள் யாவும் நீக்கப்பட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயமான நீதி கிடைப்பதற்கு இவ்வலுவலகம் தயாராகுமா?

ஒரு நாட்டின் படைப்பிரிவு பொலிஸ்காவல் துறையினரின் முக்கிய செயற்பாடு நாட்டு மக்களுக்கும், நாட்டுக்கும் பாதுகாப்பு வழங்குவதே. இந்நிலையில் எங்களுக்குப் பாதுகாப்பு வழங்குங்கள் என்று சரணடைந்த மூவாயிரத்திற்கும் மேற்பட்ட முன்னாள் போராளிகள் எம்மிடம் இல்லை என்று கைவிரித்து விட்டமை, எந்தப் பாதுகாப்புச் சட்டத்துக்குள் அடங்கும்? தமது உறவுகளைத் தேடி 352 நாள்களாக கிளிநொச்சியில் (13.02.2018) இன்று வரை தமது போராட்டத்தைத் தொடர்ந்து வரும் தாய்மார்களுக்கு இந்த அலுவலகம் கூறப்போகும் பதில் தான் என்ன?

**சரோஜா சிவசந்திரன்**
*பணிப்பாளர்*
*மகளிர் அபிவிருத்தி நிலையம்*



தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது. 'உன்னைச் சரணடைந்தேன்' என்ற அவரது தொகுப்பில் 'யாழில் கம்பன்' பற்றிய தொடர் பதிவு இது.



# ரயிலிலிருந்து கடத்தப்பட்டோம்

இதற்கிடையில் எங்களை இராணுவம் தடுத்து வைத்திருக்கும் செய்தி, வவுனியா முழுக்கப் பரவியிருந்தது. நாங்கள் ஸ்ரேசனுக்கு வர அங்கிருந்த தமிழ் ஸ்ரேசன் மாஸ்ரர் ஒருவர், அக்கறையாய் நடந்தவற்றை விசாரித்தார். ''பிரபாகரன் மாளிகைச் செய்தி பொய்யா?'' என ஆச்சரியப்பட்டுக் கேட்டார். அவருக்குப் பக்கத்தில் ஒரு சிங்களப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் நின்றிருந்தார். ஸ்ரேசன் மாஸ்ரர் எங்களுக்கு நடந்ததையெல்லாம், அந்த இன்ஸ்பெக்டருக்கு சிங்களத்தில் சொல்ல அவரும் அனைத்தையும் ஆச்சரியமாய் கேட்டார். பிறகு நாங்கள் ரயிலில் ஏறி எங்கள் இருக்கைகளில் அமர்ந்துவிட்டோம். துன்பம் தீர்ந்த மகிழ்ச்சியில் நாங்கள் சிரித்துப் பேசியபடி இருந்தோம். ரயில் புறப்பட ஆயத்தமாயிற்று. திடீரென ஏழெட்டுப் பேர் காற்சட்டை, ரீசேட்டுடனும் விதம் விதமான தாடி, மீசைகளுடனும், கைத் துப்பாக்கிகளுடனும் நாங்கள் இருந்த ரயில் பெட்டிக்குள் ஏறினர். நடப்பது என்ன என நாம் அறிவதற்கு முன் அவர்கள் எங்கள் அருகில் வந்து, துப்பாக்கியைக் காட்டி, உடன் எங்களை ரயிலால் இறங்கச் சொன்னார்கள். ரத்தினகுமார் துணிந்து அவர்களை 'நீங்கள் யார்?' என மிரட்டிக் கேட்டார். தாங்கள் இராணுவம் என்றார்கள். அதற்கான அடையாள அட்டையைக் காட்டினால்தான் இறங்குவோம் என ரத்தினகுமார் தர்க்கித்தார். பின்னர் அவர்களில் தலைவனாய் இருந்தவனைத் தள்ளி விட்டு, ரயிலால் குதித்து நாம் வரும் போது வாசலில் நின்ற பொலிஸ் இன்ஸ்பெக்டரை நோக்கி ஓடத் தொடங்கினார். ரத்தினகுமார் ஓட, அவர்கள் துப்பாக்கியுடன் துரத்த, நாம் பின்னால் ஓட, ரயில்வே ஸ்ரேசன் அல்லோலகல்லோலப்பட்டது. ஓடும் ரத்தினகுமாரை, துப்பாக்கி வைத்திருப்பவன் சுட்டு விடுவானோ? என நான் பதறிப் போனேன். நல்ல வேளை அவன் சுடவில்லை. வாசலில் நின்ற இன்ஸ்பெக்டரிடம் ரத்தினகுமார் விடயத்தைச் சொல்ல, வந்தவர்களிடம் அவர் ஏதோ சிங்களத்தில் கதைத்து விட்டு, நீங்கள் அவர்களுடன் போகத்தான் வேண்டும் என்று சொல்லி விட்டார். அந்தக் குழுவினர் எம்மைச் சூழ்ந்தபடி, துப்பாக்கி முனையில் எம்மை ஸ்ரேசனுக்கு வெளியே கொண்டு வந்தனர்.

★ ★ ★

### தப்பிய ரகுபரன் அகப்பட்டான்

இந்தக் கலவரத்தில் திடீரெனத் திரும்பிப் பார்த்தால் உடன் வந்த ரகுபரனையும், தந்தையையும் காணவில்லை. அவ்விருவரும் மெல்லத் தண்டவாளத்தில் இறங்கி, 'ஸ்ரேசனின்' பிற்பகுதியால் நழுவியிருந்தனர். அவ்விருவராவது தப்பினால் எங்கள் நிலையை யாருக்காவது போய்ச் சொல்வார்களே என நினைந்து, திருப்தியுற்றோம். ஆனால், 'ஸ்ரேசனு' க்கு வெளியில் நாங்கள் வருகையில் அவ்விருவரையும் வேறொருவன் துப்பாக்கி முனையில் பின்பக்கத்தால் கூட்டி வந்தான். அந்த துரதிஷ்டமான நிலையிலும் ரகுபரன், தான் அகப்பட்டதை நினைந்து விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டு வந்த காட்சி இப்போதும் என் கண்களில் நிற்கிறது.

★ ★ ★

### 'வானில்' ஏற்றப்பட்டோம்

நான், ரத்தினகுமார், குமாரதாசன், ரகுபரன், எங்கள் அத்தான், ரகுபரனின் அப்பா என, எம் ஆறு பேரையும் வெளியில் நின்ற வான் ஒன்றினுள் ஏற்றினார்கள். நெற்றிப் பொட்டில் துப்பாக்கி முனையை வைத்து ஒருவரோடொருவர் பேசக் கூடாது என உத்தரவிட்டார்கள். வான் சிறிது தூரம் போனதும் அதனை இடையில் நிறுத்தி வேறொரு வானுக்குள் எல்லோரையும் மாற்றி ஏற்றினார்கள். வான் ஒரு காட்டிற்குள் போகத் தொடங்கியது. நாம் கொல்லப்படப் போகிறோம் என்பது ஐயத்திற்கு இடமில்லாமல் மனதில் பதிந்தது. புத்தி அச்சத்தின் உச்சத்தைத் தொட்டது. எங்கள் கோட்டத்தை பிரபாகரனின் மாளிகை என, அவர்கள் தவறாக அறிவித்த செய்தி, ஆங்கில, சிங் கள, தமிழ் பத்திரிகை அனைத்திலும் வெளிவந்திருந்தது. நாம் கொழும்பு போனால் எல்லோருக்கும் உண்மை தெரிய வந்துவிடும் என்பதால் எம்மை அழிக்கப் போகிறார்கள் என, புத்தி ஊகித்தது. அப்போதும் ரத்தினகுமார் ரகசியமாய் என் கையைப் பிடித்து இறுக்கி அஞ்சாமல் இருக்கும்படி உணர்த்தினார். எனக்கு என்னை விட மற்றவர்களைப் பற்றித்தான் அதிகம் கவலையாக இருந்தது. குமாரதாசனின் மகன் தந்தையைப் பிரிந்து ஒரு நிமிஷமும் இருக்க மாட்டான். அத்தான் இல்லாத அக்காவின் குடும்ப நிலை, கஷ்டப்பட்டு மகனை டாக்டராக்கிய ரத்தினகுமாரின் குடும்ப நிலை, இவற்றையெல்லாம் நினைக்க நினைக்க, என் மனம் எல்லையின்றி வேதனைப்பட்டது. எனது முயற்சிக்குத் துணை செய்யவந்து, இவர்கள் எல்லாம் வருந்தப்போகிறார்களே என, நினைந்து நினைந்து வாட்டமுற்றேன்.

★ ★ ★

### காட்டுக்குள் இருந்த வீட்டுக்குள் அடைக்கப்பட்டோம்

நேரம் கிட்டத்தட்ட நடுச்சாமம் ஆகிக் கொண்டிருந்தது. வெளிச்சமே இல்லாத ஒரு காட்டுப் பகுதிக்குள் இருந்த ஒரு வீட்டின் வாசலில் எங்களை அழைத்துச் சென்ற வான் நின்றது. துப்பாக்கிமுனையில் இறக்கப்பட்டு, அந்த வீட்டினுள் இருந்த அறைகளில் இருவர் இருவராக அடைக்கப்பட்டோம்.

★ ★ ★

### அப்போதும் தூங்கிய ரகுபரன்

என்னையும் ரகுபரனையும் ஓர் அறையில் அடைத்தார்கள். ரகுபரன் துளியேனும் பயப்பட்டதாகத் தெரியவில்லை. எனக்கு எரிச்சல் வரும்படி, நடந்ததை நினைந்து சிரித்துக் கொண்டேயிருந்தான். பிறகு கொஞ்ச நேரத்தால் 'எனக்கு நித்திரை வருகுது, இதுல கிடக்கிற கட்டில்ல கொஞ்ச நேரம் படுக்கட்டே?'' என்றான். அத்தகைய சூழலில் நித்திரை கொண்ட ஒரே ஆசாமி இவனாகத் தான் இருப்பான்.

★ ★ ★

### மனந்துணிந்தேன்

கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் அடைத்து வைக்கப்பட்டிருந்தோம். அந்த நேரத்தில் எனக்குள் ஓர் அதிசய மாற்றம் நிகழ்ந்தது. அச்சத்தின் உச்சியில் நின்ற எனது

**கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 95**

மனநிலையில், மெல்ல மெல்ல பயம் போய் தெளிவு பிறந்தது. அந்த ஒரு மணி நேரம் அசையாது இறைவனை வணங்கினேன். அந்தச் சூழ்சிலையில், அந்த நேரத்தில், இறைவனை வலிந்து வணங்கும் மனநிலை உருவானது ஆச்சரியம் தான். கொஞ்ச நேரத்தில் ஒரு சிலர் மீண்டும் துப்பாக்கிகளுடன் வந்தனர். ஒருவன் கையில் ஓர் அயன் பொக்ஸை எடுத்துச் சென்றான். ''சரி இன்றைக்கு சித்திரவதை தான்'' என்று முடிவு செய்தேன். அவர்க




ளோடு முரண்பட்டதால் ரத்தினகுமாரை, கடுமையாய்த் தண்டித்து விடுவார்களோ எனும் பயம் என்னை வாட்டியது. ஆனாலும் அப்போதைய மனத் தெளிவால் அச்சம் வரவில்லை. பிரார்த்தித்தபடி இருந்தேன்.

★ ★ ★

### விசாரணை தொடங்கியது

சிறிது நேரத்தில் என்னையும், ரத்தினகுமாரையும் மட்டும் வெளியே கொண்டு வந்தார்கள். இருவரையும் தனித்தனி அறைகளுக்கு அவர்கள் கூட்டிச்சென்றனர். என்னை அழைத்துச் சென்ற அறையில் ஒரு மேசை போடப்பட்டு அதன் முன் ஓர் இளைய இராணுவ அதிகாரி உட்கார்ந்திருந்தான். அவனுக்கு நேர் எதிரே மேசைக்கப்பால் போடப்பட்டிருந்த கதிரையில், அவர்கள் என்னை உட்கார வைத்தார்கள். எனக்குப் பின்னே நான்கு முரடர்கள் நின்று கொண்டனர். பின்னால் இருந்து என் தலையில் அடித்து என்னைக் கொல்லப் போகிறார்கள் என நினைத்தேன்.

★ ★ ★

### திடீரென வந்த துணிவு

ஏனோ தெரியவில்லை அப்போதும் எனக்கு அச்சம் வரவில்லை. எனக்கு முன்னிருந்த அதிகாரி விசாரணையைத் தொடங்கினான். அவனுக்கு ஓரளவு தமிழ் தெரிந்திருந்தது. அவன் ஓர் இஸ்லாமியன். மனம் நன்கு தெளிந்திருந்ததால், அவனை முந்திக் கொண்டு நான் பேசத் தொடங்கினேன். ''மேற்படி கட்டடத்திற்கு நான் தான் உரிமையாளன், என்னோடு வந்தவர்கள் நட்பால் எனக்குத் துணை செய்தவர்களே, அவர்களுக்கும் இதற்கும் ஒரு தொடர்பும் இல்லை. நீ யாரையாவது கொல்ல நினைத்தால் முதலில் என்னைக் கொல்!, என் கண் முன்னால் என்னோடு வந்தவர்களுக்கு எந்தத் துன்பமும் செய்யக் கூடாது. அப்படிச் செய்தால் இங்கேயே தற்கொலை செய்து உயிரை விடுவேன்'' என உறுதியாய்க் கூறினேன். என் வார்த்தைகள் அவனது மனதில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தின. என் மேல் அவனுக்கு மரியாதை உண்டாகியதை அவனது கண்கள் காட்டின. அவன் சிறிய பதற்றத்தோடு ''உங்களை நாங்கள் விசாரிக்கத் தான் அழைத்து வந்திருக்கிறோம். உங்களுக்கு எந்தத் தீமையும் செய்ய மாட்டோம்'' என்றான். நான் அவன் வார்த்தைகளை நம்பாமல் ''நான் குழந்தையில்லை. மூன்று நாள் தடுத்து வைத்து விசாரித்து விடுவித்த பின்னர், பெரும் குற்றவாளிகளைப் போல் எங்களைக் கடத்தி வந்திருக்கிறீர்கள். விசாரிப்பதானால் அங்கேயே வந்து விசாரித்திருக்கலாமே? உங்கள் வார்த்தையை நான் நம்ப மாட்டேன்'' எனக் கூறி முன் சொன்னதையே திரும்ப வலியுறுத்தினேன்.

★ ★ ★

### இராணுவ அதிகாரியின் மனமாற்றம்

அவன் சங்கடப்பட்டுப் போனான். மீண்டும் தான் சொன்னதை வலியுறுத்தினான். எனக்குப் பின்னால் நின்றவர்களை அழைத்து எங்கள் எல்லோருக்கும் தேநீர் கொண்டு வந்து கொடுக்கும்படி உத்தரவிட்டான். சுடச்சுட அனைவருக்கும் பால் தேநீர் வந்தது. இப்போது அவன் வார்த்தைகளில் எனக்கு நம்பிக்கை பிறந்திருந்தது. பின்னர் என்னை அவர்கள் விசாரிக்கத் தொடங்க கொஞ்சமும் பயமில்லாமல் அவர்களைத் திட்டித் தீர்த்தேன். ''இயக்கத்தின் ஆட்சியிலே தான் இவ்வளவு நாளும் இருந்தோம். அவர்களோடு தொடர்பு இல்லாமல் எப்படி இருந்திருக்க முடியும்? உங்கள் தலைவர்கள் கூட அவர்களை வந்து சந்தித்தார்களே, அவர்களை உங்களால் ஏதும் செய்ய முடியுமா? அப்பாவிகளைத் தான் எல்லோரும் வருத்துகிறீர்கள். நீங்கள் கடத்தி வந்த விதத்தில் எங்களில் ஒருவருக்கு 'ஹார்ட் அட்டாக்' வந்திருந்தால் உங்களால் என்ன செய்திருக்க முடியும்?'' என்று கேள்விகளால் அவர்களைத் துளைத்தெடுத்தேன். இப்போது அவர்களுக்கும் முழுமையாய் எங்கள் மேல் நம்பிக்கை பிறந்திருந்தது. நாம் இலக்கிய அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்றறிந்ததும், பொன்.சுந்தரலிங்கத்தைப் பற்றியும் எங்களிடம் விசாரித்தார்கள். அவர் எங்கள் மேல் அவ்வளவு பகை செய்திருந்தாலும், ஒரு நல்ல கலைஞரான அவருக்கு ஆபத்து வந்து விடக்கூடாது என்பதற்காக அவரும் சூழ்நிலை நெருக்கடி காரணமாகத் தான் இயக்கப் பாடல்கள் பாடினார் எனச் சொல்லி, அவரது பாதுகாப்பையும் உறுதி செய்தோம். நாம் சொன்னவையெல்லாம் அவர்களால் பதிவு செய்யப்பட்டன. பின்னர் இரவு முழுவதும் அங்கேயே தூங்கினோம். தமது மேலதிகாரி வந்ததும் காலையில் உங்களை விடுவிக்கிறோம் என்றார்கள். விடிந்ததும் அந்த இராணுவ வீரரில் சிலர், குளிக்கவும், பாத்ரூம் செல்லவும், தாங்களே எனக்குத் தண்ணீர் அள்ளிக்கொண்டு வந்து தந்தனர். அந்த அளவிற்கு அவர்களில் மாற்றம் வந்திருந்தது.

(தொடரும்...)

# கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் போன்றவர்கள் தேசிய அரசியலில் இருந்து ஓரங்கட்டப்பட வேண்டும்!



## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர

கொழும்பு, பெப். 14

நல்லாட்சி என்ற கொடுங்கோலாட்சியின் அழிவின் ஆரம்பம் உள்ளூராட்சி தேர்தலில் பிரதிபலித்துள்ளது.

கடந்த மூன்று வருடகாலமாக நல்லாட்சி அரசின் உறுப்பினர்கள் மக்களை தொடர்ச்சியாக ஏமாற்றி வந்ததன் பயனே பெரும் தோல்விக்கான முதற் காரணம்.

மேலும், தமிழ் மக்கள் தமக்கான விடுதலை மற்றும் உரிமைகளுடன் வாழ வேண்டுமாயின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் போன்றவர்கள் தேசிய அரசியலில் இருந்து ஓரங்கட்டப்பட வேண்டும் என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி அமோக வெற்றியை அடைந்துள்ளமை தொடர்பில் தெளிவுபடுத்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார் .

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டு மக்கள் நல்லாட்சி அரசின் தான்தோன்றித்தனமான ஆட்சிக்கு எதிராகவே தமது வெறுப்பினை வெளிப்படுத்தியுள்ளனர்.

நாட்டு மக்களுக்காக அல்லாமல் மேற்கத்தைய நாடுகளின் அதாவது இந்தியா,சீனாபோன்ற நாடுகளின் விருப்பத்திற்கே ஜனாதிபதி மற்றும் பிரதமர் செயற்பட்டனர். அதிகாரத்தினைப் பயன்படுத்தி சகல துறைகளிலும் துறைசார் சர்வாதிகாரமே காணப்பட்டது.

நல்லாட்சி என்ற பெயரில் நாட்டைப் பிளவுபடுத்தவே முற்பட்டனர். இந்த விடயத்தில் நாட்டு மக்கள் தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தினர். நாடு பிரிக்கப்பட்டால் குறித்த ஒரு தரப்பினர் மாத்திரம் நன்மை அடைவர்.

நாட்டைப் பிரிப்பதால் தமிழ் அரசியல்வாதிகளின் ஒருசிலரே நன்மை அடைவர். குறிப்பாக எதிர்க்கட்சித் தலைவர் புலம்பெயர்வாழ் தமிழர்களை மாத்திரம் பிரதிநிதித்துவப் படுத்துவதாகவே காணப்படுகின்றது. மலைநாட்டுப் பிரதேசங்களின் நலனைப் பற்றி ஒருபொழுதும் நினைக்கவில்லை. ஆனால் அவர்களே தமிழ் மக்களின் ஒருமைப்பாடு பற்றி பேசுகின்றனர்.

வடகிழக்கில் வாழும் தமிழ் மக்கள் தற்போது உண்மை நிலையினை அறிந்துள்ளனர். அவர்களின் தீர்க்கப்படாத பிரச்சினைகளுக்கு நல்லாட்சி அரசு பொய்யான வாக்குறுதிகளை முன்வைத்தமையால் தற்போது விரக்தியுற்றுள்ளனர்.

நாட்டில் கடந்த காலத்தில் இடம் பெற்ற கசப்பான அனுபவங்களை மக்கள் மத்தியில் மீண்டும் ஆஉருவாக்கி தமது தேவைகளை நிறை வேற்றிக் கொள்வதற்காக தமிழ் மற்றும் சிங்கள மக்கள் மத்தியில் இனவாதத்தினை உருவாக்க முயல்வதை தமிழ் மக்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

தமிழ் மக்கள் தமக்கான விடுதலை மற்றும் உரிமைகளுடன் இலங்கையர் என்ற அடையாளத்துடன் ஒருமித்து வாழ வேண்டுமாயின் சம்பந்தன் மற்றும் சுமந்திரன் போன்ற அரசியல்வாதிகளுக்கு எதிராக ஒரு சிறந்த தலைவரை உருவாக்கிக் கொள்ளவேண்டும்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவு அளித்தவர்கள் சாதாரண பாமர மக்கள். குறிப்பாக பல வழிமுறைகளிலும் தமது உரிமைகளை இழந்து வாழும் மலைநாட்டு மக்கள் என்பதை முழு நாட்டு மக்களும் புரிந்து கொள்ள வேண்டும்.

வரலாற்றுப் புகழ் கொண்ட இலங்கையின் அரசியல் தற்போது தனது தூய்மையினை இழந்துள்ளது. தேசிய அரசின் ஜனாதிபதி மற்றும் பிரதமர் உட்பட சில தரப்பினர் அரசியலை விட்டு முழுமையாக வெளியேற வேண்டும். அன்றுதான் நல்லாட்சி என்ற நாமம் முழுமையடையும். அதற்கு நாட்டு மக்கள் எதிர்காலத்திலும் தமது பூரண ஒத்துழைப்பினை வழங்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

(க)

## 400 கோடி ரூபாய் மோசடி செய்த முன்னாள் செயலாளரை கைது செய்ய உத்தரவு!

*கொழும்பு, பெப். 14*

*நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சின் முன்னாள் செயலாளரை உடனடியாகக் கைது செய்யுமாறு பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.*

*நில்வளா கங்கை செயற் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியில் 400 கோடி ரூபாவை முறையற்ற வகையில் பயன்படுத்தியமை தொடர்பிலேயே இவருக்கு பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.*

*நிதி மோசடி தவிர்ப்புப் பிரிவினரால் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குத் தொடர்பான விசாரணையின்போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.*

## காபந்து அரசு ஒன்றை உருவாக்கவேண்டும்!



வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு

காபந்து அரசு ஒன்றை உருவாக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றம்உடனடியாகக் கலைக்கப்பட்டு தேர்தல் நடத்தப்பட வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்துடன் நாடாளுமன்றைக் கலைப்பது குறித்து ஏனைய கட்சிகளுடன் பேச்சு நடத்தத் தயார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரானதரப்புக்களுடன் இணைந்து நாடாளுமன்றைக் கலைத்து தேர்தல் நடத்துவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

காபந்து அரசின் தலைவராக சமல் ராஜபக்ஷவை நியமிக்க வேண்டும்.

சட்ட ரீதியாக இந்த அரசை பதவி விலக்க முடியாது என்ற போதிலும், தொடர்ந்தும் ஆட்சியில் நீடிக்க மக்கள் ஆணை வழங்கவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## கார் ரயிலில் மோதி விபத்து; படுகாயமுற்றார் சாரதி

கொழும்பு, பெப். 14

ராகம ரயில் நிலையத்திற்கு அருகே உள்ள ரயில் கடவையில் கார் ஒன்று ரயிலில் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கொழும்பிலிருந்து மஹவ பகுதிக்குச் சென்ற ரயிலுடனேயே கார் மோதி விபத்துக்குள்ளாகி உள்ளது.

விபத்து நடைபெற்ற போது காரச்சாரதி மட்டுமே இருந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## வலி.வடக்கு பிரதேச சபையில் மாவையின் மகனும் வெற்றி



யாழ்ப்பாணம், பெப். 14

உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் சார்பில் வலி.வடக்கு பிரதேச சபைக்குப் போட்டியிட்ட, தமிழ் அரசுக் கட்சியின்தலைவர் மாவை சேனாதிராசாவின் மகனும் வெற்றி பெற்றுள்ளார்.

வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்கு, மாவிட்டபுரம், வீமன்காமம் 9 ஆம் வட்டாரத்தில், மாவை சேனாதிராசாவின் மகன், கலையமுதன் போட்டியிட்டிருந்தார்.

இந்தத் தேர்தலில் அவர் வெற்றி பெற்றதன் மூலம், வலி.வடக்கு பிரதேசசபைக்குள் நுழையவுள்ளார்.

அதேவேளை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை உருவாக்குவதில் ஆரம்பத்தில் முக்கிய பங்காற்றியவரான, பொருளியல் ஆசான் வரதராஜனின் மகன் பார்த்தீபனும், யாழ். மாநகரசபைக்குத் தெரிவாகியுள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்க் காங்கிரஸின் சார்பில் அவர் கந்தர்மடம் வட்டாரத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளார்.

## எம்பிலிபிட்டிய பிரதேச சபையின் முன்னாள் உபதலைவர் மறியலில்

கொழும்பு, பெப். 14

எம்பிலிபிட்டிய பிரதேச சபையின் முன்னாள் உப தலைவர் சந்திரசிறி முனசிங்கவை இந்த மாதம் 15 ஆம்திகதிவரைவிளக்கமறியலில் வைக்குமாறு எம்பிலிபிட்டிய பதில் நீதிவான் டி. எஸ்.பி. தசநாயக்க உத்தரவிட்டுள்ளார்.

பொதுஜன பெரமுன கட்சியின் ஆதரவாளர் ஒருவரைத் தாக்கிக் காயத்திற்குள்ளாக்கியமை தொடர்பில் அவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, சந்தேக நபரினால் தாக்கப்பட்ட நபர்எம்பிலிபிட்டிய மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார் என குட்டிகல பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள நபர் இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஹிங்குர வட்டாரத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் போட்டியிட்டு தோல்வியடைந்திருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

(க)

9. மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கலாமா?

10. அரைக்காசுக்கு போன மானம் ஆயிரம் பொன் கொடுத்தாலும் வாராது

11. அழுதாலும் பிள்ளை அவளே பெறவேண்டும்

12. அறையிலாடியன்றோ அம்பலத்திலாடவேண்டும்

13. கைப்புண்ணுக்கு கண்ணாடி வேண்டுமா?

14. ஆறின கஞ்சி பழங்கஞ்சி

15. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்

## வினாத்தாள் 12 பகுதி- I விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. 3 | 11. 2 | 21.2 | 31. 1 |
| 2. 2 | 12. 2 | 22.2 | 32. 2 |
| 3. 1 | 13. 3 | 23.3 | 33. 3 |
| 4. 1 | 14. 1 | 24.2 | 34. 1 |
| 5. 3 | 15. 3 | 25.3 | 35. 3 |
| 6. 1 | 16. 3 | 26.3 | 36. 3 |
| 7. 2 | 17. 1 | 27.11 | 37. 3 |
| 8. 3 | 18. 1 | 28.3 | 38. 2 |
| 9. 2 | 19. 2 | 29.3 | 39. 1 |
| 10. 3 | 20. 3 | 30.2 | 40. 3 |

## வினாத்தாள் 12 பகுதி- II விடைகள்

1) 1. உறவினர்
2. 1. மாந்தர்
2. உதிரம்
3. அப்பா
4. உள்ளம்
3. கவிமணிதேசிகவிநாயகம் பிள்ளை
4. உடன் பிறந்தவர் போல்
5. நன்மைசெய்பவர்
6. ஓடும்
7. நீண்டகண்ணீரில்
8. நன்மை – தின்மை
2) 1. மாந்தா
2. உடன் பிறந்தவர்
3) மண்,மாலை,மெத்தை,மோடன்
4) 1. செய்தித்தாள்கள் படங்களுடன் செய்திகளையும் தகவல்களையும் தருகின்றன.
2. ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம்
5) 1. அகவும்
2. நாற்று
3. பிள்ளை
6) 1. சந்தர்ப்பத்தை தவறவிடக் கூடாது
2. எதையும் ஆராய்ந்து செய்
7) 1. குடிப்போம் 2. இருந்தன
3. கிளறின 4. நடைபெறும்

8) 1. தயவு செய்து வெளியேபோ
2. நான் ஒருபேனைவைத்திருக்கின்றேன்
9) I will clean the class room
10) 1.w 2.r
11) மமநான்ன
12) நான் பாடம் படிக்கிறேன்
13) பொருத்தமானவாக்கியங்களுக்கு 2 புள்ளிகள் வீதம் வழங்குக
14) 1. ஐந்தாயிரத்துஅறுபத்தேழு
2. XX
3. 105
4. 
5. 14
6. 15
7. 394
8. 658
9. 582
10. 117 மீதி 4
11. 1248, 1636, 4672, 6701
12. 2
13. 2
14. 4
15. 2
16. 2
17. 2
18. 2
19. 2
20. 4
21. 6
22. 4
23. 1
24. 1
24. 1
25. 1
26. 3
27. 3
28. 4
29. 1
30. 1
31. 3
32. 1
33. 2
34. 3
35. 3
36. 1
37. 2
38. 2
39. 1
40. 4
41.4
42.2



# கல்விக் கதிர் வெளியீடு

## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் வினாத்தாள்

தரம்-5

கீழே 'அ" பகுதியிலுள்ள பழமொழிகளுக்குப் பொருத்தமான கருத்துக்களை 'ஆ' பகுதியில் தரப்பட்ட விடைகளில் இருந்து தெரிந்து இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக

1. பேராசை பெருநட்டம் ☐
2. இரக்கப் போனாலும் சிறக்கப்போ ☐
3. உப்பிட்டவரை உள்ளவும் நினை ☐
4. ஆழம் அறியாமல் காலை விடாதே ☐
5. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு ☐
6. நித்தம்போனால் முத்தம் சலிக்கும் ☐
7. மதியாதார் முற்றம் மிதியாதே ☐
8. போதும் என்ற மனமே பொன்செய்யும் மருந்து ☐
9. விளையும் பயிரை முளையில் தெரியும் ☐
10. ஆனைக்கும் அடி சறுக்கும் ☐
11. தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் ☐
12. நிறைகுடம் தழும்பாது ☐
13. வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் ☐
14. வேலியே பயிரைமேய்ந்தது ☐
15. பட்டகாலிலேபடும் கெட்ட குடியே கெடும் ☐

### 'ஆ' பகுதி

1. அடிக்கடி சென்றால் யாருக்கும் சலிப்பு ஏற்படும்
2. வலியவனும் ஒரு நாள் மெலியானிடம் தோற்க நேரிடும்
3. எல்லை கடந்த ஆசை துன்பந்தரும்
4. பெருமைபடுத்தி வரவேற்காதவர்களிடம் செல்ல வேண்டாம்
5. சிலர் தாம் நினைத்ததையே சரியென்று வாதிப்பர்

6. வறுமையிலும் செம்மையாக வாழ வேண்டும்

7. அறிவு நிரம்பியவர்கள் அதிகம் உளற மாட்டார்கள்

8. நன்றி செய்தவரை மறத்தலாகாது

9. திறமை மிக்கவர் எதனையும் எளிதில் சாதிப்பார்

10. மனத் திருப்தி அளவில்லாத செல்வத்தைத் தரும்

11. ஒரு விடயத்தை நன்கு ஆராயாது அதில் ஈடுபடக் கூடாது

12. ஒற்றுமையே அதிக பலத்தைத் தரும்

13. இளங்காலச் செயல்களில் எதிர்கால வாழ்வு புலப்படும்

14. துன்பம் நேர்ந்தவர்கே தொடர்ந்தும் கஷ்டம் ஏற்படுதல்

15. காவற்காரனே சொத்தை அழிப்பது

கீழே 'அ" பகுதியிலுள்ள பழமொழிகளுக்குப் பொருத்தமான கருத்துக்களை 'ஆ' பகுதியில் தரப்பட்ட விடைகளில் இருந்து தெரிந்து இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக

1. ஒரு தாய்க்கு தனது பிள்ளை என்றும் சுமையில்லை ☐

2. போலிப் பொருடகளை கொண்டு காரியம் சாதிக்க துணிதல் ☐

3. தவறிழைத்துத் தண்டனை பெற்றவர் மீண்டும் அந்தத் தவறைச் செய்ய முனையார் ☐

4. நிதுசனமான ஓர் உண்மையை நிறுவுவதற்கு எதுவும் தேவையில்லை ☐

5. துன்பம் நேரினும் அவரவர் தத்தம் கருமங்களை தாமே செய்தல் வேண்டும் ☐

6. பிறருக்குத் துன்பம் ஏற்படும் போது அதன் விளைவு ஒருவருக்கு விளங்கா விட்டாலும் அத்துன்பம் தனகேற்படும்போது அதன் பாதிப்பு விளங்கும் ☐

7. சந்தர்ப்பம் கிடைக்கும் போது அதனை தக்கபடி பயன்படுத்த வேண்டும் ☐

8. ஒருவன் செய்யும் தீமைகள் அவனையே வந்து சேரும் ☐

9. நடந்து முடிந்த ஒன்றை பற்றி சிந்திப்பது பயனில்லை ☐



10. ஒருவன் தனது கருமங்களைப் பிற்போட்டுக் கொண்டு போனால் அவற்றை விரைவில் நிறை செய்வது கடினம் ☐

11. ஒருவன் தனது வேலை எவ்வளவு கஸ்டமாக இருந்தாலும் விடாது முயற்சி செய்தால் நிச்சயம் வெற்றி கிட்டும் ☐

12. எமக்கு சின்னப் பொருளாக இருந்தாலும் அதனைத் தூக்கி பேணிப்பாதுகாக்க வேண்டும் ☐

13. சின்னப் பிள்ளைகளின் பழக்க வழக்கங்கள் முதுமையானாலும் இறுதிவரை நிலைத்திருக்கும் ☐

14. ஒருவன் சிறு நன்மை கருதி இழக்கும்ம மதிப்பினை பின்பு எவ்வளவு முயன்றாலும் மீண்டும் பெற முடியாது ☐

15. ஒருவர் தனது காரியத்தை நன்கு பயிற்சி செய்த பின்பு பகிரங்கமாக காட்டல் வேண்டும் ☐

'ஆ' பகுதி

1. சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடாது

2. தலையிடியும் காய்ச்சலும் தனக்கு வந்தால் தெரியும்

3. அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது

4. சிறு துரும்பும் பல் குத்த உதவும்

5. தொட்டிற் பழக்கம் சுடுகாடு வரைக்கும்

6. கொடிக்குச் சுரைக்காய் பாரமில்லை

7. முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்

8. காற்றுள்ள போதே தூற்றிக்கொள்

9. மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கலாமா?

காலைக்கதிர் Kalaikkathir



# அமெரிக்காவின் ட்ரோன் தாக்குதல்: தலிபான் துணைத் தலைவர் சாவு



இஸ்லாமாபாத்,பெப்.14

பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் எல்லையில் அமெரிக்க ஆளில்லா விமானம் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் தெரிக் இ தலிபான் இயக்கத் துணைத் தலைவர் காலித் மெஹ்சூத் கொல்லப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் எல்லையில் உள்ள பக்திகா மாகாணத்தில் அமெரிக்க ஆளில்லா விமானங்கள் (ட்ரோன்) கடந்த வாரம் அதிரடித் தாக்குதல்களை நடத்தியுள்ளன.

இந்தத் தாக்குதலில், தெரிக் இ தலிபான் அமைப்பின் துணைத்தலைவர் காலித் மெஹ்சூத் கொல்லப்பட்டுள்ளார் என அந்த அமைப்பு அறிவித்துள்ளது.

கடந்த மாதத்தில் பாகிஸ்தானுக்குள் புகுந்து அமெரிக்க ட்ரோன் தாக்குதல் நடத்தியதில் ஹக்கானி தீவிரவாத இயக்கத்தின் முக்கிய தளபதிகள் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஹபீஸ் சயீதை தீவிரவாதி என பாகிஸ்தான் அரசு அறிவிப்பு

புதுடில்லி,பெப்.14

ஹபீஸ் சயீதைத் தீவிரவாதி எனப் பாகிஸ்தான் அரசு அறிவித்துள்ளது.

ஐநா பட்டியலில் மொத்தம் 27 தடை செய்யப்பட்ட தீவிரவாத அமைப்புகள் உள்ளன. ஹபீஸ் சயீதை தீவிரவாதியாக அறிவிக்க அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட நாடுகள் தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வந்தன. இந்த நிலையில் பாகிஸ்தானைச் சேர்ந்த தேசிய தீவிரவாத எதிர்ப்பு ஆணையம் ஹபீஸ் சயீதை அந்த நாடு தீவிரவாதியாக அறிவித்துச் சட்டம் கொண்டு வந்துள்ளது.



இதன்படி பாகிஸ்தான் சட்டம் ஹபீஸ் சயீதை தீவிரவாதி என்றும் ஜமாத்- உத் - தவா அமைப்பை தீவிரவாத அமைப்பாகவும் அறிவித்துள்ளது. ஐநாவால் தடை செய்யப்பட்ட தீவிரவாத அமைப்புகள் மற்றும் தனி நபர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு ஐநா பாதுகாப்புச் சபை உத்தரவிட்டதையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.


## கடிதத உறையில் வந்த மர்மப் பொடியால் ட்ரம்ப் மருமகளுக்கு உடல் நலம் பாதிப்பு

நியூயோர்க்,பெப்.14

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் மருமகள் வெனிசா திடீரென உடல்நிலை பாதித்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு வந்த கடித உறையில் அந்ராக்ஸ் பொடி இருந்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்க அதிபராக டொனால்ட் ட்ரம்ப் கடந்த ஆண்டு முதல் பதவி வகித்து வருகிறார். இவரது மூத்த மகன் டொனால்ட் ஜூனியர், இவரது மனைவி வெனிசா. இவர்கள் மன்ஹொட்டன் நகரில் வசித்து வருகின்றனர்.

இந்த நிலையில், வெனிசா வீட்டிற்கு நேற்று முன்தினம் காலை தபால் வந்தது. அதை வாங்கிய வெனிசா அந்த தபால் உறையைப் பிரித்துப் பார்த்தார். அப்போது திடீரென



அவருக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டு மயங்கி விழுந்தார். மேலும், அப்போது வீட்டில் இருந்த வெனிசாவின் தாயார் மற்றும் அவரது வீட்டிலிருந்தவர்கள் என அடுத்தடுத்து சிலரும் பாதிப்பு அடைந்தனர்.


இதையடுத்து நியூயோர்க் நகரில் உள்ள மருத்துவமனையில் அவர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அனைவரும் நலமுடன் உள்ளனர் என ட்ரம்ப் ஜூனியர் டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

கடிதத்தின் உறையில் அந்த்ராக்ஸ் எனப்படும் கொடிய விஷக்கிருமியைப் பரப்பும் பவுடர் தடவப்பட்டு இருக்கலாம் என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இதுதொடர்பாகப் பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

## அந்தமானில் நிலநடுக்கம்

போர்ட்பிளேயர்,பெப்.14

அந்தமான் தீவுப் பகுதிகளில் நேற்றுக் காலை நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இது ரிச்டரில் 5.6 ஆகப் பதிவாகியுள்ளது.




இந்த நிலநடுக்கம் 10 கிலோமீற்றர் ஆழத்தில் ஏற்பட்டு உள்ளது.

நிலநடுக்கத்தினால் ஏற்பட்ட பொருள்சேதம் மற்றும் உயிர்ச்சேதம் பற்றிய தகவல்கள் உடனடியாக வெளிவரவில்லை.

(ப)

## 70 பெண்கள் பாலியல் துஷ்பிரயோகம்; ஹொலிவுட் தயாரிப்பாளர் மீது வழக்கு

நியூயோர்க்,பெப்.14

ஹொலிவுட் திரைப்பட தயாரிப்பாளர் ஹார்வி வெயின்ஸ்டீன் மீது 70இற்கும் மேற்பட்ட பெண்கள் பாலியல் குற்றச்சாட்டு முன்வைத்துள்ளனர்.

ஹொலிவுட் திரையுலகில் மிகவும் முக்கிய தயாரிப்பாளராக இருப்பவர் ஹார்வி வெய்ன்ஸ்டீன். இவர் தனது சகோதரர் பொப் வெய்ன்ஸ் டீனுடன் இணைந்து 'தி வெய்ன்ஸ் டீன் கொம்பெனி' என்ற பெயரில் தயாரிப்பு நிறுவனத்தை நடத்தி வரு கிறார். இந்த நிறுவனம் மூலம் பல முக்கியமான திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டு உள்ளன.



வெய்ன்ஸ்டீன் பட நிறுவனத்தில் பணியாற்றி வந்த பெண்களை பல ஆண்டுகளாக ஹார்வி வெய்ன்ஸ்டீன் பாலியல் ரீதியாக துன்புறுத்தி வந்தார் எனக் குற்றச்சாட்டு எழுந்தது.

இது தொடர்பாக ஹார்வி வெய்ன்ஸ்டீன், அவரது நிறுவனம் மற்றும் ஹார்வியின் சகோதரரும், நிறுவனத்தின் இணைத் தலைமைச் செயல் அதிகாரியுமான பாப் வெய்ன்ஸ்டீன் ஆகியோர் மீது நியூயோர்க் நீதிமன்றில் மீது வழக்குத்தொடரப்பட்டது.

நிறுவனத்தில் பணியாற்றும் ஊழியர்களைக் காக்க தவறிவிட்டனர் என அந்த நிறுவனத்தின் அதிகாரிகள் மீதும் குற்றம் சாட்டப்பட்டது. ஹார்வி வெய்ன்ஸ்டீனால் பாதிக்கப்பட்ட பெண்கள் இழப்பீடு பெற்றுத்தரக் கோரியும் நீதிமன்றில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## குளிர்கால ஒலிம்பிக்கில் வடகொரியாவின் நடனப் பெண்களின் முகமூடியால் சர்ச்சை



சியோல்,பெப்.14

தென்கொரியாவில் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் நடந்து வரும் நிலையில், வடகொரியாவில் இருந்து வந்துள்ள உற்சாகமூட்டும் நடனப் பெண்கள் (சியர் லீடர்) அணிந்த முகமூடிகளால் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் தென்கொரியாவின் பியோங்யங் நகரில் நடந்து வருகின்றன. பழைய பகைகளை மறந்து வடகொரியாவும் தனது அணிகளை அனுப்பியுள்ளது. இந்த நிலையில், கடந்த சனிக்கிழமை நடந்த ஐஸ் ஹொக்கி பெண்கள் போட்டியில் சுவிற்சர்லாந்து அணிக்கு எதிராக ஒருங்கிணைந்த கொரிய அணி மோதியது.

அப்போது, அணியை உற்சாகப்படுத்த சியர் லீடர்கள் மைதானத்தில் இருந்தனர். அவர்கள் வடகொரியாவில் இருந்து வந்த பெண்கள் ஆகும். போட்டியின் போது, அவர்கள் அணிந்திருந்த முகமூடிகள் சர்ச்சைக்கு வித்திட்டுள்ளன.

வடகொரியா எனும் நாட்டை உருவாக்கியவரும், தற்போதைய அதிபர் கிம் ஜாங் உன்னின் தாத்தா, கிம் இல் சங்-கின் இளவயதுப் புகைப்படத்தை முகமூடியாக சியர் லீடர் பெண்கள் அணிந்துள்ளனர்.

பார்த்தீர்களா, கிம் இல் சங் புகைப்படம் மூலம் வடகொரியா தனது பிரசாரத்தை விளையாட்டில் கொண்டு வந்துவிட்டது. வடகொரியாவின் புத்தியே இதுதான் எனத் தென்கொ ரியாவைச் சேர்ந்த பழமைவாதிகள் சர்ச்சையை ஏற்படுத்தி வருகின்றனர்.

## ரஷ்ய விமான விபத்து; புடின்– ட்ரம்ப் உரையாடல்

மொஸ்கோ,பெப்.14

ரஷ்யாவில் நடைபெற்ற விமான விபத்துப் பற்றி அதிபர் விளாடிமிர் புடினிடம் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தொலைபேசியில் கேட்டறிந்தார்.

ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் டொமொடெடொவொ விமான நிலையம் உள்ளது. இங்கிருந்து அர்ஸ்க் நகருக்கு உள்ளூர் போக்குவரத்து விமானம் 65 பயணிகள், 6 விமானக் குழுவினருடன் புறப்பட்டது.

ஆனால், சிறிது நேரத்தில் கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பு துண்டிக்கப்பட்டது. மேலும் ரேடாரில் இருந்து விமானம் காணாமல் போனது. விசாரணையில், மொஸ்கோவின் அர்குனோவோ பகுதியில் அந்த விமானம் விழுந்து நொறுங்கிய விபத்தில் அதில் பயணித்த 71 பேரும் பரிதாபமாக உயிரிழந்தனர். இந்த விபத்து மீட்புப் பணிகளுக்காக 400இற்கும் மேற்பட்ட ஊழியர்கள் பணியில் ஈடுபடுகின்றனர்.

இந்த நிலையில், ரஷ்யாவில் நடைபெற்ற விமான விபத்துத் தொடர்பாக அதிபர் விளாடிமிர் புடினிடம் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தொலைபேசியில் நேற்று கேட்டறிந்தார்.

# என் கட்சி 3 தலைமுறைகளுக்குப் பயன்படும்! - கமல் பேச்சு

லெக்சிங்டன்,பெப்.14

3 தலைமுறைகளுக்குப் பயன்படும் கட்சியை தொடங்கப்போகிறேன், என்று நடிகர் கமலஹாசன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா சென்றுள்ள நடிகர் கமலஹாசன் ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தில் சிறப்புரையாற்றினார். பின்னர் லெக்சிங்டன் நகரில் அமெரிக்க வாழ் தமிழர்களைச் சந்தித்தார். அப்போது தமிழர்கள் கேள்விகளுக்கு கமல் பதில் அளித்து பேசியவை வருமாறு-



நான் என் வேலைகளை விட்டுவிட்டுக்கடமைசெய்ய வந்து இருக்கிறேன். அதேபோல் நீங்களும் கொஞ்ச நேரம் நாட்டுக்காக ஒதுக்க வேண்டும். நான் வெறும் கலைஞனாகச்சாக மாட்டேன். உங்கள் பணியில் அது நிகழும். அதுதான் சரியான வழியாக இருக்கும். கலைஞனாக இருப்பது குறைவு அல்ல. ஆனால் எனக்கு அது போதவில்லை.

அரசியல்கட்சிப்பெயர், கொடி போன்றவை வருகிற 21ஆம் திகதி அறிவிக்கப்படும். உங்கள் பங்கும் அதில் இருக்க வேண்டும். கட்சியில் சேரும்படி சொல்லவில்லை. அது உங்கள் இஷ்டம். ஆனால் இந்த அரசியல் யாரோ செய்கிறார்கள், அதில் நமக்கு என்ன வேலை என்று ஒதுங்கி இருக்காதீர்கள்.

நிறைய விஷயங்களை மாற்ற வேண்டி உள்ளது. அடிப்படை வசதிகளை 5 வருடத்தில் செய்து கொடுக்க முடியுமா? என்று தெரியவில்லை. ஆனாலும் அது முடியும் என்று நம்புகிறேன். உடனே கட்சி தொடங்குங்கள் என்கிறார்கள். அவசரமாக அதைச் செய்ய முடியாது. 3 தலைமுறைகளுக்குப் பயன்படும் சமுதாயக் கருவியாக இந்தக் கட்சி இருக்க வேண்டும் என்பது எனது ஆசை. அதற்கான ஏற்பாடுகள் நடக்கின்றன என்று தெரிவித்துள்ளார்.

## தமிழக மண் ஆண்டாள் மண்; தமிழிசை பேச்சால் சர்ச்சை

மதுரை,பெப்.14

தமிழக மண் பெரியார் மண் அல்ல; ஆண்டாள் மண் எனப் பா.ஜ.க. தமிழகத் தலைவர் தமிழிசை சௌந்தரராஜன் பேச்சால் சர்ச்சை எழுந்துள்ளது.

மதுரையில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற மத்திய பட்ஜெட் விளக்கப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்ட தமிழிசை சௌந்தரராஜன் பேசியதாவது:-



நாத்திக ஆட்சியை அகற்றி ஆத்திக ஆட்சியைக்கொண்டுவருவதே பா.ஜ.கவின் நோக்கம் என்றும், ஆன்மிக அரசியலுக்கு வித்திட்டதே பா.ஜ.க. தான். தமிழகம் பெரியார் மண் அல்ல, பெரியாழ்வார் மண், அண்ணா வளர்த்த தமிழ் அல்ல, ஆண்டாள் வளர்த்த தமிழ் என்றும் தமிழகத்தில் நல்லது நடக்க வேண்டுமென்றால் பா.ஜ.க. ஆட்சிக்கு வர வேண்டும் என்றார்.

தமிழிசையின் பேச்சால் தமிழகத்தில் மீண்டும் சர்ச்சை எழுந்துள்ளது.

## சஞ்சுவான் தாக்குதலுக்கு பாக். தகுந்த விலை கொடுக்க நேரிடும்

புதுடில்லி,பெப்.14

சஞ்சுவான் மாகாணத்தில் நடந்த தாக்குதலுக்கு பாகிஸ்தான் தகுந்த விலை கொடுக்க நேரிடும் என இராணுவ அமைச்சர் நிர்மலா சீதாராமன் எச்சரிக்கை விடுத்து உள்ளார்.

காஷ்மீர் மாநிலம் சஞ்சுவான் இராணுவ முகாமில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 5 இராணுவ வீரர்கள் உட்பட ஓர் இராணுவ வீரரின் தந்தை உயிரிழந்தனர். மேலும் பெண்கள், குழந்தைகள் உட்பட 10 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்கள். சஞ்சுவான் இராணுவ முகாம் மீது மேற்கொண்ட தாக்குதல் இந்தியாவுக்குக் கடும் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்தத் தாக்குதலுக்கு லஷ்கர்-இ-தொய்பா பயங்கரவாத இயக்கம் பொறுப்பு ஏற்றுள்ளது.

இந்த நிலையில் பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பாக மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் செய்தியாளர்களிடம் தெரிவித்தவை வருமாறு-



**நிர்மலா சீதாராமன் எச்சரிக்கை**

இராணுவ உடையில் வந்து பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். முகாமில் இருந்த மக்களை இராணுவம் பத்திரமாக வெளியேற்றியது. பொதுமக்களில் ஒருவர் உட்பட 6 பேர் உயிரிழந்து உள்ளனர். மூன்று பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்.

4 பயங்கரவாதிகள் தாக்குதலில் ஈடுபட்டனர் எனத் தகவல்கள் வெளியாகின. 4ஆவது பயங்கரவாதி முகாமிற்குள் நுழையவில்லை, ஒருவேளை முகாமிற்கு வெளி வரையில் உதவி செய்து இருக்கலாம்.

தாக்குதல்கள் தொடர்பாக விசாரணைக் கோப்புகள், ஆதாரங்களும் வழங்கப்பட்டு வந்தாலும் பாகிஸ்தான் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.

பாகிஸ்தானுக்கு ஆதாரங்களை கொடுப்பது என்பது தொடர்ச்சியானதாக இருக்கும். பயங்கரவாதத் தாக்குதலுக்கு பாகிஸ்தான்தான் பொறுப்பாகும் என்பதை நாம் மீண்டும், மீண்டும் நிரூபிக்க வேண்டும். பாகிஸ்தான் தன்னுடைய தவறுக்கு மிகப் பெரிய விலையைக்கொடுக்கும். இராணுவத்துடன் இந்திய அரசு துணை நிற்கிறது. எல்லைப் பிராந்தியங்கள் தொடர்பாக விரிவான ஆய்வை மேற்கொள்கிறோம் எனத் தெரிவித்துள்ளார்.

## அமெ. ஆயுதங்களை இந்தியாவுக்கு எதிராகப் பயன்படுத்துகிறது பாகிஸ்தான்

வொஷிங்டன்,பெப்.14

அமெரிக்கா, பாகிஸ்தானுக்கு வழங்கிய ஆயுதங்களை இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தான் பயன்படுத் துகின்றது என, இந்தியா குற்றம்சாட்டியுள்ளது.

பாகிஸ்தானில் பயங்கரவாத இயக்கங்களுக்கு எதிராகப் போரிட அமெரிக்கா நிதி மற்றும் ஆயுத உதவிகளை வழங்கி வந்தது. பாகிஸ்தான் நடவடிக்கை எதுவும் எடுக்காமல் ஏமாற்றுவதாக நிதி மற்றும் பாதுகாப்பு உதவிகளை அமெரிக்கா நிறுத்துவிட்டது.

இந்த நிலையில் பாகிஸ்தானில் செயற்பட்டு வரும் தலிபான் பயங்கரவாதிகளுக்கு எதிராகப் போரிட அமெரிக்கா ஏவுகணைகளை துல்லியமாக தாக்கி அழிக்கும் வல்லமை கொண்ட ஏவுகணைகளைப் பாகிஸ்தானுக்கு வழங்கியது.

இந்த ஏவுகணைகளை பாகிஸ்தான் இந்தியாவிற்கு எதிராகப் பயன்படுத்துகின்றமை தொடர்பான ஆதாரங்களை இந்தியா அமெரிக்காவிடம் வழங்கியுள்ளது.



ஆதாரத்துடன் நிரூபணம்

தற்பாதுகாப்பு என்ற நோக்கத்தில் பாகிஸ்தானுக்கு ஒக்ரோபர் 2007ஆம் ஆண்டு அமெரிக்க காங்கிரஸால் இந்த ஆயுதங்கள் வழங்கப்பட்டன. பாகிஸ்தானில் தலிபான் பயங்கரவாதிகளுக்கு எதிரான போருக்கு அமெரிக்கா வழங்கிய ஆயுதப் பட்டியலில் இவை இடம்பெற்றுள்ளன.

பயங்கரவாதத்திற்கு எதிராகப் போரிடுகிறோம் என முதலைக் கண்ணீர் வடிக்கும் பாகிஸ்தானின் முகத்திரையைக் கிழிக்கும் வகையில் அமெரிக்கா வழங்கும் ஆயுதங்களை பாகிஸ்தான் எப்படிப் பயன்படுத்துகிறது என்பதை இந்தியா ஆதாரத்துடன் வெளிப்படுத்தியமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ப)

## சிங்கப்பூர் நிறுவனத்துக்கு 9 கோடி அமெ. டொலர்

### மல்லையாவுக்கு லண்டன் நீதிமன்று உத்தரவு

சிங்கப்பூரைச் சேர்ந்த விமான நிறுவனத்திற்கு 9 கோடி அமெரிக்க டொலர் வழங்குமாறு விஜய் மல்லையாவுக்கு லண்டன் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

தொழிலதிபர் விஜய் மல்லையா வங்கிகளில் கடன் பெற்று மோசடி செய்து தற்போது பிரிட்டனில் வசித்து வருகிறார். மத்திய அரசு அவர் மீது தொடர்ந்த மோசடி வழக்கு வெஸ்ட்மினிஸ்டர் நீதிமன்றில் நடந்து வருகிறது. அதன் விசாரணைகளிலும் மல்லையா முற்பட்டு வருகிறார்.

இந்த நிலையில், சில ஆண்டுகளுக்கு முன்னர் தனது கிங்பிர் விமான நிறுவனத்திற்கு 4 விமானங்கள் வாங்குவதற்கு சிங்கப்பூரைச் சேர்ந்த ஒரு நிறுவனத்திடம் விஜய் மல்லையா ஒப்பந்தம் செய்துள்ளார். மூன்று விமானங்கள் வழங்கப்பட்ட நிலையில், அதற்கான பணத்தை மல்லையா கொடுக்கவில்லை.



இதனையடுத்து, சம்பந்தப்பட்ட விமான நிறுவனம் லண்டன் உயர் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தது. இவ்வழக்கில் கடந்த 5ஆம் திகதி தீர்ப்பளித்த நீதிபதிகள் 9 கோடி அமெரிக்க டொலர்களை மல்லையா வழங்க வேண்டும் என உத்தரவிட்டனர். ஏற்கனவே, கடன் நெருக்கடியில் சிக்கித்தவிக்கும் விஜய் மல்லையா இந்தத் தீர்ப்பால் அதிர்ச்சி அடைந்துள்ளார்.

# பதவி விலகுகிறார் சைமன் வில்லிஸ்

இலங்கைக் கிரிக்கெட் அணியின் உயர்செயற்றிறன் முகாமையாளரான இங்கிலாந்தைச் சேர்ந்த சைமன் வில்லிஸ் தனது பதவியிலிருந்து விலகவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சைமன் வில்லிஸுடன் ஏற்கனவே செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்திற்கு அமைய அவர் தனது 3 ஆண்டுகள் தவணைக்காலத்தை இலங்கையுடன் இணைந்து செயற்பட இருந்தார். எனினும் தற்போதைய இந்த முடிவுக்கமைய அவர் இரண்டு ஆண்டுகளுடன் தனது சேவையை முடித்துக் கொள்கி



றார்.

கடந்த 2016ஆம் ஆண்டு சைமன் வில்லிஸ் நியமிக்கப்பட்டார். வில்லிஸை இந்தப் பதவிக்கு நியமிப்பதில் கிரிக்கெட் குழுவின் அப்போதைய தலைவராக இருந்த அரவிந்த டி சில்வாவேபின்னணியில் இருந்தார். இதன்போது உயர் செயற்றிறன் முகாமையாளர் என்ற புதிய பதவியொன்று உருவாக்கப்பட்டே அவர் நியமிக்கப்பட்டார்.

இந்த நிலையில் அவரின் பதவி விலகல் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் சைமன் வில்லிஸின் செயற்பாடுகள் அணிக்கு ஏற்புடையனவாக இல்லை என்று லசித் மலிங்க சில நாள்களுக்கு முன்னர் கருத்து வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஆக்ரோஷமான அணுகுமுறை தேவை – லீமென்

அடுத்த வருடம் நடைபெற இருக்கும் உலகக்கிண்ணத் தொடரில் சிறப்பாகச் செயற்பட வேண்டுமென்றால் ஆக்ரோஷமான அணுகுமுறை தேவை என்று ஆஸி தலைமைப் பயிற்சியாளர் டேரன் லீமென் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்தில் அடுத்த வருடம் நடைபெற இருக்கும் உலகக்கிண்ணத்துக்கு ஆஸ்திரேலியா அணி இன்னும் தயார் ஆகவில்லை என பயிற்சியாளர் டேரன் லீமென் தெரிவித்துள்ளார்.

டெஸ்ட் போட்டியில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வரும் ஆஸ்திரேலியா, சமீப காலமாக ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் திணறி வருகிறது. கடைசியாக ஆஸ்திரேலியா விளையாடிய 15 ஆட்டங்களில் இரண்டில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது.

சமீபத்தில் நடைபெற்ற இங்கிலாந்துக்கு எதிரான ஐந்து போட்டிகள் கொண்ட தொடரை 1:4 என இழந்தது. இந்த நிலையில் டேரன் லீமென் அளித்த பேட்டியில்,

நாங்கள் உலகக்கிண்ணத்தைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டுமென்றால், ஆக்ரோஷமான அணுகுமுறையைக் கடைபிடிக்க வேண்டும்.

டெஸ்ட் போட்டியில் என்ன நடக்கிறது என்பதைச் சார்ந்து அணியில் பல்வேறு மாற்றங்கள் செய்ய வேண்டியுள்ளது. டெஸ்ட் போட்டியில் இருந்து டெஸ்ட் அல்லாத போட்டிக்குச் சென்று கொண்டிருக்கிறோம்.– என்றார். (ப)



# இம்ரான் தாஹிர் மீது இனவெறி விமர்சனம்


ஜோகன்னஸ்பேர்க் நகரில் இந்தியா, தென்னாபிரிக்க அணிகள் மோதிய 4ஆவது ஒருநாள் போட்டியின்போது பார்வையாளர்கள் வரிசையில் இருந்தவர்கள் இம்ரான் தாஹிரை இனரீதியாக விமர்சித்தனர். எனவே அது தொடர்பாக விசாரணை மேற்கொள்ள தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை உத்தரவிட்டுள்ளது.

வண்டரர்ஸ் மைதானத்தில் தென்னாபிரிக்க அணி 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதை அடுத்து கோபமடைந்த ரசிகர்கள் அவரை இனரீதியாக விமர்சித்துள்ளனர். அடுத்து உடனே மைதானத்தில் இருந்த காவலர்களிடம் இம்ரான் தாஹிர் குற்றச்சாட்டு அளித்துள்ளார்.

ஆயினும் போட்டி நிறைவடைந்த நேரம் என்பதால் குற்றம்சாட்டப்பட்டவர்களை அடையாளம் காணும் முன் அவர்கள் மைதானத்தை விட்டு வெளியேறிவிட்டனர்.

பின்னர் பாகிஸ்தான் வம்சாவளியை சேர்ந்த இம்ரான் தாஹிரை இனரீதியாக விமர்சிக்கும் வீடியோ சமூக வலைதளங்களில் வெளியானதால் இது தொடர்பான விசாரணையை தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை மேற்கொண்டுள்ளது.

38 வயதாகும் இம்ரான் தாஹிர் 2011 ஆம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட்டில் அறிமுகம் ஆனவர். இவர் தென்னாபிரிக்க அணி சார்பில் 20 டெஸ்ட் போட்டிகளிலும், 84 ஒரு நாள் போட்டிகளிலும், 36 ரி–20 போட்டிகளிலும் விளையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# தொடரும் பார்சிலோனா சாதனை; 'டு ரோ' வால் தரவரிசையில் சிக்கல்

பார்சிலோனா இந்தப் பருவகாலத்தில் தோல்வியைச் சந்திக்காத அணி என்ற பெருமையைத் தக்கவைத்து வருகிறது. ஆனால் தரவரிசையில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

லா லிகா தொடரில் நேற்று முன்தினம் ஆட்டம் ஒன்றில் பார்சிலோனா தனது சொந்த மைதானமான கேம்ப் நவ்வியில் கெட்டப் அணியை எதிர்கொண்டது.

சொந்த மைதானத்தில் பார்சிலோனா வெற்றி பெறும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் கெட்ப் அணியின் சிறப்பான தடுப்பு ஆட்டத்தால் பார்சிலோனாவால் கோல் அடிக்க முடியவில்லை. இதனால் ஆட்டம் கோலின்றி சமநிலையில் முடிந்தது.

இந்த லா லிகா தொடரில் பார்சிலோனாவிற்கு கோலின்றி முடிந்த முதல் ஆட்டம் இதுவாகும். இருந்தாலும் தோல்வியைச் சந்திக்காத ஒரே அணி என்ற பெருமையை தக்கவைத்துள்ளது.

ஆனால் லா லிகா தர வரிசை புள்ளிகள் பட்டியலில் அத்லெடிகோ டி மாட்ரிட் அணியைவிட 7 புள்ளிகள் மட்டுமே முன்னிலை பெற்று முதல் இடத்தில் உள்ளது பார்சிலோனா.

பார்சிலோனா 23 போட்டிகள் முடிவில் 18 வெற்றி 5 சமநிலை மூலம் 59 புள்ளிகள் பெற்றுள்ளது. அத்லெடிகோ டி மாட்ரிட் 23 போட்டிகளில் 15 வெற்றி 7 சமநிலை, ஒரு தோல்வியின் மூலம் 52 புள்ளிகளுடன் 2ஆவது இடத்தில் உள்ளது.

ரியல் மாட்ரிட் 22 போட்டிகளில் 12 வெற்றி, 6 சமநிலை, 4 தோல்விகள் மூலம் 42 புள்ளிகள் பெற்று 4ஆவது இடத்தில் உள்ளது.

# வோர்னருக்கு ஆஸி. ஓய்வு

முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் தொடரில் மோசமாக விளையாடி வரும் வோர்னருக்கு ஓய்வு கொடுத்துள்ளது ஆஸ்திரேலியா.

ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, இங்கிலாந்து இடையிலான ரி–20 முத்தரப்பு கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற முதல் மூன்று போட்டிகளிலும் ஆஸ்திரேலியா வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது. தென்னாபிரிக்கா தொடருக்காக கப்டன் ஸ்மித்திற்கு ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது. அதனால் துணைக் கப்டன் வோர்னர் கப்டனாக நியமிக்கப்பட்டார்.

ஆஸ்திரேலியா–இங்கிலாந்து இடையிலான 2ஆவது போட்டி நேற்று முன்



தினம் மெல்போர்னில் நடைபெற்றது. இதன்பின் ஆஸ்திரேலியா வருகிற 16ஆம் திகதி தனது கடைசி லீக்கில் நியூஸிலாந்துடன் மோதுகிறது. இந்த ஆட்டம் நியூஸிலாந்தில் நடக்கிறது. இரண்டு போட்டிகளுக்கும் இடையில் சுமார் 6 நாள்கள் இடைவெளி உள்ளதால் வோர்னருக்கு இடைப்பட்ட நாளில் ஓய்வு வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தலைமைப் பயிற்சியாளர் லீமென் கூறுகையில்; அவருக்குச் சில நாள்கள் ஓய்வு கொடுத்துள்ளோம். இது சவாலானதுதான். ஆனால், அணிக்குத் திரும்பியதும் வோர்னர் கப்டனாக செயல்படுவார் என்று தெரிவித்துள்ளார்.

# டோனி தலைமையில் விளையாடுவது பெருமை – ஷேன் வொட்சன்

ஐ.பி.எல். போட்டியில் சென்னை அணியில் டோனி தலைமையின் கீழ் விளையாடுவது பெருமை என ஆஸ்திரேலிய வீரர் ஷேன் வொட்சன் கூறியுள்ளார்.

ஐ.பி.எல். 11ஆவது சீசனில் விளையாடும் அணிக்கான வீரர்களை ஏலம் எடுக்கும் நிகழ்வு சமீபத்தில் நடந்து முடிந்தது. இந்த சீசனில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காக ஆஸ்திரேலியாவின் வீரர் ஷேன் வொட்சன் ஏலத்தில் எடுக்கப்பட்டார்.

இது தொடர்பாக வொட்சன் கூறுகையில், சென்னை அணிக்காக விளையாடுவது மகிழ்ச்சியாக உள்ளது. டோனி போன்ற சிறந்த வீரரின் கீழ் விளையாடுவதை நினைத்தால் பெருமையாக உள்ளதோடு, தொடரை ஆவலோடு எதிர்நோக்கியுள்ளேன் எனக் கூறியுள்ளார்.





காலைக்கதிர்
Kalaikkathir



## கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இல்லாதமையால்ஆட்சியமைப்பதில் இழுபறி நிலை தொடர்கிறது. எனவே கட்சி பேதங்களைக் கடந்து தேசிய நிலைப்பாட்டில் உள்ள கட்சிகளை ஒன்றிணைத்து அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் பேசி இறுதித் தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டும்.

– இவ்வாறு கோரியுள்ளார் தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் முக்கியஸ்தரும் ஈ.பி.ஆர்.எல். எவ். தலைவருமான சுரேஷ் பிறேமச்சந்திரன்.

சமகாலநிலைமைகள்தொடர்பாக யாழ். ஊடக அமையத்தில் நேற்றுக் காலை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டு இரண்டு மாதங்களிலேயே தேர்தலொன்றைச் சந்தித்து வடக்கு – கிழக்கு முழுவதும் 75 ஆசனங்களைப் பெற்றிருக்கின்றது. மாற்றுத் தலைமை வேண்டுமென்ற நோக்கில் வாக்களித்த அத்தனை பேருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். வடக்கு – கிழக்கில் தமிழரசு முன்னிலை வகித்தாலும் ஒரு சில இடங்களைத்தவிர பலஇடங்களில்ஏனையோருடன் இணையாது ஆட்சியமைக்க முடியாத சூழல் உள்ளது.

இதுவரை காலமும் ஏகப்பிரதிநிதிகள் எனத் தம்மை வரித்துக் கொண்ட தமிழரசுக் கட்சியினர் இந்தத் தேர்தலில் முன்னரைவிட குறைந்தளவிலான வாக்குகளையே பெற்றுள்ளனர். மாற்றமொன்று வேண்டுமென வாக்களித்த மக்கள் உணர்ந்துள்ளதைத் தமிழரசுக் கட்சியினரும் புரிந்து கொள்ள வேண்டும்.

கடந்த பல வருடங்களாகக் கூட்டமைப்பில் இருக்கும் கொள்கை முரண்பாடுகளைக் களையவேண்டுமெனக் கோரி வந்தோம்.ஆனாலும்அத்தகைய கோரிக்கைகள் தமிழரசால் நிராகரிக்கப்பட்டே வந்தன. அவ்வாறானதொரு நிலையிலையே மாற்றுத் தலைமை ஏற்பட வேண்டுமென மக்களுக்கு எடுத்துக் கூறியிருந்தோம்.

மக்கள் ஆணையை மீறிக் கூட்டமைப்பு செயற்பட்டதால் சரியான பாதையில் செல்லுமாறும் வலியுறுத்தி வந்தோம். ஆனாலும் அதனையும் தமிழரசு கேட்காத நிலையில் நாங்கள் அதிலிருந்து வெளியேறிப் புதியதோர்கூட்டமைப்பைஅமைத்து வெற்றி பெற்றிருக்கின்றோம். அதேபோன்று தெற்கில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் பெரு வெற்றியைப் பெற்றிருக்கின்றார்.

இதனால் கொழும்பில் பெரியளவிலான மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கையில் சமஷ்டி கோரும் அனைவரும் ஒன்றுபடவேண்டுமெனக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் கேட்கின்றார். உண்மையிலையே தெற்கில் ஏற்படப் போகும் மாற்றமென்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்றாக இருக்கின்றபோது கூட்டமைப்பினருக்கு மட்டும் இந்த மாற்றம் குறித்துத் தெரியாமல் இருந்ததா? அதற்கான திட்டங்கள் ஏதாவது யோசித்து வைத்திருக்கின்றார்களா?

தமிழரசுக் கட்சியினர் இப்போதும்ஓரளவு ஆதரவைத்தக்க வைத்துள்ளதன் அடிப்படையில் அவர்களது கொள்கையில், அணுகுமுறையில், உபாயங்களில் மாற்றம் ஏற்படுத்த வேண்டும். இந்த மாற்றத்தைக் கொண்டு வந்து தமிழ் மக்களின் உரிமையை கூட்டமைப்பால் மாத்திரம் பெற்றுக்கொள்ள முடியாது. தமிழ்த் தேசிய நலனில் அக்கறையுடனும் உறுதியுடனும் செயற்படுகின்ற எல்லோரும் இணையவேண்டும்.

ஆகவே இணைவு அல்லது ஒற்றுமை என்பதை வெறுமனே வாய்மொழி மூலமாகக் கூட்டமைப்பினர்கோருவதை விடுத்து அனைவரும் இணைந்து கலந்துரையாடித் திட்டமிட்டுத் தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டும்.

மஹிந்தவின் மீள் வருகையும் பலத்த பாதிப்புக்களைத் தமிழ் மக்களுக்கு எதிர்காலத்தில் ஏற்படுத்தக் கூடிய சூழல் நிலவுவதால் தமிழ்த் தரப்புக்கள் கட்சிசார் அடிப்படையில் சிந்திப்பதை எந்தவகையிலும் பிரயோசனம்தராது. சகல தமிழ்க் கட்சிகளும் உறுதியான கலந்துரையாடல்களை நடத்திச் சரியான பாதையில் முன்னோக்கிச் செல்ல வேண்டும்.– என்றார். (ஐ–7)

## விலகவேண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி கருத்து வெளியிடுகையில் –

அண்மையில் நடந்த உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளின் அடிப்படையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசுக்குப் பின்னால் நிற்க முடியாத நிலை எமக்கு ஏற்பட்டுள்ளது.

எனவே, கூட்டு அரசில் இருந்து விலகி, சுதந்திரமாகச் செயற்பட சிறிலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் முடிவு செய்துள்ளனர்.

ஐ.தே.க. அமைச்சர்களுடன் எமக்கு எந்த மனக்கசப்புகளும் கிடையாது. ரணில் விக்கிரமசிங்க இல்லாத எந்தவொரு அரசுக்கும் நாம் ஆதரவளிப்போம்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் உள்ள 41 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 35 பேர் எந்தக் காரணத்தைக் கொண்டும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இணைந்து கொள்ளப் போவதில்லை என்று உறுதியளித்துள்ளனர். – என்றார். (ஐ)

## இணைந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி தெரிவித்துள்ளார்.

வடக்கு – கிழக்கில் தனித்து ஆட்சியமைக்கும் வகையில் எந்தவொரு கட்சியும் பெரும்பான்மை பெறாத நிலையில், அங்கு ஆட்சியமைக்கும் எந்தவொரு கட்சிக்கும் வெளியிலிருந்து ஆதரவளிக்கத் தயாரென ஈ.பி.டி.பி. தெரிவித்துள்ளது.

அது தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

ஈ.பி.டி.பியின்நிலைப்பாட்டை வரவேற்ற அவர், அனைத்துக் கட்சிகளும் இவ்வாறு இணங்கிச் செயற்படுமாயின், மக்களுக்கு உரிய முறையில் சேவைகள் சென்றடையும்எனவும்தெரிவித்தார். (ஐ)

## அடிபணியாது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி அவர்,

கூட்டு அரசில் இருந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி விலகிக் கொண்டால், ஐ.தே.க. தனித்து ஆட்சியமைக்கும். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து எமது கட்சியின் தலைவரை நாங்கள் நீக்கமாட்டோம். – என்றும் அவர் கூறினார். (ஐ)

## தேர்தலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி மக்கள் வழங்கிய தீர்ப்புக்கு அமைய ஒன்றாக இணைந்து பயணிக்கவேண்டும்.

– இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார் ரெலோவின் செயலாளர் நாயகம் என்.ஸ்ரீகாந்தா.

யாழ். நகரிலுள்ள ஹோட்டலொன்றில் ரெலோ நேற்று மாலை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடக்கு – கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தோற்கடிக்க வேண்டுமென்ற ஒரே நோக்கில் செயற்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் அரசியல் சக்திகளின்நடவடிக்கைகளைத் தகர்த்தெறிந்து தமிழ் மக்கள் மகத்தான ஆதரவைக் கூட்டமைப்புக்கே வழங்கியிருக்கின்றனர். அத்தகைய ஆதரவு கிடைத்தமையிட்டு நாங்கள் திருப்தி அடைகின்றோம்.

ஆனாலும் தமிழ்த் தேசியத்தை முன்னிறுத்தி செயற்பட்ட காரணத்தால் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கிடையிலும் பல முனைப் போட்டிகள் நிலவியிருந்தன. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு என்பவற்றுடன் ஒன்றுடன் ஒன்று மோத வேண்டிய சூழ்நிலையும் ஏற்பட்டிருந்தது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கட்சிகள் மோதியதால் பேரினவாதக் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகியன தமிழ்த் தேசிய நிலப்பரப்பில் ஊடுருவியிருக்கின்றமை மிகக் கவலை.

நாங்கள் அனைவரும் ஒற்றுமைப்பட்டிருக்கின்றபோது அவர்களால் கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாததை நாங்கள் பிரிந்து நின்றபோது செய்துள்ளனர். ஆகவே தமிழ்த் தேசியத்தை முன்னிறுத்தியுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பும் இந்த விடயத்தில் அசிரத்தையாகவோ அல்லது அக்கறையில்லாமலோ இருக்க முடியாது.

நடைபெற்று முடிந்த தேர்தல் பெறுபேறுகளின் அடிப்படையில் ஒரு சில இடங்களைத் தவிர ஏனைய அனைத்து இடங்களிலும் நாங்கள் பெரும்பான்மையான இடத்தைப் பிடித்திருக்கின்றோம். அந்த இடங்களில் எல்லாம் ஆட்சி அமைப்பதற்குப் புதிய தேர்தல் முறைமையால் அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்வதில் முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளது. இதேபோன்று தான் தெற்கிலும் நிலைமைகள் காணப்படுகின்றன.

நாங்கள் எங்கெல்லாம் பெரும்பான்மையைப் பெற்றிருக்கின்றோமோ அங்கெல்லாம் நாங்கள் எந்தவித தயக்கமுமின்றி ஆட்சிமைப்போம். ஆகவே நாங்கள் முதலிடத்தைப் பிடித்துள்ள சபைகளில் ஆட்சியமைக்க எந்தவித தடைகளையும் ஏற்படுத்தவேண்டாமென்றும் கேட்டுக் கொள்கின்றோம்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும், தமிழ்த் தேசிய விடுதலை கூட்டமைப்பும், நாங்களும் தேர்தல் பிரசாரங்களின்போது மோதிக் கொண்டோம். ஒருவரையொருவர் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தோம். ஆனாலும் மக்கள் வழங்கிய தீர்ப்புக்கு அமைய இணைந்துபணியாற்ற வேண்டும். ஆகவே இந்த இரண்டு கட்சிகளும் எம்முடன் பங்காளிகளாக இருக்கா விட்டாலும் பகையாளிகளாக மாறத் தேவையில்லை.

இது தொடர்பில் மேற்படி இரண்டு கட்சிகளும் ஆக்கபூர்வமான சமிஞ்ஞைகளை வெளிப்படுத்தி எங்கள் கோரிக்கைகளை ஏற்று நடக்குமென்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம். இதில் நாங்கள் முன்னிலை பெறத் தவறிய சாவகச்சேரி மற்றும் பருத்தித்துறை நகர சபைகள் என்பவற்றில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆட்சியமைக்க எங்களால் எந்த முட்டக்கட்டையும் இருக்காது. ஆக்கபூர்வமானஒத்துழைப்பை நாங்கள் வழங்குவோம்.

பேரினவாதக் கட்சிகள் அங்கும் இங்குமாக ஊடுருவியுள்ளதால் கூட்டமைப்பு ஒற்றுமையாகப் பயணிப்பதுடன் பலப்படுத்தவேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளது. – என்றார்.

இதன்போது ஒற்றையாட்சியை ஏற்றுக்கொள்கின்ற தலைவர்களை மாற்றினால் கூட்டமைப்புடன் இணைந்து செயற்படத் தயார் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ள கருத்து தொடர்பில் ஸ்ரீகாந்தாவிடம் கேள்வியெழுப்பப்பட்டபோது, அவர்கூறும்ஒற்றையாட்சியைத் தமிழ்மக்களும்தமிழ்த்தேசிய கூட்டமைப்பும் ஏற்றுக் கொள்ளவில்லை என்று பதிலளித்தார்.

மேலும் அவரை இவரை விலக்கவேண்டும் என்றெல்லாம் கூறுவது அரசியல் நாகரிகமற்றது – அரசியல் முதிர்ச்சித் தன்மையற்றது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியோடு அரசியல் கூட்டுச் சேர்வதற்கு நாங்களொன்றும் துடிக்கவில்லை. எங்களுடன் போட்டிபோட்டு அவர்கள் எத்தனை இடங்களைப் பெற்றுள்ளார்கள் என்பதையும் பார்க்கவேண்டும். – என்றார். (ஐ–7)

## இரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி நேற்றுச் செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிடும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

மக்கள்தமதுநிலைப்பாட்டை இப்போது வெளிப்படுத்தியுள்ளனர். அரசின் முறையற்ற ஆட்சிமுறைக்கு எதிரான மக்களின் எழுச்சியே தற்போது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த ஆட்சி தொடரக்கூடாது என்பதே தற்போது மக்களின் எதிர்பார்ப்பாகக் காணப்படுகின்றது. அதன் காரணமாக இலங்கையின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் வகையில் அடுத்த தேர்தல்கள் உடனடியாக நடத்தப்படவேண்டும்.

அடுத்த பிரதமர் பதவி எனக்கு வழங்கப்படவுள்ளது என யாரும் தெரிவிக்கவில்லை. இந்தப் பிரதமர் பதவி எனக்கு அவசியமும் இல்லை. நாட்டின் பிரதமரையும், ஜனாதிபதியையும் மக்கள் மாத்திரமே தெரிவு செய்யவேண்டும்.

அம்பாந்தோட்டையில் ஐக்கிய தேசியக் கட்சி சார்ந்தோர் வாக்குகளுக்காக இலஞ்சம் வழங்கியிருந்தனர். அதற்கான ஆதாரங்களும் எம்மிடம் உள்ளன. எனினும், மக்கள் அவ்வாறான போலிச் செயற்பாடுகளுக்கு ஏமாற்றம் அடையாமல் தமது வாக்குகளை முறையாகப் பயன்படுத்தியுள்ளனர். – என்றார். (ஐ)

## ஒற்றுமைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன்.

யாழ். நகரிலுள்ள ஹோட்டலொன்றில் ரெலோ நேற்று மாலை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே செல்வம் அடைக்கலநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

உள்ளூராட்சித் தேர்தல் மிக அமைதியாக நடைபெற்று முடிவடைந்திருந்தாலும், பலத்த குழப்பங்களையும் ஏற்படுத்தியிருக்கிறது. இந்தத் தேர்தலில் எமக்கு வாக்களித்த மற்றும் அதற்காக உழைத்த அனைவருக்கும் எமது பாராட்டுக்களையும் நன்றிகளையும் நாங்கள் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தென்னிலங்கையில்சமஷ்டி முறை ஈழத்தைப் பெற்றுக் கொடுக்கப் போகிறது என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த மேற்கொண்ட பிரசாரத்தால் தெற்கில் மக்கள் ஒன்றிணைந்து அவருக்கு வாக்களித்துள்ளனர். ஆனால் நாங்கள் பிரிந்து நின்றதால் தென்னிலங்கை பெரும்பான்மைச் சிங்களத் தேசியக் கட்சிகள் வடக்கு – கிழக்கில் கணிசமான வெற்றிகளைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

இதனால் நாங்கள் ஆட்சியமைக்க முடியாத சபைகளும் காணப்படுகின்றன. இதிலே வடக்கு – கிழக்கில் தமிழ்த் தேசியக் கட்சிகள் இனியும் ஒன்றிணைந்து செயற்படவில்லை என்றால், மக்களுடைய எண்ணங்கள் அல்லது அவர்களுடைய செயற்பாடுகள் வித்தியாசமாக இருக்கும் என்றொரு செய்தியை மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கின்றார்கள்.

இதுவொருஎச்சரிக்கையான செய்தியாகத் தமிழ்க் கட்சிகள் பார்க்க வேண்டும். ஆகவே தமிழ்த் தேசியக் கட்சிகள் இதை உணர்ந்து கொள்ள வேண்டும். ஏனென்றால் இந்த விடயத்தில் நாங்கள் அக்கறையில்லாமல், எங்களுக்குக் கிடைத்த சபைகளை நாங்கள் மட்டுமே ஒற்றுமையாக ஆளவேண்டும்.

எங்களுக்கு கிடைத்த அந்தச்சந்தர்ப்பத்தைப்பயன்படுத்தி ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும். இவ்வாறான நிலையிலும் நாங்கள் ஒற்றுமைப்படாது பிரிந்து நின்றால் எதிர்காலத்தில் மக்களால் நாங்கள் தண்டிக்கப்படும் நிலைக்கு ஆளாவோம். – என்றார்.(ஐ – 7)

## காணாமற்போன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி கப்பட்ட எங்கள் உறவுகள் எமக்கு வேண்டும் என்று வலியுறுத்தி நேற்று வவுனியாவில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

வவுனியாவில் 355ஆவது நாளாகப் போராட்டம் மேற்கொண்டுவரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நேற்று இந்தப்போராட்டத்தில்ஈடுபட்டனர்.

வவுனியா, ஏ – 9 வீதியில் வீதி அபிவிருத்தி அதிகார சபை முன்பாக சுழற்சி முறையில் கடந்த வருடம் சிவராத்திரி தினத்தன்று ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் 355 ஆவது நாளை அடைந்துள்ளது.

போராட்டக் களத்தில் ஒன்றிணைந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், தமது உறவுகளை மீட்டுதருமாறும், தமது வரையில்தமதுபோராட்டத்தைத் தொடரவுள்ளதாகவும் கூறினர். (ஐ – 100)

## தேர்தலில் ஏற்பட்ட திடீர் மாற்றம்; பிரித்தானியா செல்கிறார் சந்திரிகா!

கொழும்பு, பெப். 14

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க அவசரமாக பிரித்தானியா நோக்கிப் பயணமாகியுள்ளார்.

கடந்த வாரம் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் தனது அதிகாரமிக்க அத்தனகலை பிரதேசத்தில் படுதோல்வி அடைந்துள்ளார்.



இதன் காரணமாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் கூட்டணிக்குக்கிடைத்த பெரும் தோல்வியினால் மனவிரக்தியடைந்த சந்திரிகா, பிரித்தானியா நோக்கிப் பயணமாகி உள்ளார் என கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அத்தனகலையின் அதிகாரம் மஹிந்த தலைமையிலான ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவினால் இம் முறை உறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்தனகலை பிரதேச சபையின் 45.91 வீத வெற்றியை பொதுஜன பெரமுன பெற்றுக் கொண்டுள்ளது. இரண்டாவது இடத்தில் 24.37 வீத வெற்றியை ஐக்கிய தேசியக் கட்சி பெற்றுள்ளது.

இந்த நிலையில் முன்னாள் ஜனாதிபதி, தனது மகனான விமுக்தி குமாரதுங்கவை அரசியலுக்கு கொண்டுவரும் முயற்சியை கைவிட்டுள்ளார் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

அத்துடன், அவர் பிரித்தானியாவில் நிரந்தரமாக குடியேறுவதற்கும் வாய்ப்புகள் உள்ளனஎன்றும் அந்த ஊடகம் சுட்டிக் காட்டியுள்ளது.

தென்னிலங்கையில் மஹிந்த தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அபார வெற்றியை பதிவு செய்துள்ள நிலையில், அரசியல் மட்டத்தில் நிச்சயமற்ற நிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ்த் தலைமைகளுக்கு மக்கள் ஒரு செய்தியை சொல்லியிருக்கின்றனர்!

வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ்த் தலைமைகளுக்கு மக்கள் ஒரு செய்தியை சொல்லியிருக்கின்றனர் என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். வியாழேந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

மட்டக்களப்பு - ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலயத்தின் வருடாந்த உடல் திறனாய்வு இல்ல விளையாட்டுப்போட்டி நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ்த் தலைமைகளுக்கும் இந்த நாட்டின் ஜனாதிபதி, பிரதமருக்கும் மக்கள் ஒரு செய்தியை சொல்லியிருக்கின்றார்கள்.

அதனை ஒவ்வொரு கட்சியும் சரியாக மீள்பரிசீலனை செய்யவேண்டும். கிழக்கிலிருக்கின்ற தமிழ்க் கட்சிகள் கலந்து பேசி ஒரு நிலைப்பாட்டுக்கு வர வேண்டும்.

இல்லாவிட்டால் வரவிருக்கின்ற கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் நாங்கள் பெரிய பின்னடைவைச் சந்திக்க வேண்டி ஏற்படும்.

இந்த உள்ளூராட்சித் தேர்தலில் சில பின்னடைவுகளை சந்தித்தால் பரவாயில்லை. கிழக்கு மாகாணத்தின் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு கிழக்கு மாகாண மக்களின் இருப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு மக்கள் நலனை மையப்படுத்தி கட்சி பேதங்களுக்கு அப்பால் இங்கிருக்கின்ற தமிழ்த் தலைமைகள் கலந்து பேச வேண்டும்.



வியாழேந்திரன் எம்.பி. கூறுகிறார்

எமக்கு அரசியல் மற்றும் கட்சி என்பதற்கு அப்பால் எங்கள் மக்களும் மக்கள் சார்ந்த இருப்பும் முக்கியமான தாகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இவ்விடயத்தில் மிகவும் கவனமாக இருக்கின்றது எனத் தெரிவித்துள்ளார்.

## பிரதமர் ரணிலை பதவி விலகுமாறு ஜனாதிபதி கூறியிருந்தால் சரியானதே!



டிலான் கூறுகிறார்

கொழும்பு, பெப். 14

பிரதமர் பதவியிலிருந்து விலகுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்கவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார் என செய்திகள் வெளியாகியுள்ளன. ஜனாதிபதி அவ்வாறானதொரு கோரிக்கையை முன்வைத்திருந்தால், அது சரியானதே என அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

## தேர்தலில் வெற்றி பெற்ற ஆதிவாசிப் பெண்மணி



கொழும்பு, பெப். 14

இலங்கை அரசியல் வரலாற்றிலும், ஆதிவாசிகளின் வரலாற்றிலும் ஷிலோமாலா என்றபெண் புதிய பக்கத்தை ஆரம்பித்து வைத்திருக்கின்றார்.

அம்பாறை மாவட்டம் தெஹியத்தகண்டிய - ஹேனானிகல வடக்கைச் சேர்ந்த 37 வயதுடைய டபிள்யூ.எம். ஷிலோமாலா, ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன கட்சியில் கடந்த உள்ளூராட்சிசபைத் தேர்தலில் போட்டியிட்டு 1369 வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றிருக்கின்றார்.

இலங்கையில் வாழ்கின்ற ஆசிவாசிகளின் 19ஆவதுபரம்பரைத்தலைவரான ஊருவரிகயேவன்னில எத்தோ, தங்களது இனத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வெற்றி பெற்றிருக்கின்றமை மிகுந்த மகிழ்ச்சியைத்தருகிறது என கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

இதுவரைக்காலமும் ஆதிவாசிகள் எதிர்கொள்கின்ற பல பிரச்சினைகளுக்குக் தீர்வு கிடைக்கவில்லை. அவற்றை வேறு கட்சியினரை நாடிச் சென்று பேச்சு நடத்தியும் இது வரை தீர்க்கப்படாத பல பிரச்சினைகள் இன்றும் காணப்படுகின்றன. அந்த வகையில் கிடைத்திருக்கின்ற இந்தச் சந்தர்ப்பத்தை சரிவரப் பயன்படுத்துவோம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதேவளை வெற்றி பெற்ற வேட்பாளரான ஷிலோமாலா தனது வெற்றி தொடர்பில் கருத்து தெரிவிக்கையில்–

தம்மை பிரதிநிதித்துவப்படுத்தும் ஆதிவாசியினர் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதே பிரதான இலக்கு என்று குறிப்பிட்டுள்ளார்.

இம்முறை நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பெண்களுக்கான பிரதிநிதித்துவம் 25 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து அதிகளவான பெண்கள் போட்டியிட்டு முதலாவது உள்ளூராட்சி சபைத் தேர்தல் இது வாகக் கருதப்படுகிறது. (கு)

# அமைச்சர் ரிஷாத்தின் கட்சிக்கு 150 பிரதேச சபை உறுப்பினர்கள்!

கொழும்பு, பெப். 14

அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் 15 மாவட்டங்களில் போட்டியிட்டு சுமார் 150 இற்கு மேற்பட்ட உறுப்பினர்களைப் பெற்றுக் கொண்டுள்ளது என அந்தக் கட்சி வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, புத்தளம், அனுராதபுரம், மட்டக்களப்பு, கொழும்பு ஆகிய 08 மாவட்டங்களில் ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து அந்தக் கட்சி யானைச் சின்னத்தில் கள மிறங்கியது.

மன்னார் மாவட்டத்தின் உள்ளூராட்சி சபைகளில் 34 ஆசனங்களையும், வவுனியா மாவட்டத்தில் 12 ஆசனங்களையும், முல்லைத்



தீவு மாவட்டத்தில் 12 ஆசனங்களையும், யாழ். மாவட்டத்தில் 01 ஆசனத்தையும், கிளிநொச்சி மாவட்டத்தில் 02 ஆசனங்களையும் பெற்றுக்கொண்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 14 ஆசனங்களையும், கொழும்பு மாவட்டத்தில் 02 ஆசனங்களையும், புத்தளம் மாவட்டத்தில் 08 ஆசனங்களையும், அனுராதபுரம் மாவட்டத்தில் 04 ஆசனங்களையும் பெற்றுக்கொண்டது.

மன்னார் மாவட்டத்தில் முசலி பிரதேச சபையையும், மாந்தை மேற்கு பிரதேச சபையையும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தனதாக்கிக் கொண்டுள்ளது.

அத்துடன், மன்னார் பிரதேச சபையும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் வசமாகிறது. நானாட்டான் பிரதேச சபையில் ஏனைய கட்சிகளுடன் இணைந்து ஆட்சியமைக்கக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்று அந்தக் கட்சி வெளியிட்டுள்ள தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இருளில் மூழ்கும் அபாயத்தில் இலங்கை!

கொழும்பு, பெப். 14

இலங்கையில் மின் விநியோக நடவடிக்கைகளில் பாதிப்பு ஏற்படலாம் துறைசார் பொறியியலாளர்கள் எச்சரித்துள்ளனர்.

நாட்டில் நிலவும் வறட்சியான கால நிலை காரணமாக நீரில் முன்னெடுக்கப்படும் மின்சார உற்பத்தி நாளுக்கு நாள் வீழ்ச்சியடைந்து வருகின்றது.

ஏதாவது, ஒரு கட்டத்தில் மின் ஆலை மின்சாரம் தயாரிப்பதனை நிறுத்தினால் பெரும் நெருக்கடிக்கு முகம் கொடுக்க நேரிடும் என இலங்கை மின்சார சபைப் பொறியியலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டில் அவசர தேவையின்போது பயன்படுத்துவதற்கு மேலதிக மின்சாரம் தயாரிக்கும் இடம் இல்லாமல் உள்ளது. இதற்குத் தேவையான திட்டத்தை சமர்ப்பித்த போதிலும் அதனை செயற்படுத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்வதில்லை என அந்தச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

வறட்சியான காலநிலை தொடர்ந்து காணப்பட்டால் மார்ச் மாத இறுதியில் இருந்து மின்சார நெருக்கடி ஏற்படக் கூடும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

மின்சார சபைப் பொறியியலாளர்கள் சமர்ப்பித்துள்ள 2018 - 2037 திட்டத்தை செயற்படுத்துமாறு கோரி பொறியியலாளர்கள் தொழில் நுட்ப கூட்டங்களில் கலந்துகொள்வதில்லை எனவும், இதனால் அவசர மின்சாரக் கொள்வனவு செய்வதற்கான வாய்ப்புகள் இல்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் எதிர்வரும் காலங்களில் ஏற்படவுள்ள மின்சார நெருக்கடியைக் கருத்திற்கொண்டு அதிகாரிகள் உடனடியாக பல்வேறு வேலைத்திட்டங்களைச் செயற்படுத்த வேண்டும் என அந்த சங்க உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளனர்.



# மஹிந்த என்ன சொன்னாலும் செய்வார்களாம் நாட்டு மக்கள்

## கூறுகின்றார் பந்துல எம்.பி.

கொழும்பு, பெப்.14

கடந்த மூன்று வருடங்களாக நாட்டைச் சீரழித்த ஐக்கிய தேசியக் கட்சிக்கு மீண்டும் அரசை வழங்கினால் நாடு குட்டிச்சுவராகப் போவது உறுதி என்று ஒன்றிணைந்த எதிரணி தெரிவித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த, தென்னை மட்டைக்கு வாக்களிக்குமாறு கூறியிருந்தால், அதற்கும் வாக்களிப்பதற்கு மக்கள் தயாராகவே இருந்தனர் என எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

ஒன்றிணைந்த எதிரணியின் ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல்லாண்டுகள் பழைமை வாய்ந்த கட்சிகளைத் தோற்கடித்து உருவாக்கப்பட்டு குறுகிய காலத்தைக் கொண்ட மொட்டுக் கட்சி அரசியல் களத்தில் பெரும் பூகம்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ தென்னை மட்டைக்கு வாக்களிக்கு மாறு கூறியிருந்தால், அதற்கும் வாக்களிப்பதற்குத் தயாராகவே மக்கள் இருந்தார்கள். மஹரகம தொகுதியில் மொட்டு இல்லாததால் மோட்டார் சைக்கிளுக்கு வாக்களிக்குமாறு மஹிந்த கூறியதால் அதற்கு வாக்களித்தார்கள். அதேபோலத்தான் வேறு சில இடங்களில் பாம்புச் சின்னத்துக்கு வாக்களிக்குமாறு கோரப்பட்டதால் அதற்கும் வாக்களித்தார்கள்.

இலங்கை வரலாற்றில் 70,65,50 ஆண்டுகள் பழைமைவாய்ந்த அரசியற் கட்சிகளைத் தோற்கடித்து ஒரு வருடமும் 3 மாதங்களையும் கொண்ட மொட்டுக் கட்சி கட்சிக் கிளைகள், அமைப்பாளர்கள்கூட இன்றி மக்களின் ஆணையைப் பெற்று, அரசியல் உலகில் பூகம்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி பொருளாதாரத்தைச் சீரழித்து விட்டதாகவும், பெப்ரவரி 10ஆம் திகதி நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதாகவும் ஜனாதிபதி தெரிவித்திருந்தார். 3 வருடமாகச் சீரழித்த பொருளாதாரத்தை அவரால் மீண்டும் கட்டியெழுப்ப முடியுமா? இப்போது ஐக்கிய தேசியக் கட்சி தனிவழியில் செல்வதாகக் கூறுகிறது. அப்படியாயின் கலாசாரம் தொட்டுச் சமூகம் வரை சீரழிவுகளே ஏற்படும்.

பெண்களுக்கு மதுக்கடையில் தொழில், ஓரினச் சேர்க்கையாளர்களுக்கு சட்ட அங்கீகாரம் போன்றன அமைச்சர் மங்கள சமரவீரவினால் மேற்கொள்ளப்பட்டு விடும். இப்படியான அழிவுக்கு நாடு செல்வதால் உணர்வடைந்த மக்கள், அரசுக்குச் சிவப்பு எச்சரிக்கையைக் கொடுத்து அவர்களைத் தோற்கடித்தனர் – என்றார். (ஐ)















இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.02.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.